www.padippakam.com

Jude

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර්

ஜூன் 13-19,1999

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 313

## சோனியா கொல்லச் சதி

## வடக்கில் காத்திருக்கும் நெருக்கடி



## விஜய் விரும்பிய கஜோல்

## டயனாவின் இறுதி மணித்தியாலங்கள்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மாமனிதர் மண்டேலா

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தென்னாபிரிக்கத் தலைவர்
நெல்சன் மண்டேலா
அதிபர் பதவியில் இருந்து
தானாக ஒய்வு பெறுகிறார்!

அவர் நினைத்திருந்தால்
அதிபர் பதவியிலேயே
ஆயுள் முழுவதும்
இருந்திருக்கலாம்!

மண்டேலா
சாதாரண அரசியல்வாதியல்ல;
போராளி!

அதனால்தான்
எதனையும், எப்போதும்
இழக்கத் தயாரான
மன உறுதி இருக்கிறது!

'இழப்பதற்கு எதுவுமில்லை;
போராடிப் பெறுவதற்கு
புதிய உலகம் இருக்கிறது!'
என்று துணிபவனே போராளி!

ஒடுக்கப்பட்ட மக்களது
ஒரே ஆயுதம்;
போராட்டம் மட்டுமே!

அது தென்னாபிரிக்க
கறுப்பின மக்களாயினும்,
இங்குள்ள தமிழ் பேசும் மக்களாயினும்
பொது ஆயுதம்
போராட்டம்தான்!

போராட்ட வடிவங்கள்
வேண்டுமானால் மாறுபடலாம்!

ஆயுதப் போராட்டம்,
ஆயுதமேந்தாத போராட்டம்
என்று இரண்டு வடிவங்கள்
எப்போதும் உள்ளன!

இதில் எந்த வடிவம்
பிரதான பாத்திரம் வகிப்பது
என்பதை
அந்தந்த சூழ்நிலைகளே
தீர்மானம் செய்கின்றன!

ஆயுதப் போராட்டம்
பிரதான வடிவமாக இருக்கும்
காலகட்டத்தில்கூட,
ஆயுதமேந்தாத மக்கள்
போராட்டங்களும் நடக்கலாம்!

இந்த இரண்டு
போராட்ட வடிவங்களையும்
இணைத்து முன்னெடுப்பதிலேயே
ஒடுக்கப்படும் மக்களது தலைமை
தனது திறனை காண்பிக்க வேண்டும்!

தெ. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்
இந்த இரண்டு வடிவங்களையும்
கச்சிதமாக முன்னெடுத்தது!

வெள்ளையின அரசை
தோற்கடிக்க
ஆயுதப் போராட்டமே
பிரதான வழிமுறையாக இருந்தது!

அதே சமயம்
ஆயுதமேந்தாத மக்கள்
எழுச்சிகளும்
நடைபெற்று வந்தன!

மாணவர்கள் போராடினர்.
தொழிலாளர்கள் போராடினர்.
பெண்கள் போராடினர்.

இந்த மகத்தான நிகழ்வுகளுக்கு
தென்னாபிரிக்க காங்கிரசும்
நெல்சன் மண்டேலாவும்
தலைமை வழங்கினார்கள்!

போராட்டங்களிலும்
தியாகத்திலும் ஊறிய
தலைவர் என்பதால்தான்
பதவியைத் துச்சமாகத்
தூக்கியெறிய முடிந்துள்ளது!

பதவியை இராஜினாமா
செய்வதாக நாடகமாடி,
அனுதாபம் திரட்டும்
அரசியலும் நாமறிந்ததே!

இந்தியாவில் சோனியா
சம்பத்தில் நடத்தியதும்
அத்தகைய நாடகமே!

இது சாக்கடை
அரசியலின் அடையாளம்!

மக்களையும்
கட்சித் தொண்டர்களையும்
முட்டாள்களாக்கி
அவர்களது முதுகில்
சவாரி செய்யும் தந்திரம்!

ஆனால், மாமனிதர்
மண்டேலா செய்திருப்பதோ
மக்களையும், கட்சியையும்
மதிக்கத் தெரிந்த
தலைவரின் தியாகம்!

பிரதமர் பதவி
கிட்டாது என்றால்,
கட்சித் தலைமையும் வேண்டாம்
என்று வெளியேறியவர்
சோனியா காந்தி!

அதிபர் பதவியை
உதறிப் போட்டுவிட்டு,
கட்சி தரும் பணிகளை
செய்ய தயாராக இருப்பதாக
அறிவித்திருப்பவர் மண்டேலா!

சோனியா குதித்தது
சாக்கடை அரசியலில்!

மண்டேலா குதித்தது
சத்தான அரசியலில்!

பதவிகளுக்காக
கொள்கைகளையெல்லாம்
சட்டைகள் மாற்றுவதுபோல
மாற்றிக் கொண்டே
இருப்பது தற்கால அரசியல்!

பதவியையே
சட்டையாகக் கருதி
கழற்றி வீசியிருப்பது
மண்டேலாவின் அரசியல்!

தான் ஒரு மாமனிதர் என்பதை
நிரூபித்துவிட்டார்
நெல்சன் மண்டேலா!

அந்த மாமனிதரை
முரசு—தன்
வாசகநெஞ்சங்கள் சார்பாக
கௌரவிக்கிறது!


போராளிகள் ஒய்வதில்லை!
மண்டேலாவின் பணி
முழு மனித குலத்திற்கும்
கிட்ட வேண்டும்!

உலக சமாதானத்திற்காக
உழைக்கத் தாயராக இருப்பதாகவும்,
மத்தியஸ்தராக செயற்படத்
தயாராக இருப்பதாகவும்
மண்டேலா கூறியுள்ளார்!

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்
நாடி நிற்கும் தமிழ் பேசும் தரப்பு
மண்டேலாவின் மத்தியஸ்தத்தை
பெறுவதற்கு முயல வேண்டும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்



## உண்மைச் சின்னம்

நாம் பண்ணுகிற தப்பு நமக்குத் தெரியும். எப்படித் தெரியும்? கெட்ட குணம் உள்ளவன் என்று நம்மைப் பலபேர் வைதுகொண்டே இருப்பார்கள். அப்போது யார் ஏசுகிறார்களோ அவர்களிடம் நமக்கு கோபம் வரும். ஆனால் நாம் உள்ளுக்குள் எவ்வளவு அக்கிரமம் பண்ணுகிறோம் என்பது நம்மில் ஒருவருக்காவது தெரியாது. தெரிந்தால் இன்னும் அதிகமாக அவர்கள் நம்மை வைய வேண்டிவரும்.

உண்மையாகப் பார்த்தால் நாம் பண்ணாத தப்பைத்தான் நாம் பண்ணியிருப்பதாக எண்ணிக்கொண்டு ஏசிக்கொண்டு இருக்கிறார்கள். நாம் பண்ணுகிற தப்பு அவர்களுக்குத் தெரியாது என்பது நமக்குத் தெரியும். ஆகையால் நாமேதான் நம்மை ஓயாமல் வைது கொண்டிருக்க வேண்டும். நம்முடைய கெட்ட குணம் எவ்வளவு? நல்ல குணம் எவ்வளவு என்று பிரித்துப்பார்த்தால், நம்முடைய நல்ல குணத்தைவிட கெட்டகுணம்தான் மலையாக நிற்கும். எந்தப் பேச்சிலும் நம்முடைய நல்ல குணத்தை மாத்திரம் எப்படியாவது சொல்லாதது போலப் பிறருக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறோம். ஆனால் நம்முடைய தீய குணத்தை பிறருக்குத் தெரியாமல் மூடி மறைக்க முயற்சிக்கிறோம்.

மற்றவர்களிடம் நம் பலவீனங்களை மறைத்தாலும் நமக்கு நாமே மறைத்துக்கொள்ள முடியாது என்பதும் நமக்குத் தெரியும். சில சமயங்களில் நல்ல எண்ணம் உண்டாகும்போது "நாம் இப்படி கெட்ட காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிறோமே! என்று நினைவு வரும்போதும் வேதனையும் கூட வருகிறது! இவ்வளவு கெட்ட காரியங்களைச் செய்ய இந்த ஜென்மம் நமக்கு வேண்டுமா? என எண்ணத் தோன்றுகிறது. தப்பை நினைத்துக்கொண்டு அழுவதில் பிரயோஜனம் இல்லை. இவ்வளவு தவறுகள் செய்த எனக்கு நல்ல புத்தியைக் கொடுக்கமாட்டாயா? இனிமேலும் இப்படியான தவறுகளைச் செய்யாமல் இருக்கக்கூடிய மன உறுதியை சித்த சக்தியை எனக்குக் கொடுக்க மாட்டாயா? என்று கடவுளை மனம் கசிந்து பிரார்த்தித்துக்கொள்ள வேண்டியது நம் கடமை.

கொஸ்லந்தை, எஸ்.என். ராஜரட்ணம்.

## ஆன்மீகம்



## வர்க்கத்தினரை அழித்தொழித்த அல்லாஹ்

ஒரு நாள் இருள் சூழ்ந்த மேகக் கூட்டங்களைக் கண்ட ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் திடுக்கிட்டு முகவாட்டமடைந்து விட்டார்கள்.

இதனை அவதானித்த ஆயிஷா (ரலி) அவர்கள் ஏந்தல் நபியைப் பார்த்து "கருமேகம் சூழ்ந்து விட்டால் மழைதானே பெய்யும் ஏன் இவ்வாறு முகவாட்டமடைகின்றீர்கள்?" என வினவினார்.

அதற்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் "ஆயிஷாவே இந்த கருமேகத்தினால் மழையே பெய்யுமென எவ்வாறு நாம் நம்ப முடியும்? அதனை அல்லாஹ் ஒருவனே அறிந்தவனாக உள்ளான்."

அன்றொரு நாள் 'ஆத்' என்ற மனித வர்க்கத்தினர் இருள் சூழ்ந்த கரு மேகக் கூட்டங்களைப் பார்த்து வரண்டு கிடக்கும் நீரோடைகளுக்கு இன்று மழை நீர் கிடைக்கப் போகிறது என்றெண்ணி அனைவரும் ஆனந்தமடைந்து கூத்தாடினர்.

ஆனால் அல்லாஹ் அந்தக் கருமேகங்களை பெரும் சூறாவளிக் காற்றாக மாற்றி, "எல்லாமே இயற்கை; அல்லாஹ்வே இல்லை" என்ற 'ஆத்' வர்க்கத்தினரை அக்காற்றின் மூலம் அழித்தொழித்து விட்டான். அந்த ஞாபகம் இப்போது எனக்கு வரவே திடுக்கிட்டு முகவாட்டமடைந்தேன் ஆயிஷாவே!" என்றார்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-5.

## கவிதைப் போட்டி இல. 310



### பரிசுக்குரிய கவிதை

### அகதிக்கோப்பை

கிரிக்கெட் விளையாட்டில்
கிடைத்தாலும் கிடைக்கும்
உலகக் கோப்பை!
சிரித்தாலும், அழுதாலும்-எமக்கு
உள்நாட்டில் இருக்குது
அகதிக் கோப்பை!

கவிஞர் 'திக்கவயல்', அம்பாறை.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### நாங்களே

அடிபடும்
பந்தாக மட்டுமா?
அடிக்கும்
மட்டையாகவும்
நாங்களே!

அ.அச்சுதன்-சேனையூர், மூதூர்.

### சமத்துவம்

நாங்களும்
இந்நாட்டு
மக்கள் தான்-
கிரிக்கெட்டை
ரசிக்கும் வரை!

திருமதி புவனேஸ்வரி, பன்னீர்செல்வம்-பசறை.

### திண்டாட்டம்

உலகெல்லாம்
கொண்டாட்டம்-
இங்கிலாந்து கிரிக்கெட்டால்!
இங்கு
ஊரெல்லாம்
திண்டாட்டம்-
பறந்து வரும் ரொக்கட்டால்!

எஸ்.ரெட்ணராஜ்-ஆரையம்பதி.

### போராடு!

போராடு போராடு
எதிர்த்து வரும்
பந்தோடு போராடு!
போராடினால்தான்
பொன்னான எதிர்காலம்
கண்முன்னால் மலரும்!

அ.யாழினி-மட்டக்களப்பு.

### காட்சி

அடிக்கடி அரங்கேற்றும்
அராஜகங்களை
மூடி மறைக்க
முறையான காட்சி!!

செ.சுகுமார்-மாங்கேணி, வாகரை.

### பொய்ப் பொதி

ஓங்கி அடி
பொய்யான பொதி
உடைந்து
போகட்டும்!

வி.கிருபைமலர்-கல்லடி, மட்டக்களப்பு.

### தொற்று நோய்

வெடியென்றும் அஞ்சாமல்
வெயிலென்றும் பாராமல்
தெருவெங்கும் விரைவாகப்
பரவியுள்ள வைரசு!!

கிரிசாந்தி, சந்திரகலா-புதிய வன்னியனார் வீதி, மட்டக்களப்பு.

### பிடித்ததும், பிடியாததும்

அரசுக்குப் பிடித்த தமிழன்
மு. முரளீதரன்....?
பிடியாத தமிழன்
வே.பிரபாகரன்.....!
பந்தும் மட்டையும்
சொல்வது இதுவே!

திக்கபத்தன்-அல்வாய் மேற்கு, அல்வாய்.

### வாக்குறுதி

விக்கெட்டைச் சாய்க்காத பந்து,
விரைந்து விடுபட்டு,
மட்டையில் மோதி
பொய் வாக்குறுதிபோல்,
காற்றில் பறக்குது பார்!

சி.ஞானராஜா-'மனோரகம்', வாழைச்சேனை.

### பந்தல்ல


வீசுவது பந்தல்ல....
தமிழின உரிமை!
ஓங்குவது துடுப்பல்ல....
பேரின வாதம்.

எஸ்.

முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

- ஆர்.ஜெயக்குமார், அமெரிக்கா.
- லி.குகநாதன், ஜப்பான்.
- செ.மரியதாஸ், சவுதி அரேபியா.
- மு.ரவி, கொழும்பு-07.
- எம்.அரியமலா, தம்பிலுவில்-02.
- ப.தமிழினி, புத்தளம்.
- ம.ஜெயகாந், யாழ்ப்பாணம்.
- ஜெ.ரூபன், புதுக்குடியிருப்பு.
- கா.தண்மதி, முல்லைத்தீவு.
- சுபாஷினி திலகரட்ணம், மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல.313



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 19.06.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.313
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## வாசக(ர்)சாலை



### நோகாத குத்து.....

முரசே!

காதிலை பூ கந்தசாமியாரின் கடிதக் கிண்டல் அபாரம். 'டமில்' கட்சிகள் புலிகளை எதிர்க்கும் உண்மையான காரணத்தை தனது பாணியில் புரியவைத்தார். புலிகளை எதிர்ப்பதாக காட்டிவிட்டுத் தான் அரசையும் நோகாமல் குத்துவார்கள். இது பழகிப்போன திருவிளையாடல்தான். எமக்கு சலித்து விட்டது.


ஆர்.பத்மநாதன், கல்லடி.

### ஈடில்லா மகிழ்ச்சி

'கோகிலா என்ன செய்துவிட்டாள்' அருமையான தொடர். ஜெயகாந்தன் நாவல்களை முன்னர் ஒரே மூச்சில் படித்து முடிப்பவள் நான். அனைத்தையும் படிக்க கிடையாதது பெரும் மனக்குறையே. முரசில் ஜெயகாந்தன் எழுத்து இடம்பெறுவது ஈடில்லா மகிழ்ச்சி.

எம்.கோகிலவாணி, கொழும்பு-09.

### ஐக்கியம் முக்கியமா?



தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டால் நாசம் நமக்கே. பிழையான நிலைப்பாடுகளுடன் உள்ள கட்சிகள் ஒன்றுபட்டால், அந்த நிலைப்பாடுகள்தானே மேலும் பலம்பெறும்? இதனைக் கணக்கில் கொள்ளாது, கீறல் விழுந்த ரெக்கோட் போன்று 'ஐக்கியமே முக்கியம்' என்று எழுதிக் கொண்டிருக்கிறார்கள் சில விமர்சகர்கள்.

ஆர்.தினேஷ்குமார், வாழைச்சேனை.

### நீதி எங்கே?

குடாநாட்டுக்கு நிதி ஒதுக்கிவிட்டு பின்னர் குடாநாட்டையே ஒதுக்கிவிடுவது வழமைதான். இது எதிர்பார்த்ததே. அது மட்டுமல்ல இந்துக் கோயில்களை திருத்த ஜனாதிபதி நிதி ஒதுக்கியதாக பெரிதாக அறிவிக்கப்பட்டு 13 மாதங்கள் சென்றுவிட்டன. அந்த நிதிக்கு என்ன நடந்தது? 'பாரதிய ஜனதா அரசு பதவிக்கு வந்துள்ளதால் நடத்தப்படும் நாடகம்' என்று முரசு அன்று கூறியதை நாம் மறக்கவில்லை.

ஜெ.விஜயகுமார், சுன்னாகம்.

### வாழ்க்கைக்கு ஏற்றது

'கையில் சிக்கிய மின்னல்' பொழுது போக்குக்கு உகந்த தொடர்தான். ஆனால் ஜெயகாந்தன் அவர்கள் தருகின்ற தொடர் வாழ்க்கைக்குத் தேவையான கதை. இவ்வாறான தொடர்களைத் தேடித்தரும் முரசுக்கு பாராட்டு. முன்பு பிரபஞ்சன் அவர்களது கதையையும் நாம் இரசித்து, ஆழ்ந்து வாசித்தோம்.

வி.எஸ்.மிதுளா, மட்டக்களப்பு.

### மாணவர் எழுச்சி

யாழ் குடாநாட்டில் மாணவர்கள் யார் தூண்டுதலும் இன்றி நாமாக பகிஷ்கரிப்பு நடத்தினோம். பாடசாலைக்கு சென்றவர்களை யாரும் தடுக்கவும் இல்லை. மிரட்டவும் இல்லை. அப்படி இருந்தும் யாரும் பாடசாலைக்கு செல்லவில்லை. இது தன்னியல்பாக நடைபெற்ற எழுச்சியாகும். இதற்கு முரசு கொடுத்த முக்கியத்துவம் வரவேற்கத்தக்கது.

கா.கேசவன், யாழ்ப்பாணம்.

### கண்டிப்பதில்லை

புலிகளுக்கு எதிராகக் கண்டனக் கணை தொடுப்பதில் தமிழ்க் கட்சிகள் முன்னிற்கின்றன. அதேபோல அரசும், படைகளும் செய்துவரும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து குரல் கொடுக்க ஏன் தயங்குகின்றன? அரசைத் திருப்தி செய்யத்தான் இவை கண்டனம் செய்கின்றன. நாம் முட்டாள்களல்ல.

பி.அரவிந்தன், வவுனியா.

### தீர்வு?

இந்த ஆண்டுக்குள் இனப் பிரச்சனை தீரும் என்று அம்மையார் கூறியதை நம்பும் அளவுக்கும், அதனை பத்திரிகைகளுக்கு கூறுமளவுக்கும் தமிழ்க் குழுக்கள் சுற்றுக் குட்டிகளாக இருப்பது வேதனை தருகிறது. இப்படிப்பட்ட 'அரசியல் ஞானிகளை' எண்ணி புல்லரிக்க வேண்டியதுதான்.

ஏ.ரமணன், வவுனியா.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.



படிப்பகம்

# புலிகள் இறுதி எச்சரிக்கை!
# கடும் தாக்குதலுக்கு ஆயத்தம்

**ம**ட்டக்களப்பில் கரும்புலித் தாக்குதலால் ராசிக் கொல்லப்பட்டதை அடுத்து புலிகள் விடுத்துள்ள அறிவித்தல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் அக் கட்சிகளில் இருந்து விலகி தனிப்பட்ட வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும். விரும்பினால் தம்மோடு இணைந்து பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடலாம் என்றும் புலிகள் தமது அறிவித்தலில் தெரிவித்துள்ளனர்.

'புலிகளின் குரல்' வானொலியில் கடந்த ஒருவாரகாலமாக காலையும், இரவும் இந்த அறிவித்தல் ஒலிபரப்பாகி வருகிறது. விசேட அறிவித்தலாகவே ஒலிபரப்பி வருகின்றனர்.

கடந்த காலத்திலும் இவ்வாறு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன. ஆனால் அவை பிரசுரங்களாக மட்டுமே இருந்தன. இம்முறைதான் மீண்டும் மீண்டும் விசேட அறிவித்தலாக வானொலியில் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

அரசுடனும், படைகளுடனும் இணைந்து செயற்படும் கட்சிகள்மீது பாரிய தாக்குதல்களை புலிகள் தீவிரப்படுத்த உள்ளனர். அப்போது ஏற்படும் உயிர்ப்பலிகள் தொடர்பாக மக்களிடையே அதிருப்தி ஏற்படாதிருக்கவே போதிய முன்னறிவிப்பு வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களைப் போல் அல்லாது, இது இறுதி எச்சரிக்கையாகவே விடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

இதுவரை தமிழ்க் கட்சித் தலைமைகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள்மீதே புலிகள் குறிவைத்தனர். இந்த அறிவித்தலின் பின்னர் சாதாரண உறுப்பினர்களுக்கும் குறிவைக்கப்பட் உள்ளதாம்.

இந்த அறிவித்தலின் பின்னர் பரவலான ரீதியில் தமிழ்க் கட்சிகள் தாக்குதலுக்கு உள்ளாகலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

### சுவரொட்டிகள்

'தேசத்துரோக செயற்பாடுகளை தொடர்ந்து அனுமதிக்க முடியாது' என்ற தலைப்பில் புலிகளின் குரல் விசேட அறிவித்தல் வெளியிட்டு வரும் அதேநேரம், யாழ் குடாநாட்டிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

படையினரின் பலத்த கண்காணிப்பையும் மீறி அச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

சுவரொட்டிகளில் பின்வரும் வாசகங்கள் காணப்படுகின்றன: "தேசத் துரோகம் தொடர்வதை அனுமதியோம்!"

'ஆசன ஆசையில் தமிழர் சாசனத்தை விற்கும் தமிழ்ழ தேசத் துரோகிகளுக்கு தமிழீழத்தில் இடம் கொடுப்பதா?' போன்ற வாசகங்கள் காணப்பட்டன.

### மட்டக்களப்பில் அறிவிப்பு

மட்டக்களப்பில் ராசிக்மீதான தாக்குதல் தொடர்பாக புலிகள் பிரசுரம் ஒன்றை விடுத்துள்ளனர்;

"இங்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் அறப்போரைப் புரிந்து கொள்ளும்படி பலமுறை கூறியிருந்தோம்.

நிகழ்ந்து கொண்டிருக்கும் இப் போரிலே தர்மமும், சத்தியமும் எமது மக்களின் பக்கமே உள்ளது என்பதை பலமுறை தெளிவு படுத்தியிருந்தோம்.

ஆயினும் நீங்கள் அரச படையின் செயற்பாட்டில் மயங்கியிருந்தீர்கள். அரச படையின் அட்டூழியத்தை மிஞ்சியிருந்தீர்கள்.

எம் மக்களைத் துன்பப்படுத்தினீர்கள். விடுதலைக்கு ஆதரவு நல்கியவர்களை காட்டிக் கொடுத்தீர்கள். ஒரு சில போராளிகளைக் கொன்றுவிட்டு எக்காளமிட்டு மகிழ்ந்தீர்கள். இது நிலைத்ததா என்று சிந்தித்துப் பாருங்கள்.

உங்களது துரோகச் செயலுக்காக உங்களைத் தேடி சாவு ஏதோ ஒரு வடிவில் வந்தே தீரும் என்பதை ராசிக்கின் மரணம் திட்டவட்டமாக எடுத்துக் காட்டுகிறது." என்று புலிகள் தமது பிரசுரத்தில் தெரிவித்துள்ளனர். இப் பிரசுரம் மட்டக்களப்பில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

## அவசரகாலச் சட்டத்திற்கு எதிர்ப்பு
## தொண்டாவிடம் கோரிக்கை விடுப்பு

**சி**ங்கள வீரவிதான இயக்கத்துக்கு தொண்டமானும், இ.தொ.காவும் கடும் எதிர்ப்புக் காட்டியுள்ளனர். ஆயினும் இந்த இயக்கத்தின் பின்னாலுள்ள அமைச்சர் பற்றி எதுவும் கூறாது தவிர்த்து வருகின்றனர். அவரைப் பற்றி பிரஸ்தாபித்தால் அரசில் இருந்து வெளியேற வேண்டியிருக்கும் என்பதே உண்மையான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இ.தொ.கா. அவசரகாலச் சட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வருகிறது.

மலையகத் தமிழர்கள் உட்பட அனைத்து தமிழ் மக்களும் இச்சட்டத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ் மக்களை கைது செய்யும் அரசும், பொலிசாரும் வீரவிதான போன்ற இயக்கங்களுக்கு எதிராக அதனைப் பயன்படுத்த மறுக்கின்றனர்.

கொழும்பில் இ.தொ.கா. அலுவலகம் முன்பாக ஊர்வலம் சென்றதை அவசரகாலச் சட்டத்தின்கீழ் தடை செய்திருக்க முடியும்.

இ.தொ.கா. அலுவலகத்திற்குள் புகுந்து கொடிகளை கிழிக்கும்வரை பொலிசார் என்ன செய்து கொண்டிருந்தனர்? அவசர காலச் சட்டப்படி அவர்களைக் கைது செய்யத் தவறியது ஏன்?

இவ்வாறான அதிருப்திகள் இ.தொ.கா. வட்டாரத்திலேயே எழுந்துள்ளன. வீரவிதான இயக்கத்தை அவசரகாலச் சட்டத்தின்கீழ் அரசு தடை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அவசரகாலச் சட்டம் தமிழ் மக்களுக்கு எதிரான சட்டம் என்று அறிவித்து இ.தொ.கா. எதிர்த்து வாக்களிக்க வேண்டும்" என்று அமைச்சர் தொண்டமானிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாம்.

வீரவிதான இயக்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு போராட்டமும் நடத்திக்கொண்டு, அவசரகால சட்டத்தை ஆதரித்தும் வாக்களிப்பது அர்த்தமற்றது என்று இ.தொ.கா. தலைமைப்பீடத்திடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளதாம்.

## தென் மாகாண சபைத் தேர்தல்
## ஜே.வி.பி.க்கு பெரும் ஆதரவு

**தெ**ன் மாகாண சபைத் தேர்தல் பத்தாம் திகதி வியாழக்கிழமை நடைபெறுகிறது.

கடந்த ஐந்து மாகாண சபைத் தேர்தலை விட, இத் தேர்தலில் அதிக வன்முறைகள் இடம்பெறும் என்று தெரிகிறது. வடமேல் மாகாண சபைத் தேர்தல் போன்று இல்லாவிட்டாலும்கூட, பெருமளவு வன்முறைகள் இடம் பெறுவதற்கான நிலமைகள் காணப்படுகின்றன.

பொ.ஜ.முன்னணி இத் தேர்தல் களத்தில் முன்னணியில் நிற்கிறது. ஐ.தே.கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் சூழ்நிலை அறவே கிடையாது. இரண்டு அணிக்கும் ஜே.வி.பி. பலத்த சவாலாக மாறியுள்ளது.

மேல் மாகாண சபை போன்று தென் மாகாண சபையிலும் ஜே.வி.பி. கணிசமான ஆசனங்களைப் பெறவுள்ளது. தென் மாகாண சபையில் ஜே.வி.பி.தான் முக்கிய பாத்திரம் வகிக்கப்போகிறது.

ஜே.வி.பி.யின் உதவியுடன்தான் பொ.ஜ. முன்னணி தென் மாகாணசபை ஆட்சியை நடத்த வேண்டியிருக்கும்.

ஜே.வி.பி.யின் பெரும் எழுச்சிக்கு தென் மாகாண சபைத் தேர்தலும் உதாரணமாக விளங்கப்போகிறது.

பொ.ஜ.முன்னணி, ஐ.தே.கட்சி என்ற இரண்டு சக்திகள் மட்டுமே 1994 பொதுத் தேர்தலின் பின்னர் இருந்தன. தற்போது பலமான மூன்றாவது சக்தியாக ஜே.வி.பி. உருவாகியுள்ளது.

இனிமேல் இனப்பிரச்சனை உட்பட சகல பிரச்சனைகளிலும் ஜே.வி.பி.யின் முடிவுகள் பிரதான பாத்திரம் வகிக்கப்போகின்றன.

## அலரிமாளிகைக்குப் பாதுகாப்பு
## 3 1/2 கோடியில் சுற்று மதில்

**ஜ**னாதிபதி சந்திரிக்காவின் வாசஸ்தலமான அலரிமாளிகையைச் சுற்றி 3 கோடி 20 இலட்சம் ரூபாய் செலவில் பாதுகாப்பு மதில் ஒன்று கட்டப்படுகிறது. 'லங்கா ட்ரேடிங் அண்ட் கொன்ஸ்ட்றக்சன்ஸ் பிரைவெட் லிமிட்டெட்' என்ற நிறுவனத்திடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக்கருதியே இப்புதிய மதில் கட்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதிக்கான உத்தியோக பூர்வ வாசஸ்தலமான ஜனாதிபதி மாளிகை-சகல வசதிகளையும் கொண்டதாகவும் ஏராளமான பொருட் செலவில் பராமரிக்கப்பட்டும் வருகிறது. ஆனால் இம்மாளிகை சில விசேட வைபவங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மாளிகை முன்னாளில் இராணி மாளிகை என்றழைக்கப்பட்டது. சுதந்திரமடைந்த பின்னர், தேசாதிபதிகளும் ஜனாதிபதிகளும் இராணி மாளிகையையே, தமது வாசஸ்தலமாகக் கொண்டிருந்தனர்.

அலரி மாளிகை பிரதம மந்திரிகளுக்கான உத்தியோக பூர்வமான வாசஸ்தலமாக இருந்து வந்தது.

பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த போதும் அலரி மாளிகையையே தனது இல்லமாகப் பாவித்து வந்தார். கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமரானதும் சில தினங்கள் மட்டுமே இம் மாளிகையில் தங்கியிருந்தார்.

## சிங்களக் குடும்பங்கள் வெளியேற்றம்
## புலிகள் நடத்திய தாக்குதல்

**வ**டக்கு-கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்கும் பிரதேசமான 'மணலாறு' என்றழைக்கப்பட்ட இடத்தை சிங்களத்தில் 'வெலி ஓயா' என்று பெயர் மாற்றி, திட்டமிட்டு ஆயிரக்கணக்கான சிங்கள மக்களை அரசாங்கம் குடியேற்றியது. போதுமான பாதுகாப்பும் வழங்கிவந்தது.

வட-கிழக்கு மாகாணம் தமிழரின் பாரம்பரியத் தாயகம் என்ற கோட்பாட்டை முறியடிக்கவே, இரு பிரதேசங்களுக்கும் எல்லையாக விளங்கிய மணலாறு, வெலி ஓயா என்று பெயர் மாற்றப்பட்டது.

அன்று தொடக்கம் இன்றுவரை இப்பிரதேசத்தில் மோதல்கள் அடிக்கடி நடந்து வந்துள்ளன. கொக்கிளாய் என்ற மீன்பிடிக் கிராமமும் வெலி ஓயாவுக்குள் ஒரு பகுதியாக விளங்குகிறது.

வெலி ஓயாவில் அண்மையில் புலிகளின் தாக்குதலில் 11 குடியேற்றவாசிகள் கொல்லப்பட்டது தெரிந்ததே. இத்தாக்குதலை மேற்கொண்டதாகக் கருதப்படும் புலிகள் இன்னும் அப்பிரதேசத்தை விட்டுப் போகவில்லை என்ற தகவல் பரவியதும் அங்கிருந்து பல சிங்களக் குடும்பங்கள் பயம் காரணமாக வெளியேறிவருகின்றன.

கொக்கிளாயிலும் புல்மோட்டையிலும் காலத்துக்குக் காலம் சென்று மீன்பிடித்து வரும் தென் இலங்கை மீனவர்கள் அங்கிருந்து வெளியேறி நீர்கொழும்புக்கு வந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

வெலிஓயாவைச் சேர்ந்த குடும்பங்கள் பல அநுராதபுரம் சென்று விட்டதாகவும் தெரியவருகிறது.

கொக்கிளாயிலும் சுற்று வட்டாரங்களிலும் சில நாட்களாகப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகக் கண்ட பல சிங்கள குடும்பங்களும் அங்கிருந்து வெளியேறியுள்ளன. கொக்கிளாயில் சில நாட்களுக்கு முன்னர் புலிகளின் மோட்டார் தாக்குதல்களும் நடந்துள்ளன.

## பங்கர் சிறையில் புலிகள்!

**ம**ட்டக்களப்பு-கிரான் பகுதியில் நெற்செய்கைக் காணிகளுக்குப் பொறுப்பானவராக நியமிக்கப்பட்டிருந்த காளிதாசன் என்பவரும் மற்றும் இவருடன் தொடர்புள்ளவர் என்று கூறப்படும் பெண் போராளி ஒருவரும் புலிகளினால் கைது செய்யப்பட்டு பங்கர் சிறையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தீவிர விசாரணைக்குள்ளாக்கப்பட்டுள்ள இவர்கள்மீது ஒழுக்கவியல் குற்றச் சாட்டுக்களே சுமத்தப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. ஆனால் இவை இன்னமும் தெளிவாக வெளிப்படுத்தப்படவில்லை.

நெல் வயற் காணிகளுக்குரிய வரியை விவசாயிகளிடமிருந்து வசூலிப்பதும் அது சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதுமே காளிதாசனின் கடமையாகவிருந்தது.

மட்டக்களப்பிலும்-கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் தம் ஆளுகையின் கீழுள்ள பிரதேசங்களிலிருந்து நெற்காணி வரியாக ஒவ்வொரு போகத்திற்கும் புலிகள் தமிழ்-முஸ்லிம் விவசாயிகளிடமிருந்து கோடி ரூபாய்களுக்கு மேல் பெறுகிறார்கள்.

## பெண் படையினர் துன்புறுத்தல்
## மன்னிப்புச் சபை தெரிவிப்பு

**சி**றீலங்காவில்- குறிப்பாக யாழ் குடாநாட்டில் கைது செய்யப்படும் பெண்களை, இராணுவத்தைச் சேர்ந்த பெண்களே பல வகையிலும் துன்புறுத்துவதாக இலண்டன் மாநகரிலுள்ள சர்வதேச மன்னிப்புச் சபையின் கண்காணிப்புக்குழு குற்றம் சுமத்தியிருக்கிறது.

இனமோதல்கள் நடைபெறும் பிரதேசங்களான இலங்கையின் வட-கிழக்குப் பிராந்தியத்தில் கைது செய்யப்படும் பெண் சந்தேக நபர்களை இராணுவத்தைச் சேர்ந்த பெண்களே துன்புறுத்துவது தொடர்பான எத்தகைய செய்திகளும் இதுவரை வெளியானதில்லை.

ஆனால் இம்மாதம் வெளியிடப்பட்ட மேற்படி சபையின் அறிக்கையில் பெண் கைதிகள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவது, பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் மட்டுமல்லாமல் கொலை செய்யப்படுவது பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணம் உடுவில்லில் 24 வயதுடைய பெண்மணி கைது செய்யப்பட்டு, இராணுவத்தைச் சேர்ந்த பெண்களாலேயே துன்புறுத்தப்பட்ட சம்பவத்தை இவ்வறிக்கை சுட்டிக்காட்டியிருக்கிறது.

கைது செய்யப்பட்டு சில நாட்கள்வரை இப்பெண் விசாரிக்கப்படவோ துன்புறுத்தப்படவோ இல்லை. ஏழு நாட்களின் பின்னர் இப் பெண் வைக்கப்பட்டிருந்த அறைக்குள் சென்ற பெண் இராணுவத்தினர், இவரை முகட்டுவளையில் தலைகீழாகக் கட்டித் தூக்கித் துன்புறுத்தியுள்ளனராம். உண்மையைக் கூறாவிட்டால், சித்திரவதை மென்மேலும் அதிகரிக்கும் என்றும் எச்சரித்தனராம்.

இது மட்டுமல்லாமல் சந்தேகத்தின் பேரில் கைதாகும் இளம் பெண்களை தூஷணை வார்த்தைகளால் திட்டுவதும் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துவதும் பெண் சிப்பாய்களால் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

## கராஜை மூடிவிட உத்தேசம்

**ம**ட்டக்களப்பில் கரும்புலித் தற்கொலைத் தாக்குதல் இடம் பெற்ற ஐவர் கராஜை நிரந்தரமாக மூடிவிட உத்தேசம் கொண்டிருப்பதாக அறியவருகிறது.

மோட்டார் சைக்கிள்கள் திருத்துவதற்கு ஏற்ற பிரபல இடமாக உள்ள இந்த கராஜ் கடந்த 29.05.1999 அன்று றாசிக் குழுத் தலைவர் கணேசகுமார் (றாசிக்) தற்கொலைக் கரும்புலிப் போராளியால் கொல்லப்பட்டதுடன் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

கராஜ் உரிமையாளரான ஐவர் உட்பட மேலும் அந்த கராஜில் வேலை செய்த ஊழியர்கள் அனைவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள்.

தற்கொலைக் குண்டுதாரியான மேஜர் அரசப்பன் எனும் இயக்கப் பெயரைக் கொண்டவர் மயில்வாகனம்-அருட்செல்வம் மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்தவர் என்றும் கட்டழகனான இவர் 1978 ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 08ஆந் திகதி பிறந்தவர் என்றும் தாம் அடையாளம் கண்டுள்ளதாகப் பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவினர் உறுதி செய்துள்ளனர்.

## "பாதிப்புகளுக்கு எதிராக குரல் கொடுப்போம்!"
## மாணவர் ஒன்றியப் பிரதிநிதி கூறுகிறார்

**'அ**னைத்து பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம்' சமீபத்தில் உருவாகியுள்ளது.

நாட்டில் உள்ள சகல பல்கலைக்கழக தமிழ் மாணவர்களையும் உள்ளடக்கிய மாணவர் ஒன்றியம் தோன்றியுள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

"தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு மட்டுமன்றி தமிழ் மக்கள் எதிர்நோக்கும் மனித உரிமைப் பிரச்சனைகள் தொடர்பாகவும் குரல் கொடுக்க பின்நிற்க மாட்டோம்!" என்று ஒன்றிய பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

"மாணவர்களாகிய நாமும் தமிழ் சமூகத்தின் ஓர் அங்கமே. அந்த வகையில் தமிழ் மக்களைப் பாதிக்கும் விடயங்களையிட்டு நாம் மெத்தனமாக இருக்கமுடியாது.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்றவற்றால் எமது மக்கள் மட்டுமன்றி மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். கைது செய்யப்படுகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒன்றியம் மாணவர்கள் என்ற வரையறைக்குள் நின்று என்ன செய்யலாமோ அதைச் செய்யும்!" என்றும் அந்தப் பிரதிநிதி கூறினார்.

## பாதுகாப்புக்கு வழிகூறி பதுங்கியிருந்து சூடு!
## றாசிக்குழு உறுப்பினர் பலி—சகோதரர்கள் புலிகள்

**க**ல்முனையில் 04.06.99 அன்று காலை ஏக காலத்தில் றாசிக் குழு உறுப்பினரான ஏ.ஜே.ரஞ்சன்(21) என்பவரும் பொலிஸ் உத்தியோகத்தரான ஏ.சத்தார் (24) என்பவரும் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மட்டக்களப்பு-வாகரையிலுள்ள படையினரின் முகாமிலுள்ள றாசிக் குழுவினருடன்தான் ரஞ்சன் இருந்து வந்தார். கணேசகுமாரின் (றாசிக்) மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காகவே ரஞ்சன் காரைதீவுக்குச் சென்றிருந்தார். அங்கு சென்றவர் தனது தாயின் வீட்டில் தங்கியிருந்தார் எனினும் இரவில் அங்கு தங்காது இடம் மாறித் தங்கி வந்தார்.

இதனை மோப்பம் பிடித்த புலிகள் சம்பவ தினத்தன்று அவரது வீட்டுக்கு அடையாளம் காணமுடியாதவாறு பொது மக்கள்போல் மாறுவேடத்தில் சென்று "நீங்கள் இங்கு நிற்பது உசிதமானதல்ல. புலிகள் நடமாடுகிறார்கள். எனவே புறப்பட்டுப் போங்கள். புலிகள் அந்தப் பக்கம் நிற்கிறார்கள் நீங்கள் வி.வி. வீதியால் போங்கள். அம்மாவும் கூடப் போகலாமே!" என்றும் ஆலோசனை கூறியுள்ளனர்.

நமது நன்மைக்குத்தானே அறிவுரை கூறிவிட்டுப் போகிறார் என்று இதனை நம்பிய தாயும் மகனும், அவர் கூறிய வழியால் சென்ற பொழுது ஏற்கெனவே அவ்வழியில் தயார் நிலையில் பதுங்கியிருந்த புலிகள் அவர் மீது சுட்டுத் தீர்த்துள்ளனர்.

காலை 7.40 அளவில் இச்சம்பவம் இடம் பெற்றது. இது பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் பரபரப்பு வேளை என்பதால் அங்கு பதுங்கியிருந்த புலிகளை மாணவர்களும் கண்டுள்ளனர்.

ரஞ்சனின் உடன் பிறந்த மூத்த சகோரர்கள் இருவர் புலிகள் இயக்கத்தில் உள்ளனர். அவர்கள் தமது தாய்க்கு அனுப்பிய கடிதத்தில் "தம்பியை றாசிக் குழுவில் இருந்து விலக்கி இந்தப் பகுதியில் வைத்திருக்காமல் வேறு எங்காவது அனுப்பிவிடுங்கள்!" என்று எழுதியிருந்தனராம்.

### பொலிசார் பலி

இதனிடையே அன்றைய தினம் கல்முனை ரெலிகொம் நிலையத்தில் கடமையாற்றி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் நற்பிட்டிமுனை பொது நூலகத்தடியில் வைத்துப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். முதலாமவர் சுடப்பட்டு சில நிமிட நேரங்களில் இது நடந்தது.

இவரது குடும்பத்தில் ஏற்பட்டிருந்த தகராறு காரணமாக அவரைப் பற்றிய முறைப்பாடும் அவரது நடமாட்டம் பற்றிய முழுத் தகவல்களும் புலிகளிடம் வழங்கப்பட்டிருந்தனவாம்.

அதன் காரணமாகவே அவர்மீது புலிகள் குறிவைத்தனர் என்று அறியப்படுகிறது. அவர் சுடப்பட்டது பற்றி மக்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.


படிப்பகம்

www.padippakam.com

# பாலியல் கொடூர ஆசிரியர்

## பணத்தால் தப்ப முயற்சி

(திருமலை நிருபர்)

நிலாவெளி தமிழ் மகா வித்தியாலயத்தில் மாணவிகள் மீது பாலியல் வல்லுறவு புரிந்த ஆசிரியர் தற்போது திருக்கோணமலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி ஆசிரியரும் உடற்பயிற்சி ஆசிரியை ஒருவருமாகச் சேர்ந்து சம்பவம் வெளியாகக் காரணமான மாணவியின் தாயாரிடம் (விரிவான செய்தி 309வது முரசில் வெளியானது) ஒரு தொகைப் பணம் தருவதாகவும் வெற்றுத்தாளில் கையெழுத்துத் தருமாறும் நெருக்குதல் கொடுத்ததையடுத்து அத்தாயார் தனது மகளையும் அழைத்துக்கொண்டு அவரது சொந்த இடமான கிளிவெட்டிக்குச் சென்றிருந்தார்.

திருக்கோணமலைப் பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி சேருவிலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் உதவியுடன் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக மாணவியும் தாயாரும் பொலிஸ் நிலையம் அழைக்கப்பட்டு மே 27ல் முறைப்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டதையடுத்து உடனடியாகவே ஆசிரியர் கைது செய்யப்பட்டதுடன் மாணவியும் வைத்திய பரிசோதனைக்கு அனுப்பப்பட்டார்.

மாணவியின் தாயார் இதுபற்றி முரசிடம் தெரிவிக்கும்போது "பொலிஸாரும் ஆஸ்பத்திரி நிர்வாகமும் தங்கள் பிள்ளைக்கு அவலம் நேர்ந்தது போன்ற உணர்வுடன் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் நடந்து கொண்டதை என் வாழ்நாளில் மறக்கமுடியாது." என்று துயரத்தின் மத்தியிலும் நிறைவான மனதுடன் விவரித்தார். வன்செயலில் கணவரைப் பறிகொடுத்த இப் பெண்மணி கூலி வேலை செய்தே காலத்தை ஓட்டுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விளம்பரத்தில் சிறு மாற்றம்

லயன் பியர் எனப்படும் குடிபான நிறுவனம் நாட்டின் பெரும்பாலான பெரும்பான்மை இனப் பகுதிகளில் வியாபார விளம்பரம் ஒன்றை சமீப சில மாதங்களுக்கு முன்னர் செய்திருந்தது.

கவர்ச்சியும், கிளர்ச்சியும் தூண்டக்கூடிய வகையில் அமைந்திருந்த அந்த விளம்பரம் மதுச்சாலைகளிலும் மற்றும் பொது இடங்களிலும் தொங்கவிடப்பட்டிருந்தன.

பெரிய சிங்கத் தலையுடன் "அபி சிங்ஹ வங்சய, ஒப...? (நாங்கள் சிங்க வம்சம் நீங்கள்...?) IS THERE A LION IN YOU?" என்ற வாசகங்கள் காணப்பட்டன.

இவை பெரும்பான்மை சமூகமல்லாதோரை இன ரீதியில் துன்புறுத்தும் இனத்துவேஷ வேதனைகளைத் தூண்டி விடக்கூடும் என்ற செய்தி முரசு 300இல் வெளியாகியிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

இந்த விமர்சனத்தைக் கவனத்திலெடுத்தாற்போன்று இந்த நிறுவனம் தற்சமயம் தனது விளம்பரங்களில் மாற்றத்தைச் செய்துள்ளது தெரிகிறது.

பெரிய சிங்கத்தின் தலை மட்டும் காணப்படும் விளம்பரங்களில் பியர் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. புண்படுத்தும் வாசகங்கள் அதில் காணப்படவில்லை.

# குடும்ப விவரப் பட்டியல்

அக்கரைப்பற்று-ஆலையடி வேம்பு தமிழ்ப் பிரதேசவாசிகளிடமிருந்து மட்டும் குடும்ப விவரங்கள் அடங்கிய பட்டியலை, தாமதமின்றிச் சமர்ப்பிக்குமாறு பாதுகாப்புப் படையினர் கோரியுள்ளனர்.

அங்கு கோரப்பட்டுள்ள விவரங்கள் கொழும்பிலுள்ள தமிழ்க் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதே படிவ விவரங்களாகவே உள்ளன.

சுமார் 100 குடும்பங்களைக் கொண்ட இக்கிராம வாசிகள் விரைவாக இப் படிவங்களைக் கிராம சேவகர், பிரதேச செயலாளர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடன் பாதுகாப்புத் தரப்பினருக்கு வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றிலுள்ள வேறெந்தத் தமிழ்ப் பிரதேசங்களுக்கும் கட்டாயப்படுத்தப்படாத இந்த நடைமுறை ஆலையடி வேம்புப் பிரதேசத்திற்கு மட்டும் ஏன் என்று அவ்வூர்வாசிகள் கேள்வி எழுப்புகிறார்கள். இது விடயத்தில் எந்தவொரு தமிழ்க் கட்சியும் கவனம் செலுத்தவில்லை.

# மங்கலான மின் விளக்குகள்!

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மீண்டும் மின்சாரம் வழங்க புலிகள் இயக்கத்தினர் இவ்வாண்டு ஜனவரி முதல் அனுமதித்ததை தொடர்ந்து மின்சார விநியோகத்தை சீர் செய்ய பலப்பல இலட்ச ரூபா செலவில் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

திட்ட வேலைகள் பல மாதங்கள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த வாரத்திலிருந்து மாவட்டத்தின் பெரும்பாலான நகரப் பகுதிகளுக்கு மின் விநியோகம் கிடைத்துள்ளது.

ஆனால், மாலையாகியதும் மின்விளக்குகள் எங்கிருக்கின்றன என்று கண்டுபிடிப்பது கஷ்டமாக உள்ளது. அந்த அளவுக்கு மின் விளக்குகள் மின்னிக்கொண்டு எரிகின்றன. மின் விளக்குகளுக்குப் பக்கத்தில் மண்ணெண்ணெய் குப்பி விளக்குகளை எரிய வைக்க வேண்டியுள்ளது. இந்த மண் எண்ணெய் விளக்கு வெளிச்சத்தின் துணையுடனேயே மின் விளக்குகள் எங்கிருக்கின்றன என்று கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

பள்ளி மாணவர்களும் மற்றும் பல்வேறு தேவையுள்ளவர்களும் மண் எண்ணெய் குப்பி விளக்குகளுடன் போராடுகின்றனர்.

# தரம் குறைந்த நாணயம்

சுதந்திரப் பொன்விழா ஞாபகார்த்தமாக பத்து ரூபா நாணயக்குற்றி வெளியிடப்பட்டது. இந்த நாணயக்குற்றி இரண்டு பிரிவாக இலகுவில் கழன்றுவிடக் கூடியதாக இருக்கிறது.

இத்தகைய தரம்குறைந்த நாணயம் வெளியிடப்பட்டது இலங்கையில் இதுவே முதற்தடவையாக இருக்கும் என எண்ணத் தோன்றுகிறது.

இதில் இன்னொரு விடயம் என்னவென்றால் விடுதலைப் புலிகள் குண்டு வைத்துத் தகர்த்த தலதா மாளிகையின் உருவம் இந்த நாணயத்தின் ஒரு புறம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த நாணயம் குண்டு இல்லாமலேயே தகர்ந்து விட்டிருக்கிறது.

## 9ம் ஆண்டு, 1ம் ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டுத்திதி 12.06.1999
9ம் ஆண்டு நினைவஞ்சலி
செல்லப்பிள்ளை தம்பி ஐயா
5ம் குறிச்சி ஏறாவூர்.
ஜனனம்:1920 / இறப்பு: 18.8.1990



1ம் ஆண்டு நினைவஞ்சலி
தம்பிஐயா அன்னம்மா
5ம் குறிச்சி ஏறாவூர்.
ஜனனம் 13.8.1918/ இறப்பு 4.6.1998

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டோர் வருவதில்லை. மாநிலத்தே என்று
ஆன்றோர்கள் ஓதிவைத்தார்.
நீண்ட துயரில் எம்மை நீந்தித் துடிக்க விட்டு
நீங்களோடி மறைந்து விட்டீர்கள்.
நீங்காத உங்கள் நினைவால் நிறைந்த எமதுள்ளம்
நித்தம் நிம்பதம் நினைத்து
நிலை குலைந்து அழுகிறது
அன்பால எமை ஊட்டி, இன்பத் தாலாட்டி- உயர்
பண்பால் வளர்த்தெடுத்தீர்கள்!
கண்போல் எமைக் காத்த தந்தை, தாயே
என்றென்றும் உங்கள் தாளைத்
தூய பக்தியுடன் துதிக்கின்றோம்.
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஆண்டு திதியில் கலந்துகொண்டு சிறப்பித்த
அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வண்ணம்
மகன்மார், மகள்மார், மருமக்கள்மார்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
தகவல்: சா. ஸ்ரீஸ்கந்தராசா, மருமகன்.

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்
07.10.1935
மீசாலை
(மாதகல்)
✧✧
விண்ணில்
29.04.1999
சுவிஸ்

அமரர்
சீதாலட்சுமி
சபாரட்ணம்

மாதகலைப் பிறப்பிடமாகவும், மீசாலை தெற்கில் வாழ்ந்து சுவிஸில் வசித்தவருமாகிய சபாரட்ணம் சீதாலட்சுமி 29.04.99 வியாழன் அன்று காலமானார். அன்னார் சபாரட்ணத்தின் அன்புத் துணைவியாரும், காலஞ்சென்ற கந்தையா தெய்வானைபிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கம் சின்னப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, நடராஜா, காலஞ்சென்ற ராசம்மா, பாரதி ஆகியோரின் அன்பு சகோதரியும், இராஜேஸ்வரி (ஜேர்மனி), நகுலேஸ்வரி (ஜேர்மனி), இரட்ணசிங்கம், பிரகாஷ், (சுவிஸ்), விமலேஸ்வரி (ஜேர்மனி), இரட்னேஸ்வரி (ஜேர்மனி), கமலேஸ்வரி (கொலண்ட்), ஆகியோரின் அன்புத் தாயாரும் குலசிங்கம், அரசபிள்ளை, காலஞ்சென்ற நிசாவதனி, சம்பந்தர், காலஞ்சென்ற தயாசீலன், ஜெயவரதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், எரிக். இவோன், பமீலா, எர்னா, சுதர்வின், திலீபன், வனிதா, மிதுரா, மிகைல், துசீபன், அனுவின், தபசியா, ஸ்ரீபா, ஆகியோரின் அருமைப் பேத்தியும், காலஞ்சென்ற யோகலிங்கம், காலஞ்சென்ற கணேசு, குலசிங்கம், சிவராஜா ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறிய உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறும் இவ்வேளையில் 30.05.99 ஞாயிற்றுக்கிழமை Fischrain-1 Worblaufen bahnhof இருந்து 2நிமிட நடைதூரம். Post Office முன் உள்ள மண்டபத்தில் நடைபெற்றது. அன்னாரின் அந்தியேட்டி கிரிகையிலும் கலந்து கொண்டோருக்கும், நன்றியைத் தெரிவிக்கிறோம்.
தங்கள் பிரிவால் துயருறும் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும், உற்றார், உறவினர் நண்பர்கள்.

தகவல்: இரட்ணசிங்கம், பிரகாஷ் (சுவிஸ்)T.P.0041-763728447
K.சிவனேஸ் (சிவா) T.P.0041-763822519 (சுவிஸ்)


## சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச் சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA,
T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. HP 97651074





## மஹாசக்தி மருத்துவம்

GOVT. APPROVED CHARITABILE SERVICES REG.NO: HA 14/BT/176

"எல்லாப்புகழும் இறைவனுக்கே"

மருத்துவம்-மந்திரம்-யந்திரம்-வசியம்-ஆகர்ஷணம்-பூஜை-பிரார்த்தனை-தியானம் காதலர்கள் ஒன்று சேர, கணவன்-மனைவி பிரச்சனைகள் இன்றி இன்பமாக இருக்க, குழந்தை பாக்கியம் கிடைக்க, பிரிந்தவர்கள், வெறுப்பவர்கள், வேண்டியவர்கள் வந்து உறவாக, காதல் திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப்பிரயாணம், வேறு காரியங்களில் வெற்றிபெற, தகாத உறவை போதைவஸ்தை மறப்பிக்க, நீண்டகால உடல் நோய், மனநோய் வேறு பிரச்சனைகள் தீர்வதற்கு, காம்வினை, காலப்பகை, கண்ணூறு, நாவூறு, கிரகதோஷம், தீயசக்திகள், தடைகளாகவும் இவைகள் ஏற்படக் காரணமாகவும் இருக்கலாம். இவைகளில் இருந்து விடுபட, வெற்றிகொள்ள, இவைகள் ஏற்படாமல் காவல் செய்ய வேறு வெளியில் சொல்ல முடியாத வெட்கமான வேதனையான, பிரச்சனைகள், பாலியல், தாம்பத்தியக் குறைபாடுகளுக்கும் இறைமருத்துவ, மறைமாந்திரிக, மனோதத்துவ ஆன்மிக ஆலோசனைகள் இலவசமாக வழங்குகின்றார் குருசக்தி நிலையத்தின் பிரதமகுரு மஹாசக்தி உபாசனா பூசகர் (வைத்தியக்கலாநிதி) (இந்தியன் வைத்தியசாலையின்) சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட டாக்டர்- "மந்திரயோகி" D.H.M.S-D.Ac (இலங்கை), M.B.B.S.H-D.S.M (இந்தியா) வரமுடியாதவர்கள் கடல் கடந்த வெளிநாட்டவர்கள் கோரிக்கைகளை எழுதி ;.பாக்ஸ், தபால்மூலமும் காலை 7.30 தொடக்கம் இரவு 9.30 வரை தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு தபால் மூலம் விருப்பங்களை நிறைவேற்றலாம். (மட்டக்களப்பு) கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு கிழக்குப்பக்கமாக சுவாமி இராமகிருஷ்ணபுரம் வீதியில் அமைதியான சூழ்நிலையில் குருசக்தி நிலையம் அமைந்திருக்கிறது.

"இறைவனே பெரும் வைத்தியன்"

TE: 065-24872 INDIAN CLINIC (GURUSACKTHY CENTRE)
FAX: 065-25434 KALLADY- BATTICALOA (P.O) (SRI LANKA)



## ஊழைச்சதையைக் குறைக்க அரிய சந்தர்ப்பம்

வேண்டாத ஊழைச்சதையை உடம்பிலிருந்து அகற்றவும், தேக அமைப்பை கட்டுமஸ்தாக வைக்கவும் மருந்துகளோ- அப்பியாசங்களோ இன்றி புதிய முறை. தகுதி வாய்ந்த வைத்தியரினால் மேற்கொள்ளப்படும்.

தொடர்பு கொள்க:
MEDI CLINIC
வெள்ளவத்தை.
Tel: 593959



## மலையாள மாந்திரிகம்



மலையாள மாந்திரிகத்தில் எண்ணங்களை எண்ணிய வாறு மின்சார வேகத்தில் வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வெற்றிபெற்றவர்கள் எத்தனை எத்தனையோ. இனி உங்கள் குறை என்ன. கணவன் மனைவி பிணக்கா. காதல் தோல்வியா. பிரயாணத் தடையா. இன்னும் அனேக குறைகளுக்கு உங்கள் பிறப்பு திகதியுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே ஏற்றுக் கொள்ளப்படும். தேவை எனில் உலக மாந்திரிக ஜோதிட சக்கரவர்த்தி

P. K. Samy (J. D. G. A. N) J.P
162, Kotahena Street, May Feild Road,
Clombo 13
Tel 342463, 344831, 431137
Fax 0094 1 342464,


## 1வது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி காருண்யா / 29.05.99

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகதாஸ், சுஜாதா. தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி காருண்யா தனது முதலாவது பிறந்த தினத்தை ஜேர்மனியில் BONN நகரில் உள்ள இல்லத்தில் 29.05.99 அன்று வெகு சிறப்பாக கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்பப்பா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், சித்தி, மச்சான், அக்காமார், மற்றும் பூட்டன், பூட்டி, தாத்தாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் யாழ் பெருமாள் அருளுடன் காருண்யா குட்டியை பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: த.கருணாதனன் (சித்தப்பா) வெள்ளவத்தை.


## அஸ்மா நோய்க்கு வைத்தியம்

* தொய்வு * இழுப்பு
* இளைப்பு * மாய்ச்சல்
* மூச்சுத்தட்டல் * சளி
* இருமல் * கண் கடி
* மூக்கடைப்பு * பீனிசம்
* தலைவலி * தும்மல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல், குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்.

டாக்டர்
சுராஜ் சோமசுந்தரம்
அஸ்மா சிகிச்சை நிபுணர்
Ph.Dr(Ind); M.B.B.Sch (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)
25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை
மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்)
தொலைபேசி 074-201582
தினமும் மாலையில் 4 மணி முதல் 7 மணி வரை

தூர மாவட்டத்தில் உள்ள நோயாளர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு தொலைபேசி மூலம் பதிவு செய்தால் காலை நேரங்களிலும் பார்வையிடப்படும். சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில் நோயாளர்கள் அதிகம் இருப்பதினால் புதிய நோயாளர்கள் தொலைபேசி மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பதிவு செய்து வரவும்.


## மூன்றாண்டு நினைவு



சதாசிவம்-சிறிகரன்
(பாபுஜீ)

அன்னைமடியில்: 1975.07.08
ஆண்டவனடியில்: 1996.05.22

மூன்றாண்டு மறைந்தாலும்
மாறாது உன்னினைவு என்றும்
உன்னினைவுகளோடும்,
உணர்வுகளோடும் கலந்து வாழும்
அப்பா, அம்மா, அக்காமார்,
அத்தான், மருமக்கள், அம்மம்மா,
அன்ரிமார், சித்தப்பாமார்,
மாமாமார், மாமிமார் மற்றும்
உற்றார் உறவினர் நண்பர்கள்.

தகவல்: வை.சதாசிவம்,
களுவாஞ்சிக்குடி.

## நினைவஞ்சலி

மலர்வு
* * * *
12.04.1936
* * * *



உதிர்வு
* * * *
04.05.1999
* * * *

அமரர் சிதம்பரநாதர் கணபதிப்பிள்ளை

நிழல் கொடுத்த தந்தையே!
உங்கள் நினைவால் வாடுகிறோம்.
நிஜத்தில் நீங்கள் இல்லையே!
எங்கள் கண்ணில் நீர் வடிவதை சகிக்காத நீங்கள்,
வாழ்நாள் முழுவதும் கண்ணீர் சிந்த வைத்து விட்டீர்களே.
பெற்றவரே நீங்கள் இன்றி பொழுது விடியுமோ!

சீரோங்கு நீர்வேலி பதி வாழ்ந்த கணபதிப்பிள்ளை
பெருமகனாய் வந்துதித்து வனப்புறு "ஜெயா வாசா" தனில்
வளமுற வாழ்ந்த எம் திருமகனே எம் அன்புத் தெய்வமே
எங்கள் துயர் துடைத்து எம்மைக் காத்த திருவுருவே
போனவழி சொல்லவில்லையே
இங்கு நாம் ஏங்கி நிற்க எங்கு தான் ஓடிச் சென்றீர்களோ.

மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்
ஈரேழு ஜென்மமும்-எம்
நினைவுதான் நெஞ்சை விட்டகலாது-ஐயா
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, சகோதரி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் உற்றார் உறவினர். 04.05.99 அன்று சிவபதமடைந்த குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்தி கிரியைகளிலும் 3.6.99 அன்று மதியபோசன விருந்திலும், கலந்துகொண்டோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் பலவழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் நன்றியை தெரிவிக்கின்றோம்: குடும்பத்தினர்.

தகவல்: மகள் கே. விஜயகுமாரி,
26/29 லோவர் சென் அன்றுஸ் பிளேஸ். கொழும்பு-15.

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# குடாநாட்டில் புலிகளின் இலக்குகள்

## யாருமறியாத இந்நாள் உறுப்பினர்கள்

**வ**ன்னிப் போர் முனைக்கு மேலும் 20 ஆயிரம் படையினர் தேவை என்று படை உயர் தலைமை அரசுக்கு எடுத்துக் கூறியுள்ளதாம்.

தென்னிலங்கையில் படைக்கு புதிதாக ஆட்திரட்டும் முயற்சிகள் படு தோல்வி கண்டுள்ளன.

குறைந்தது பத்தாயிரம் பேரையாவது படையில் சேர்க்க முயற்சிகளை முடுக்கி விட்டு கவர்ச்சிகரமான சலுகைகளும் அறிவிக்கப்பட்டன. அதற்கும் பயனில்லை.

புதிதாக படைக்கு ஆட்திரட்டும் முயற்சி தோல்வி கண்டுள்ளபோது, படையில் இருந்து தப்பிச் செல்லும் எண்ணிக்கையும் குறைந்தபாடில்லை.

படையில் இருந்து தப்பி ஒடியவர்களை மறுபடி தேடிப் பிடிப்பது சுலபமான வேலையல்ல.

பாரிய தேடுதல் நடத்த ஆரம்பித்தால் சிங்கள மக்களை அதிருப்திக்கு உள்ளாக்கி, அரசுக்கு வாக்குகளில் சரிவை ஏற்படுத்திவிடும்.

எனவே, மிரட்டலோடு நிறுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. இதனால் பாரிய படை நகர்வுகளும், நிலைகொள்ளலும் அரசு எதிர்பார்த்தளவு வேகம் பெற முடியாதுள்ளது.

வன்னியில் படையினரை அகலக்கால் வைத்து நிலைகொள்ள புலிகள் அனுமதித்த போர்த் தந்திரம் பயனளித்துள்ளது.

தேர்தலுக்கு தேர்தல் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி இருந்ததால், மேலும் மேலும் பல திசைகளில் அகன்று நிலைகொண்டுள்ளனர் படையினர்.

வவுனியா-யாழ் சாலையில் வவுனியாவிலிருந்து கிளிநொச்சி 75 கிலோ மீட்டர். கடந்த இரண்டு வருட காலத்தில் சுமார் 40 கிலோ மீட்டர் தூரத்தையே படையினர் கடந்துள்ளனர்.

ஆனால் இச் சாலையின் கிழக்கிலும், மேற்கிலுமாக அகலக்கால்வைத்து பரந்து நிலை கொண்டுள்ளனர்.

இந்த நிலை கொள்ளலால் புலிகளுக்கு இராணுவ ரீதியில் பெரும் பாதகங்கள் ஏற்படவில்லை.

இவ்வாறு பரந்து நிலைகொள்ளாது இருந்தால்தான் புலிகளுக்கு பாதகமாக அமைந்திருக்கும்.

அகலக்கால் வைத்து நிற்கும் படையினருக்கு, தாம் கைப்பற்றிய பிரதேசங்களை பாதுகாக்கவே பெரும் ஆட்பலம் தேவையாக இருக்கிறது.

அவ்வாறு இருந்தும் தற்போது கைப்பற்றிய பிரதேசங்களுக்குள் புலிகள் தாராளமாக நடமாடுகின்றனர்.

ரணகோஷ 1, 2 ஆகிய நடவடிக்கைகள் மூலம் படையினர் கைப்பற்றிய பகுதிகளுக்குள்ளும் புலிகள் நடமாடுகின்றனர்.

அங்கு முன்னரங்கப் பகுதியில் படையினர் காவல் அரண்கள் அமைத்து நிற்கின்றனர். ஆனால் உள்ளே புலிகள் சுற்றித்திரிகிறார்கள்.

படையினரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் உள்ள சில கிராமங்களுக்குள் இருக்கும் புலிகளது மாவீரர் குடும்பங்கள் பற்றி படையினருக்கு தகவல்கள் கிடைத்தன. அத் தகவல்களை கொடுத்தது யார் என்று அறிந்து புலிகள் விசாரணை நடத்தியுள்ளனர். சிலருக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம் என்றும் தெரிகிறது.

கைப்பற்றிய பகுதிகளுக்குள் அங்குலம் அங்குலமாக நிலைகொள்ளத்தக்க ஆட்பலம் படையினருக்கு கிடையாது.

இந்நிலையில் மேலும் நிலப்பரப்புக்களை கைப்பற்றுவது படையினருக்கு யுத்த தந்திர ரீதியில் பாதகமாக முடியலாம்.

அடுத்த கட்ட நடவடிக்கையாக மன்னார்-பூநகரி பாதையை கைப்பற்றி நகர்வது கூட ஆட்பற்றாக்குறையால் தாமதமாகியிருக்கிறது.

இதேவேளையில் புலிகள் வன்னியில் மட்டுமன்றி, ஏனைய முனைகளிலும் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர்.

குறிப்பாக யாழ் குடாநாட்டில் புலிகளது ஊடுருவல் மிக அதிகமாகியுள்ளது.

ஈ.பி.டி.பி. பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் யாழ் கந்தர்மடம் பகுதியில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டார்.

மிகப் பாதுகாப்பான இப் பகுதியில் நீண்ட நேரம் காத்திருந்த பிஸ்டல் குழுவினரே தீர்த்துக்கட்டியுள்ளனர்.

யாழ் குடாநாட்டில் பலியான ஈ.பி.டி.பி பிரதேச சபை உறுப்பினர்கள் பலர் அக் கட்சியின் உறுப்பினர்களல்ல. வெளியே இருந்து நியமிக்கப்பட்டவர்களே. ஆனால் கந்தர் மடத்தில் கொல்லப்பட்ட ராஜ்குமார் ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை பதவி விலகுமாறு புலிகள் பலமுறை கோரிக்கை விடுத்திருந்தனர்.

இறுதியாக மிகப் பவ்வியமான வேண்டுகோள் ஒன்றும் விடுக்கப்பட்டது. உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான அறிகுறிதான் அந்த பணிவான வேண்டுகோள்.

இதன் பின்னரே அடுத்தடுத்து உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் இருண்டுபோர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் பற்றி விபரங்களை திரட்டி, தீர்த்துக் கட்டுவதற்காகவே பிஸ்டல் குழு ஒன்று யாழ் குடாநாட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதேசமயம் கூட்டணியினர் மாநகர சபை மேயர் பதவியை ஏற்காது இருப்பதால், கூட்டணி உறுப்பினர்களை தீர்த்துக் கட்டுவதை புலிகள் நிறுத்தியிருந்ததாக கூறப்படுகிறது.

தமக்கு சவாலாக ஆயுதங்களுடன் செயற்படும் இயக்கங்கள்மீதே புலிகளது கவனம் திரும்பியுள்ளது. ஆயினும் சமீபத்தில் புலிகளுக்கு எதிரான சில நடவடிக்கைகளுக்கு யாழில் உள்ள கூட்டணிப் பிரமுகர்கள் ஒத்துழைத்தமை புலிகளுக்கு அவர்கள்மீது மறுபடி கோபத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தகவல்.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்மீது தமது தாக்குதலை புலிகள் மேலும் தீவிரப் படுத்தும் சகல அறிகுறிகளும் தெரிகின்றன.

இந்நிலையில் கட்டம் கட்டமாக பதவி விலகப்போவதாக புளொட் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால் இதனை முன்பே செய்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

"நாம் போட்டியிடாவிட்டாலும் வேறு யாராவது போட்டியிடுவார்கள்தானே. அரசு எப்படியும் தேர்தலை நடத்தி முடிக்கும். ஆகவேதான் நாம் போட்டியிடுகிறோம்" என்றும் தமிழ்க் கட்சிகள் உள்ளூராட்சி தேர்தலின்போது கூறியிருந்தன.

உள்ளூராட்சி தேர்தல் நல்லது என்று எந்தக் கட்சியும் அப்போது கூறவே இல்லை.

அப்படிப்பார்த்தால் அரசு தேர்தல் நடத்துவதை தடுக்க முடியாமல்தான் போட்டியிட்டன. அது உண்மையானால் இப்போதும் ஏன் பதவியில் இருக்க வேண்டும்?

அரசு படையினரை வைத்து தேர்தலை நடத்தும், ஆளும் கட்சித் தமிழர்கள்கூட போட்டியிடக்கூடும். பாதுகாப்பும் கிடைக்கும். நாம் எப்படி தடுப்பது? என்று தமிழ்க் கட்சிகள் கேட்டதில் ஓரளவு நியாயம் இருக்கிறது. தேர்தலை தடுக்கும் பலம் அவற்றின் கையில் இல்லை என்று ஒப்புக் கொள்ளலாம்.

ஆனால் தேர்தலை அரசு நடத்தியதன் முக்கிய நோக்கம் என்ன? 1) யாழில் மக்கள் ஆட்சி நடப்பதாக உலகுக்கு காண்பிப்பது. 2) யாழ் அபிவிருத்திக்கு என்று நிதி உதவிகள் பெறுவது.

இந்த நோக்கத்தை முறியடிக்க தமிழ்க் கட்சிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு கிட்டியிருந்தது.

உள்ளூராட்சி சபைகள் இயங்கக்கூடிய சூழ்நிலை இல்லை என்று உலகறிய அறிவித்துவிட்டு இராஜினாமா செய்திருக்கலாம். இது அரசுக்கு பேரிடியாக அமைந்திருக்கும். தமிழ்க் கட்சிகளது கருத்தை கேளாது அரசு தேர்தல் நடத்தியதற்கும் பதிலடியாக இருந்திருக்கும்.

தேர்தலை தடுக்க முடியவில்லை, போட்டியிடுகிறோம் என்று கூறிய கட்சிகள், தேர்தல் நடத்தியதால் அரசு அடைய நினைத்த பலனை முறியடிக்க கிடைத்த வாய்ப்பை தவறவிட்டன.

எனவே, யாழ் குடாநாட்டில் அரசின் உத்திகளுக்கும், பிரசாரங்களுக்கும் தமிழ்க் கட்சிகளும் பங்காளிகளாகவே மாறியுள்ளன.

உள்ளூராட்சி சபை தேர்தலின் முன்னர் யாழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சிகளது உறுப்பினர்கள் எவரும் புலிகளால் கொல்லப்படவில்லை.

உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பின் பின்னர்தான் யாழ் குடாநாட்டில் தமிழ்க் கட்சிகளும் புலிகளின் இலக்குகளாக மாறின.

தற்போது யாழ் குடாநாட்டில் புலிகளின் பிரதான இலக்குகள் இரண்டு;

1) படையினர்

2) தமிழ்க் கட்சிகள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்.

குடாநாட்டில் புலிகளது பிரசன்னம் அதிகமாகியிருப்பது நெருக்கடி முற்றப்போவதற்கான முன்னறிவிப்புத்தான்.

யாழ் குடாநாட்டு நிலவரங்களும் மக்களிடையே புலிகளுக்குரிய ஆதரவை உருவாக்கும் விதமாகவே உள்ளன.

புலிகளை இனம் காண முடியாத நிலையில், புலிகளில் இருந்து விலகிய முன்னாள் உறுப்பினர்களும் படையினரால் துருவப்படுகிறார்கள்.

இந்த நடவடிக்கையும் எதிர்மாறான பலனையே ஏற்படுத்தலாம். புலிகளோடு தொடுசலே வேண்டாம் என்று ஒதுங்கி இருப்பவர்களைக் கூட உசுப்பிவிடக்கூடும்.

யாழ் குடாநாட்டில் புலிகளுக்கு புதிய உறுப்பினர்கள் ஆண், பெண் இருபாலாரிலும் இணைந்துள்ளனர். இவர்களை யாரும் அறிய மாட்டார்கள்.

முன்னாள் உறுப்பினர்களை பலருக்குத் தெரியும். இந்நாள் புதிய உறுப்பினர்களை யாருக்கும் தெரியாது.

மக்களே கடல். அந்த கடலில் வாழும் மீன்களே கெரில்லாக்கள். அந்த தத்துவத்தின்படிதான் இன்று யாழில் புலிகள் செயற்படத் தொடங்கியுள்ளனர். இதனால் புலிகளை இனம் காண்பதில் பெரும் சிக்கல்கள் உள்ளன.

அண்மையில்கூட ஐந்து மாணவர்கள் ஒரே ஊரில் இருந்து புலிகளுடன் போய்ச் சேர்ந்தனர். அவர்கள் பகிரங்கமாகப் போனதால் வெளியே தெரிந்தது.

புலிகள் பற்றி தகவல் அறிய தமிழ்க் கட்சிகள் மற்றும் சில முன்னாள் புலி உறுப்பினர்களது தயவை படையினர் நம்பியிருந்தனர்.

ஆனால் தமிழ்க் கட்சிகளுக்குக் கூட புலிகளது புதிய உறுப்பினர்களது விபரங்கள் தெரிவதில்லை. யாழில் மிக இரகசியமாக தம்மோடு பலரை சமீபத்தில் புலிகள் இணைத்துக் கொண்டுள்ளனர்.

இது தவிர தமக்கு தகவல் பெறுவதற்கான வலைப்பின்னல் ஒன்றை யாழ் குடாநாட்டில் புலிகள் உருவாக்கியுள்ளனர்.

சமீபகாலமாக யாழ் குடா நாட்டில் பாரிய தாக்குதல் எதனையும் புலிகள் மேற்கொள்ளவில்லை. ஆனால் தாக்குதல் நடத்தக்கூடிய வசதி அவர்களிடம் இருக்கிறது.

அப்படியிருந்தும் அமைதி காக்கிறார்கள் என்றால் பெரிய இலக்கு ஒன்றை குறிவைத்துள்ளனர் என்றுதான் அர்த்தம்.

மட்டக்களப்பு நகரில் அமைதி காத்து விட்டே கரும்புலித் தாக்குதல் மூலம் ராசிக்கை தீர்த்துக் கட்டினார்கள்.

'ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு'. கெரில்லாக்களும் அப்படித்தான். குறிப்பாக புலிகள் அப்படித்தான் இதுவரை வித்தை காட்டியிருக்கின்றனர்.

புலிகள் பதுங்குவது பெரும் பாய்ச்சலுக்கு என்பதற்கு சமீபத்திய உதாரணம் ராசிக்.

யாழ் குடாநாட்டிலும் பெரும் இலக்குகளை புலிகள் குறிவைத்துள்ளனர் என்றே தகவல்கள் கூறுகின்றன.

வடக்கில் வவுனியாவிலும் புலிகளது தாக்குதல்கள் அதிகமாகியுள்ளன. மூன்று மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டதை அடுத்து நகரில் உள்ள மின்மாற்றிகள் அனைத்துக்கும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் படையினரது சுற்றிவளைப்புகளின் பின்னர் அதற்கு சவால் விடுவதுபோல ஏதாவது ஒரு தாக்குதலை புலிகள் நடத்தி வருகின்றனர்.

வவுனியாவையே ஸ்தம்பித மடைய வைத்து பாரிய சோதனை நடவடிக்கையை படையினர் மேற்கொண்டனர். அதன் பின்னரே நகரின் இதயப்பகுதியில் மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டன.

மேலும் தாக்குதல்களும், நெருக்கடிகளும் அதிகமாகும் அறிகுறியே தெரிகிறது.

●●●



### பொருளாதாரத் தடை



வன்னி பொருளாதாரத் தடையால் ஏற்படும் அவலங்களுக்கு உதாரணமாக இக் குழந்தையின் படம் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. சமீபத்தில் இக் குழந்தை இறந்துவிட்டது என்பது சோகமான செய்தி. இந்த குழந்தையின் சகோதரர் ஒருவர் புலிகளோடு இணைந்துள்ளார்.

நாரதர்

**செ**ன்றவாரம் ராசிக் மீதான தாக்குதல் பற்றிய தகவலில் ஒரு சிறு தவறு நேர்ந்துள்ளது.

ராசிக்கிடம் மோட்டார் சைக்கிள் விற்பனை தொடர்பாக பேசுவதற்கு சென்றபோதே தாஹிர் என்பவரும் கொல்லப்பட்டதாக குறிப்பிட்டிருந்தேன். அது தவறு.

தாஹிருடன் சென்ற நண்பரான லாபிர் என்பவர்தான் மோட்டார் சைக்கிள் வியாபாரமும் செய்பவர். ராசிக்குடனும் பழக்கம் உள்ளவர். இவர் மட்டு எம்.பி ஒருவரது மெய்க்காப்பாளர்.

தாஹிர் ஏறாவூரில் சொந்தமாக நெல் அரிசி வியாபாரம் செய்து வருபவர். திருமணமாகி ஒரு வருடமும் சில மாதங்களும் தான். 4 1/2 மாதக் குழந்தையும் உள்ளது.

லாபிர் நண்பர் என்பதால் அவருடன் கராஜுக்கு சென்றுள்ளார் தாஹிர். லாபிர் கராஜின் உள்ளே நின்றதால் உயிர்தப்பினார்.

ராசிக்குக்கு அருகே நின்றதால் தாஹிர் பலியாகிவிட்டார். இதுதான் நடந்தது.

ராசிக்மீதான தாக்குதல் பற்றி மேலும் சில தகவல்கள்:

தனது ஆள் ஒருவர் கராஜில் மயக்கமானபோது ராசிக், "இந்த வெய்யிலுக்கே இப்படி மயங்கினால், புலியோடு எப்படி தாக்குப்பிடிப்பாய்?" என்று கேட்டாராம்.

அவ்வாறு கூறிய சில நிமிடங்களில் ராசிக்கை நோக்கி கரும்புலி தாக்குதல் நடந்துவிட்டது.

தன்னை நெருங்கிய கரும்புலியை 'டேய் டேய்..' என்று கத்தியபடிதான் தள்ளி விட்டிருக்கிறார் ராசிக்.

ராசிக்கை கட்டிப்பிடித்து உருத்தெரியாமல் சிதறவைப்பதுதான் கரும்புலியின் நோக்கம். ராசிக்கால் தள்ளப்பட்டதால் கட்டிப்பிடிக்க முடியவில்லை.


ராசிக்கை தீர்த்துக்கட்டிய கரும்புலியின் இயக்கப் பெயர் மேஜர் அரசப்பன். மட்டக்களப்பு சந்திவெளியைச் சேர்ந்தவர். சொந்தப் பெயர் சுதாகரன் அல்லது அருட்செல்வம்.

ராசிக் கொலைக்கு புலிகள் வன்னியிலும் உத்தியோக பூர்வமாக உரிமை கூறியுள்ளனர். பலியான கரும்புலி மேஜர் அரசப்பன் என்று மட்டும் தெரிவித்துள்ளனர். சொந்தப் பெயரையோ, ஊரையோ புலிகள் அறிவிக்கவில்லை.

ராசிக்கை தாக்கிய கரும்புலி மட்டு நகரில் ஹொட்டல் ஒன்றில் வேலை செய்தவர் என்று சில செய்திகள் வெளியாகி இருந்தன. அது சரியல்ல. கரும்புலி எனச் சந்தேகிக்கப்பட்ட அந்த இளைஞர் அதே ஹொட்டலில்தான் இன்னமும் வேலை செய்து கொண்டிருக்கிறார்.

கரும்புலி எங்கு காத்திருந்தார்? எங்கிருந்து புறப்பட்டார்? என்பது பற்றி புலனாய்வாளர்களாலும் அறிய முடியவில்லை.

## அதிரடி அய்யாத்துரை



***ராசிக்கை புதைத்த*** இடத்திலிருந்து தலையை வெட்டி எடுத்துப் போய் விட்டார்கள். வன்னிக்கு அனுப்புமாறு உத்தரவாம். இது திடீரென்று பரவிய வதந்தி. மாண்டவருக்கு அனுதாபம் தேடக் கிளப்பப் பட்ட கதை என்றும் கூறுகினம்.

***வடக்கு-கிழக்கு*** மாகாண முன்னாள் அதிகாரக் கட்சியின் செயலாளர் ராசிக்குடன் தனக்குத் தொடர்பில்லை என்று காட்ட பலத்த முயற்சி செய்துவருகிறார். பத்திரிகையாளர்களுக்கு ராசிக் பற்றி தவறான தகவல்களைக் கொடுத்து பிரசுரிக்க கோருகிறாராம். உதாரணத்துக்கு ஒன்று: இந்தியப் படை காலத்திலேயே ராசிக் மத்திய குழு உறுப்பினராகிவிட்டதாக அன்னார் பத்திரிகையாளர்களுக்கு கூறினாராம். ஏன் கூறினார் தெரியுமோ? தனது காலத்தில் அவரை கௌரவிக்கவில்லை என்று காட்டத்தான். ஆனால் உண்மை என்ன தெரியுமோ? அன்னார் செயலாளரான பின்னர் 1993ல் நடந்த மாநாட்டில் செயலரின் விருப்பப்படிதான் மத்திய குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். செய்வதையெல்லாம் செய்துவிட்டு இப்போது "அவர் வேறு, நான் வேறு" என்று கைவிரிக்கிறார் வாழ்க. தோழமை!

***வவுனியாவில் சமாதான*** ஊர்வலத்தில் இயக்க ஒற்றுமை கோஷம் போட்டவையல்லோ? அந்தக் கோஷ சத்தம் வான்வரை எட்டி அடங்குவதற்குள் கழக உறுப்பினர் ஒருவரது வீடு எரிக்கப்பட்ட புகை வானை எட்டிவிட்டது! இதுதான் ஒற்றுமை!

***காரைதீவில் இறுதிச்*** சடங்கில் கலந்துகொண்ட பிரமுகர்களது விவரங்கள் ரெண்டு எழுத்தாரால் திரட்டப்பட்டுள்ளதாம். இதனையறிந்த காரைதீவு பிரமுகர் ஒருவரும் பத்திரிகைகள்மீது கோபமாக உள்ளாராம். கலந்து கொண்டோரின் பட்டியலில் அவர் பெயரையும் பிரசுரித்ததால்தான் கோபமாம். பிரசுரித்தால்தான் தெரியுமோ?

***இலங்கை கிரிக்கெட்*** அணியினர் கடந்த உலகக் கோப்பையுடன் திரும்பியபோது அமைச்சுப் பெருமக்களும், பிரமுகர்களும் போட்டி போட்டு வரவேற்றனர். நடந்து வரும் உலகக் கோப்பை போட்டியில் இருந்து திரும்பிய அணியை வரவேற்க பொலிசார்தான் போயிருக்கினம். கடும் பாதுகாப்புடன் அழைத்து வந்தார்களாம்.

***கிரிக்கெட் ஸ்கோர்*** கேட்டு சலித்துப்போன தென்னிலங்கை வாசகர்கள் தேர்தல் ஸ்கோர் கேட்க தயாராகிவிட்டனர். இம்முறை வன்முறை அதிகமாக இருப்பதற்கான அறிகுறிகள் தெரிகிறது. தொண்டர்கள் குண்டர்களாக மாறத் தயாராகி வருகிறார்களாம்!

***தேனகத்தில் முக்கிய*** பதவியில் உள்ள ஒருவர் மர்மமாக நடந்து கொள்கிறாராம். அவரது இல்லத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரின் பின்கண்ணாடி உடைந்ததை, ரெண்டு எழுத்தாரின் குண்டுத்தாக்குதல் என்று கூறினாராம். பரிசோதித்ததில் குண்டுத் தாக்குதல் காரணமல்ல என்று தெரிய வந்ததாம். இல்லாத கதையை ஏன் சோடிக்கிறார் என்று ஊழியர்கள் பலர் புதிராகப் பேசுகிறார்கள்.

***கொழும்பில் தட்டுப்பாடான*** சமாச்சாரங்களில் ஒன்று- செத்த வீட்டுக்கு ஐயர் தேடுவது. யாழ் மக்கள் பெருமளவில் கொழும்புக்கு வந்தபின்னர் இந்தத் தட்டுப்பாடும் ஏற்பட்டுப் போச்சு. சமீபத்தில் யாழ்ப்பாணத்து ஆள் ஒருவர் மண்டையைப் போட்டுவிட்டார். செத்த வீட்டுக்கு ஐயர் கிடைக்காமல், மாத்தளைக்கு கார்பிடிச்சுப் போய் ஐயரை அழைத்து வந்தவையாம்!

***யாழில் அதிகார நிர்வாக*** விடயம் தடங்கலானதால், தம் ஆளுமையைக் காட்ட ஆளுநர் போயிருக்கிறார். ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி இருக்கிறது. 'ஜெனரல்கள் ஓய்வதில்லை.' நம்நாட்டு ஜெனரல்கள் விஷயத்திலும் அது சரிதான் போலகிடக்கு! ஓய்வு பெற்றதாக அறிவிப்பு வந்த பின்னரும், ஓய முடியாத பதவிகள் தரப்படுகிறதல்லவோ!

***கொழும்பிலும் மழை.*** இங்கிலாந்திலும் மழை. இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் இந்த விஷயத்தில் ஒற்றுமை. இதில் மட்டுமல்ல, கிரிக்கெட்டில் லீக் போட்டியில் தோல்வி கண்டதிலும் ஒற்றுமைதான்!

இம்முறை பொன்மொழி உபயம்: பேரறிஞர் பெர்னாட்ஷா.

**"அடிபட்டவன் உங்களைத் திருப்பி அடிக்காவிட்டால் அவனிடம் எச்சரிக்கையாக இருங்கள்! ஏனெனில் அவன் உங்களை மன்னிப்பதுமில்லை! நீங்கள் அவனை மறக்க முடிவதுமில்லை!"**



படிப்பகம்

www.padippakam.com

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

227

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# மலையகத்தில் வரதன் தகவலும் - முற்றுகையும்

ரஞ்சன் விஜயரத்தினா கொலை, மற்றும் கூட்டுப்படை நடவடிக்கை தலைமையக குண்டுவெடிப்பு இரண்டுக்கும் பொறுப்பாக இருந்தவர் வரதன்.

வரதனது சொந்தப் பெயர்: வரதராஜா சிறீதரன். தம்பாப் பிள்ளை மகேஸ்வரனின் தமிழீழ இராணுவத்தில் முக்கிய தளபதியாக இருந்தவர்.

1984 ஜனவரி மாதம் 13ம் திகதி மட்டக்களப்பில் காத்தான்குடி வங்கி கொள்ளையிடப்பட்டது. 3 கோடியே 60 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டதாக செய்திகள் வெளியாகின.



வரதன்

இக் கொள்ளையில் வரதன் நேரடியாக பங்குகொண்டார். 1984 பெப்பரவரி 28ம் திகதி மட்டக்களப்பில் வரதன் கைது செய்யப்பட்டார்.

அப்போது எடுக்கப்பட்ட படங்கள் பொலிசாரிடம் இருந்தன. வரதனை கைது செய்ய உதவினால் பத்து இலட்சம் ரூபாய் சன்மானம் தரப்படும் என்று பொலிசார் அறிவித்தனர்.

1984ல் கைதானபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களையே பத்திரிகைகளுக்கு வழங்கினார்கள்.

அந்தப் படத்தில் உள்ள தோற்றத்துக்கு முற்றிலும் மாறான தோற்றத்துடனேயே 1991இல் வரதன் காணப்பட்டார்.

## உதவி

எனினும் கொழும்பில் தொடர்ந்து தங்குவது பாதுகாப்பில்லை என்பதால் கொழும்பைவிட்டு தப்பிச் செல்ல திட்டமிட்டார்.

வவுனியாவிலும் கண்காணிப்பு இருந்ததால், சில காலம் மலையகத்தில் தங்கியிருக்க முடிவு செய்தார்.

அப்போது மலையக மக்கள் முன்னணியுடன் புலிகளுக்கு தொடர்பு இருந்தது. காதர், சந்திரசேகரன் போன்றோர் புலிகளை ஆதரித்தனர்.

சந்திரசேகரன் முதலில் புளொட்டுடன் உறவை வைத்திருந்தார். அவர்களது ஆதரவுடன் மலையகத்தில் தேர்தலிலும் போட்டியிட்டார்.

வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள். மலையக தமிழ் மக்களும் தேசிய இனமாக உருப்பெற்றுள்ளனர். மலையக தமிழ் மக்களது போராட்டமும், வடக்கு-கிழக்கு தமிழ் மக்களது போராட்டமும் ஒன்றுக்கொன்று அனுசரணையாக முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே அப்போது காதர், சந்திரசேகரன் போன்றோரது நிலைப்பாடாகும்.

அதனால் புலிகளுக்கு ஆதரவு அளிப்பதோடு, புலிகளிடம் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்களுக்கு ஆயுதப் பயிற்சி பெறும் எண்ணங்களும் இருந்தன.

மலையகத்தில் சிலகாலம் தலைமறைவாக இருக்க எண்ணிய வரதன் மலையக மக்கள் முன்னணியின் உதவியை நாடினார். அவர்களும் உதவ முன்வந்தனர்.

கொழும்பிலிருந்து எப்படித் தப்பிச் செல்லுவது? அதற்கும் திட்டம் இருந்தது.

கொழும்பிலிருந்து மலையகப் பகுதிகளுக்கு குளிர்பானம் விநியோகிக்க சென்று வரும் லொறி ஒன்று இருந்தது.

அந்த லொறியில் மலையகம் செல்ல தீர்மானித்தார். 'மாலா லொறி' என்பது அதன் பெயர். பாலச்சந்திரனுக்கு சொந்தமானது.

வரதனை கொண்டு சென்று தலவாக்கலையில் பத்திரமாக இறக்கியது 'மாலா லொறி'.

தலவாக்கலை மலையக மக்கள் முன்னணிக்கு ஆதரவு அதிகமான பகுதி. அங்கு பண்ணை ஒன்றில் வரதன் மறைந்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

ராமகிருஷ்ணன் என்னும் ஆசிரியருடன் தங்கி இருந்தார் வரதன்.

ராமகிருஷ்ணனும், அவரது சகோதரர் ராஜாராமும் மலையக மக்கள் முன்னணியின் தீவிர உறுப்பினர்கள்.

ராமகிருஷ்ணனுடன் தங்கியிருந்த வரதனை மலையக மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் சந்தித்து உரையாடினார்கள்.

வரதன் மறைந்திருந்த இடம் சுலபமாக அடையாளம் காணக்கூடிய இடமல்ல. பொலிசார் கண்டுபிடித்திருக்க முடியாது.

ஆனால் வரதன் பற்றிய துல்லியமான தகவல் ஒன்று பொலிசாருக்கு எட்டியது.

தகவலைக் கொடுத்தவர் ஈ.பி.ஆர்.எல்.எ∴ப். இயக்கத்தின் முன்னாள் மத்திய குழு உறுப்பினர்.

ஈ.பி.ஆர்.எல்.எ∴ப். செயலதிபரான சுரேஸ் பிரேமச்சந்திரன் ஊடாகவே புலனாய்வாளர்களுடன் தொடர்பு கொண்டார் அந்த மத்திய குழு உறுப்பினர்.

அப்போது ஈ.பி.ஆர்.எல்.எ∴ப். அமைப்புடன் பொலிசாருக்கும், படையினருக்கும் நல்லுறவு நிலவவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எ∴ப். உறுப்பினர்கள் சிலர் மர்மமான முறையில் கடத்தப்பட்டனர்.

அதனால் வரதன் பற்றிய தகவலை கொடுத்து, அந்த இடைவெளியை நிரப்ப முயன்றார் சுரேஸ்.

எம்.பிகளது வாசஸ்தலமான சிராவஸ்தியில் சுரேசின் அறையில்வைத்து புலனாய்வாளர்களுக்கு தகவல் தரப்பட்டது.

## முற்றுகை

தமக்கு கிடைத்த தகவலை அடுத்து துரித கதியில் செயற்பட்டனர் புலனாய்வாளர்களும், பொலிசாரும்.

தலவாக்கலைக்கு விரைந்த பொலிஸ் அணி ராமகிருஷ்ணனை கைது செய்து, வரதனை உயிரோடு பிடிக்க முனைந்தது.

வரதனை உயிரோடு பிடித்தால்தான் பல தகவல்களை பெறமுடியும். கொழும்பில் புலிகளது மறைவிடங்களை பிடிக்க முடியும்.

ஆனால் வரதனோ எந்நேரமும் விழிப்பாக இருந்திருக்கிறார். மலையகத்தில் பதுங்கி இருப்பதால், ஆபத்தில்லை என்று அலட்சியமாக இருக்கவில்லை.

தனது இருப்பிடத்தை சுற்றி முற்றுகை நடப்பதை எப்படியோ ஊகித்துக் கொண்டார்.

பொலிசார் ராமகிருஷ்ணனை துப்பாக்கி முனையில் மிரட்டி, 'வரதனை அழை'க்குமாறு கட்டளையிட்டனர்.

ராமகிருஷ்ணனும் வரதனை வெளியே வருமாறு தயங்கித் தயங்கி கூப்பிட்டிருக்கிறார்.

அவரது குரலின் வழக்கத்துக்கு மாறான பதற்றம்கூட வரதனை மேலும் உஷாரடைய வைத்திருக்கலாம்.

உடனடியாக சூழலை உணர்ந்து கொண்ட வரதன் சயனைட்டை விழுங்கிவிட்டார்.

உள்ளே பிரவேசித்த பொலிஸ் அணிக்கு ஏமாற்றம் காத்திருந்தது. வரதனை உயிரோடு பிடிக்கமுடியவில்லை.

ஜூலை 04ம் திகதி 1991இல் வரதன் தன்னுயிரை மாய்த்துக்கொண்டார். இதனையடுத்து வரதன் பணியாற்றிய கொழும்பு வீடியோ கடை உரிமையாளர் உட்பட பலர் கைதானார்கள்.



கூட்டுப்படை தலைமையகத் தாக்குதலில் பங்கெடுத்த கரும்புலி இவர்தான். சந்திரன், வல்வெட்டித்துறை

தலவாக்கலையில் வெள்ளை வேனில் செல்லும் பொலிசாரால் பெருமளவில் இளைஞர்கள் கைதாகினர். அதனால் தலவாக்கலையிலும் வெள்ளை வேன் பீதி சிலகாலம் தொடர்ந்தது.

மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்.

மலையக மக்கள் முன்னணியை ஓரம்கட்ட நினைத்த மலையக அரசியல் சக்திகள் சிலரும் சந்திரசேகரன் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட தூபமிட்டனர்.

'இப் பிரச்சனையில் நாம் தலையிட முடியாது!' என்று இ.தொ.கா.தலைவரான தொண்டமான் பகிரங்கமாகவே கூறியிருந்தார்.

சந்திரசேகரன் குற்றம் செய்துவிட்டார் என்பது போன்றே தொண்டமானின் கருத்துக்கள் வெளியாகின.

அன்று சக்திமிக்க அமைச்சராக இருந்தவர் தொண்டா. அவர் கூறினால் பிரேமதாசா மறு பேச்சின்றி நிறைவேற்றுவார். அந்தளவுக்கு இ.தொ.காவுக்கு மரியாதையும், முக்கியத்துவமும் கொடுத்திருந்தவர் பிரேமதாசா.

தனது முன்னாள் தொண்டரான சந்திரசேகரனை தொண்டா நினைத்திருந்தால் விடுவித்திருக்க முடியும்.

ஐ.தே.கட்சி ஆட்சி முடிவடையும் இறுதிக் கட்டத்தில்தான் சந்திரசேகரன் விடுதலையானார்.

இ.தொ.காவில் இருந்து விலகிய முன்னாள் அமைச்சர் செல்லச்சாமியின் தலையீட்டால்தான் சந்திரசேகரன் விடுதலை விரைவுபடுத்தப்பட்டது.

## பிரசுரம்

1991 ஜூலையில் ஏனைய இயக்க உறுப்பினர்களுக்கு புலிகளால் பிரசுரம் ஒன்று விடுக்கப்பட்டது.

அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"தோழனே! உனது கண்களில் என்னைக் கொன்றுவிடும் துடிப்பு தெரிகிறது. பணக்கார வீட்டு நாய்க்கு உன்னை ஒப்பிட்டுச் சொன்னதால் கோபமடைகிறாய்.

உனக்கு நான்தானே வேண்டும். என் உயிரைப் பறிப்பது ஒன்றுதானே உன் இலட்சியம். அதன் மூலம் நான் கட்டிக்காக்கும் எமது இலட்சியத்துக்கு வேட்டு வைப்பது தானே உனது எசமானின் நோக்கம்.

இதற்காகத்தானே உனது தாயைக் கொன்றவர்களை, தங்கையை வதைத்தவர்களை, தந்தையை அழித்தவர்களை, தர்மத்தை சாய்த்தவர்களை அணைத்து நிற்கிறாய். பாவம் என் மேலுள்ள கோபம் உன்னை எங்கு இட்டுச் சென்றுள்ளது பார்த்தாயா?

வாழ வழி தெரியாதவனே! உனக்கும் வாழ்வமைக்கத்தானே நானும் களமிறங்கினேன். வழியில் நீ மாறிவிட்டாய். இருப்பினும் உனது பாதையை மாற்று. எனது பாதையில் வந்து சேர்ந்துகொள்!

எனது மக்கள் சாயும்போது அதனை தட்டிக்கேட்க நான் முனையும் போதெல்லாம், நீ எதிரிக்கு துணைபோகிறாய்.

கொக்கட்டிச் சோலையிலும், கும்புறு முனையிலும், மகிழடித் தீவிலும் சோகம் சூழ நான் காரணம் என்கிறாய்.

நேரத்திற்கு ஒரு நிறம் காட்டும் தோழனே! எண்பதாம் ஆண்டுவரை நாம் அழுவதைத் தவிர வேறென்ன செய்தோம்? அப்பொழுது எம்முயிர்கள் பறிக்கப்பட வில்லையா? கேட்கிறேன், எங்கே நழுவப் பார்க்கிறாய்?" என்று கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

1991 ஜூலையில் பிரபாகரன் தலைமையில் புலிகளின் தளபதிகள் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடினார்கள்.

(தொடர்ந்து வரும்)

---

# சிவராசனுடன் சில நாட்கள்

ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி தூக்குத் தண்டனையின் விளிம்பில் இருந்து தப்பி வந்தவர் ரங்கநாத். கன்னடக்காரரான இவர் தனது அனுபவங்களை விகடனில் எழுதியுள்ளார். அதில் இருந்து முக்கிய பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

மனித வெடிகுண்டுக்கு ராஜீவ் இரையாகிப்போன மூன்றாம் மாதம்... ஆகஸ்ட் 2-ம் தேதி... அதுதான் என் வாழ்க்கைப் பாதையை நரகம் நோக்கித் திருப்பிவிட்ட தினம்.

நேரம் இரவு பத்து மணி. யாரோ கதவைத் தட்டினார்கள். மனைவி சமையல் அறையில் இருந்தாள். கதவைத் திறந்தேன். என்னை உந்தித் தள்ளிவிட்டு, உள்ளே வந்து கதவைச் சாத்திக்கொண்ட நபரின் கையில் துப்பாக்கி மின்னியது.

அந்த ஆள் இராணுவ மிடுக்குடன் இருந்தார். உறுதியான உடல் கொண்டவர். வெளியே பேய்த்தனமாக ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது ஒரு கார். எந்த செகண்டிலும் கார் சீறிப் பாயத் தயாராக இருப்பது புரிந்தது.

முதலில் அந்த நபரை திருட வந்தவர் என்றுதான் நினைத்தேன். என் நெற்றியில் கைத்துப்பாக்கியை வைத்து "நீதான் ரங்கநாத்தா?" என்றார்.

"ஆமாம்" என்றேன்.

"உன்னை நான் ஒன்றும் செய்ய மாட்டேன். இரண்டு மூன்று நாட்கள் மட்டும் உன் வீட்டில் தங்க இடம் தரவேண்டும்." என்றார். "எதற்காக? நீங்கள் யார்?" என்று கேட்டேன். எனக்குத் தெரிந்த சிவாஜி நகர் சர்க்கிள் பகுதியைச் சேர்ந்த ராஜன் என்பவரது பெயரைச் சொல்லி அவர்தான் இங்கு தங்க அனுப்பி வைத்ததாகச் சொல்லி துப்பாக்கியை என் நெற்றியில் இன்னும் பலமாக அழுத்தினார்.

நான் ஸ்விட்சர்லாந்தில் வேலை செய்தபோது நிறைய இலங்கைத் தமிழர்கள் அறிமுகம். விடுதலைப் புலி இயக்கத்தினரின் அமைப்புக்களும் அங்கு இருந்தது.

நான் அடிக்கடி அவர்களைப் போய்ப் பார்ப்பேன். இலங்கைத் தமிழர் பேச்சு நடையும் எனக்குத் தெரியும்.

வந்தவர் ஒரு இலங்கைத் தமிழர் என்று அவர் பேச்சில் புரிந்தது. கையிலிருந்த துப்பாக்கியை பார்த்ததுமே, அநேகமாக இது தமிழ் ஈழத்துக்குப் போராடும் இயக்கத்தின் ஆள்தான் என்று புரிந்துகொண்டேன்.

வந்தவர் பெயர் சுரேஷ் மாஸ்டர் என்று பிறகு தெரிந்தது. வெளியே காரில் இருந்தவர்களும் ஒவ்வொருவராக உள்ளே வந்தனர்.

வந்தவர்களில் ஒருவர் மெஷின்கன்னை துணியில் சுற்றிக்கொண்டு வந்தார். வந்தவர்கள் ரொம்ப தெரிந்தவர்கள் மாதிரி எடுத்த எடுப்பிலேயே என்னிடம் சரளமாகப் பேசினார்கள்.

வந்த ஆறு பேரில் ஒருவர் சுடிதார் அணிந்திருந்த பெண். சிறிது நேரத்துக்குப் பின்னால் கொஞ்ச கொஞ்சமாக நிதானம் வந்தபோது என்னைச் சுற்றி உலகம் கிறுகிறுத்தது.

அந்தப் பெண் சுபா என்று புரிந்ததுமே, தாடை எலும்பு மேடேறிக் கிடந்த சுமாரான உயரம் கொண்ட நபர்தான் ஒற்றைக்கண் சிவராசன் என்பதும் சந்தேகமில்லாமல் எனக்குப் புரிந்து போனது.

## யார் இவர்கள்?

சமையல் அறையில் இருந்து வந்த என் மனைவி, துப்பாக்கியால் நான் மிரட்டப்படுவதைப் பார்த்து உறைந்தாள். அவளுக்கு என் மீதே சந்தேகம். "யார் இவர்களெல்லாம்? எதற்கு உங்களை மிரட்டுகிறார்கள்? இவர்களிடம் கடன் ஏதாவது வாங்கியிருக்கிறீர்களா?" என்று கிறீச்சிட்ட குரலில் என்னை நோக்கிச் சத்தமிட்டாள்.

சிவராசன் உடுப்பு எல்லாம் மாற்றிக்கொண்டு வெளியே வந்து ஹாலில் உட்கார்ந்தார். அவரை இனம் கண்டுகொண்டு என் மனைவியின் முகம் வெளுத்து தடுமாறியபடி பின்வாங்கினாள்.

சிவராசன் சுரேஷ் மாஸ்டரிடம் "இந்த வீடு அரேன்ஜ்மெண்ட் சரியில்லை. பக்கத்தில் நிறைய வீடு இருக்கு. எல்லோரும் பார்ப்பார்கள்." என்றார். உடனே சுரேஷ் மாஸ்டர் என்னிடம், "மூன்று நாட்கள்தான் இங்கு இருப்போம். விபரீதமாக ஏதும் நடக்காமல் பார்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு" என்றார்.

என்னைத் தேடி இவர்கள் ஏன் வரவேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. இவர்களுக்கு வழிசொல்லி அனுப்பிய ராஜனையும் போய்ப்பார்க்க முடியவில்லை. இரவு நேரத்தில் ஒருவர் மாறி ஒருவர் கண் முழித்துக்கொண்டு காவல் காத்தனர்.

பால்காரர்கள், காய்கறிகாரர்கள் என்று யாரையும் வீட்டுக்குள் வரவிடாமல், வெளியிலேயே நிறுத்தி பேசி அனுப்பச் சொன்னார்கள். அவசியம் வெளியே போகவேண்டும் என்றால் கூட சிவராசன் யாரையாவது ஒருவரை எங்களோடு அனுப்பி வைப்பார். நாங்கள் யாருக்காவது தகவல் சொல்லிவிடுவோம் என்ற பயத்தையும் எச்சரிக்கையையும் ஒவ்வொரு நொடியும் அவர்கள் முகத்தில் பார்க்க முடிந்தது.



ரங்கநாத்

இலங்கை போராட்டத்தில் காயமடைந்த இருபத்தெட்டு பேரை பெங்களூர் இந்திரா நகரில் உள்ள ஒரு வீட்டில் குடியமர்த்தியிருந்தனர். இவர்களை வெவ்வேறு இடங்களில் கொண்டுபோய் தங்க வைப்பதோடு அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றனர்.

அவர்கள் கொண்டுவந்த மாருதி ஜிப்ஸி காரின் கலரையும் மாற்றித் தரச் சொன்னார்கள். செய்ய முடியாது என்று சொல்லும்போதெல்லாம் விசையில் கை வைத்தபடி சாவதானமாக துப்பாக்கியைத் தூக்கிக் காட்டினார்கள்.

நான் வெளியே போகும்போது, அப்படியே தப்பி ஓடி ஏதாவது தகவல் கொடுத்தால் உள்ளே எனது மனைவிக்குத்தான் ஆபத்து. அதனால் அவர்கள் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தேன்.

மாருதி ஜிப்ஸி காரின் கலரை மாற்றிவிட்டு இந்திரா நகரில் தங்கியிருந்த புலிகளைப் பார்க்கப் போனோம். என்னோடு சுரேஷ் மாஸ்டரும் கீர்த்தி என்ற டிரைவர் அண்ணாவும் (இவர்கள் எல்லாம் பின்னர் நடைபெற்ற சி.பி.ஐ. வேட்டையில் இறந்து போனார்கள்) வந்தனர்.

டிரைவிங்கில் கீர்த்தி மிகப் பெரிய எக்ஸ்பர்ட் என்று தெரிந்துகொண்டேன். இந்த கீர்த்திக்கு உதவியாக இன்னொரு டிரைவர் ரெங்கன். இவர்கள் தவிர அம்மான், நேரு ஆகியோர் இருந்தனர். இவர்களது பிடியில் நானும் மிருதுளாவும் இருந்தோம்.

அவர்கள் சொன்ன இடத்துக்கெல்லாம் கூடவே சென்றேன். ஆனைக்கல்லி என்ற இடத்தில் புரோக்கர் மூலமாக ஒரு வீடு பார்த்து, அட்வான்ஸும் கொடுத்தோம். பணத்தை அவர்களே கொடுத்தனர்.

உடனடியாக அன்றே இரண்டு 'ஷி∴ப்ட்'டாக காயமடைந்தவர்களையெல்லாம் இந்த வீட்டுக்குக் கொண்டு வந்தோம். ரொம்ப சீரியஸாக இருந்த சிலரை ஆஸ்பத்திரியிலும் கொண்டுபோய் சேர்த்தோம்.

மறுநாள் பத்திரிகையில் வந்த செய்தி என்னை அதிர்ச்சியடைய வைத்தது. இந்திரா நகரில் தங்கியிருந்த தீவிரவாதிகள் தப்பி ஓட்டம் என்றது அந்தச் செய்தி.

கோவையில் விக்கியை பொலிஸார் பிடித்து விசாரித்தபோது, அவர் சிவராசன் இந்திரா நகரில் இருப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். விக்கியிடம் சி.பி.ஐ. உண்மைகளைக் கறந்துவிட்டது என்று எப்படியோ சிவராசனுக்கு தகவல் வந்து சேர... அதைத் தொடர்ந்து தான் இந்திரா நகரில் இருந்தவர்களை அவசர அவசரமாக இடம் மாற்றி இருக்கிறார்கள்.

'ஆனைக்கல்லியில் பார்த்த புது வீட்டிலும் பாதுகாப்பு இல்லை. காயம் பட்டவர்கள் இங்கே இருப்பது கண்டு பிடிக்கப்பட்டால் ஆபத்து' என்று பேசிக் கொண்டார்கள். வேறு இரு இடங்களைத் தேடும்படி என்னிடம் ஆணையிட்டனர்.

## வீடு தேடல்

சுற்றி வர யாருமே இல்லாத இடமாக வேண்டும் என்று கேட்டனர். ஆஞ்சநேயர் கோயில் உள்ள முத்தத்தி என்ற ஊரில் எனக்குத் தெரிந்தவர்கள் இருந்தனர். அங்கு வாடகைக்கு வீடு தேடினேன். அது வீரப்பன் நடமாடும் ஏரியா. காவிரி நதி பக்கத்திலேயே ஓடுகிறது.

இதே மாதிரி பீருட்டா என்ற இடத்திலும் ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்தோம். ஆனைக்கல்லியிலிருந்தவர்களை மீண்டும் இந்த இரு இடங்களுக்கும் அதே காரில் கொண்டு வந்து சேர்த்தோம்.

இதெல்லாம் அசுர கதியில் நடந்து கொண்டிருந்தாலும், "எனக்கொரு தனி வீடு வேண்டும்!" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தார் சிவராசன். இவர்களுக்கெல்லாம் எங்கள் வீட்டில்தான் சமையல்.

பெங்களூரில் ராகி களிதான் விசேஷம், மிருதுளா அதைச் சமைத்துக் கொடுத்தபோது, அவர்களுக்கு அது பிடிக்கவில்லை. பிறகு அவர்களே சமைத்துக் கொண்டனர். சிவராசன் அடிக்கடி 'பிளாக் டீ' (தேநீர்) குடிப்பார்.

தன்னையும் சுபாவையும் தேடி சி.பி.ஐ. படும் அவஸ்தைகள் ஒரு கட்டத்துக்கு மேல் தமிழ்ப் பத்திரிகைகளில் கார்ட்டூன்களாகவும், ஜோக்குகளாகவும் வருவதை சுபாவிடம் காட்டி விழுந்து விழுந்து சிரிப்பார்.

(இன்னும் கூறுவார்)



படிப்பகம்

www.padippakam.com

# யாழில் நடப்பது

## யார் ஆட்சி? யார் நிர்வாகம்?

அலசுவது - இராஜதந்திரி

யாழ்-குடாநாட்டில் அரச நிர்வாகங்களுக்கான வாரத்தில் இரண்டு நாள் தடையை விடுதலைப் புலிகள் தற்காலிகமாக தளர்த்தியுள்ளனர்.

கடந்த ஆண்டு மட்டக்களப்பில் மின்சார விநியோகத்தை நிறுத்தி வைத்திருந்த புலிகள் பின்னர் தாமாக முன்வந்து அனுமதி அளித்திருந்தனர்.

அதுபோன்றே தற்போது யாழ் குடாநாட்டில் அரச அலுவலகங்களை செவ்வாய், வெள்ளி ஆகிய இருநாட்களிலும் இயங்காமல் வெற்றிகரமாக தடுத்திருந்தனர். பின்னர் தாமாகவே முன்வந்து அத் தடையை நீக்கியுமுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பான அரசின் பிரசாரங்கள் மற்றும் அரசினதும், படையினரதும் தந்திரங்கள் என்பவற்றை முறியடிக்கவே புலிகள் முயன்று வருகின்றனர்.

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை பொருளாதார தடையால் முற்றுகையிட்டபடி, படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை அபிவிருத்தி நிறைந்த பகுதிகள்போல் காண்பிக்க ஆட்சியாளர்கள் முயன்றனர்.

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தைவிட, புலிகள் இல்லையானால் அபிவிருத்திகள் நடக்கும் என்று மக்களுக்கு ஆசை காட்டும் நோக்கமே மேலோங்கியிருந்தது.

புலிகளுக்கு எதிராக ஆட்சியாளரும், படையினரும் உத்தி ஒன்றை பயன்படுத்த நினைக்கும்போது, அதனை முறியடிக்க புலிகளும் முனைவர் என்பது எதிர்பார்க்கப்பட வேண்டியதேயாகும்.

'நாமே உங்களுக்கு மின்சாரம் தருகிறோம்' என்று மட்டக்களப்பில் ஆட்சியாளர்கள் கூறியபோது, 'நாம் அனுமதிப்பதால்தான் அதனை செய்ய முடிகிறது' என்று நிரூபிக்கவும், மக்களுக்கும் அதனை உணர்த்தவும் புலிகள் தீர்மானித்தனர்.

அதன் காரணமாகவே மட்டக்களப்பில் மின்சார விநியோக சீர்குலைவை புலிகள் ஆரம்பித்தனர். படையினரும், அரசும் எத்தனையோ முயற்சிகள் மேற்கொண்டும் பயன் ஏற்படவில்லை.

திருத்த வேலைகளுக்கு செல்லுமாறு மின்சார சபை ஊழியர்கள் படையினரால் கோரப்பட்டனர். புலிகளின் தடையைமீறி திருத்த வேலைகளுக்கு செல்ல முடியாதென அவர்கள் மறுத்திருந்தனர்.

ஆட்சியாளரும், அவர்களது படை பலமும் மட்டக்களப்பில் இருளை அகற்ற முடியவில்லை என்பதும், புலிகள் அனுமதித்தால் மட்டுமே மின்சார விநியோகம் சீராகும் என்பதும் தெட்டத் தெளிவாகியது.

இதன் பின்னரே புலிகள் தாமாக முன்வந்து தடையை நீக்கினார்கள். இதனையடுத்து தமிழ், முஸ்லிம் மக்கள் புலிகளின் தடை நீக்கத்தை வரவேற்றிருந்தனர்.

யாழ் குடாநாட்டிலும் அன்றாட தேவைகள் சிலவற்றை ஓரளவு தீர்த்து வைப்பதுமூலம், அடிப்படை உரிமைகளுக்கான போராட்டத்தில் அங்குள்ள மக்களை வெறுப்புக் கொள்ள செய்துவிடலாம் என்பதே படையினரின் நோக்கமாக இருந்து வருகிறது.

இனப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காண்பது, அதன் விளைவுகளை தென்னிலங்கை தேர்தல் களத்தில் அரசியல் மூலதனமாக பயன்படுத்துவது என்பதுதான் இன்றைய ஆட்சியாளரின் மிகத் தெளிவான வேலைத்திட்டமாகும்.

அதேபோல வடக்கு-கிழக்கில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களை இன உரிமை போராட்டத்தில் இருந்து திசை திருப்புவதுடன், அடங்கி ஒடுங்கி வாழக்கூடிய மனப்பக்குவத்திற்கு உள்ளாக்குவதுமே படையினரின் வேலைத்திட்டமாகும்.

இத்தகைய வேலைத் திட்டங்களுக்கு அப்பாற்பட்டதாக, இவற்றுக்கு மாறான வேலைத்திட்டங்களோ, அபிவிருத்தி திட்டங்களோ வடக்கு-கிழக்கில் நடைபெறப் போவதில்லை.

மின்சாரம் வழங்குவது, தொலை பேசி இணைப்புக்கள் வழங்குவது, அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவதாக பெரிதாக பிரஸ்தாபிப்பது போன்றவையும் மேற்கண்ட வேலைத் திட்டங்களுக்கு



துணையான நடவடிக்கைகளேயாகும்.

மக்களுக்கு ஆசைகாட்டி புலிகளை தனிமைப்படுத்துவது ஒரு நோக்கம். இன்னொரு முக்கிய நோக்கமும் இருக்கிறது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதி என்பதால் வெளிநாடுகள் பல நிதியுதவி செய்வதற்கு முன்வந்துள்ளன.

சமீபத்தில் உலக வங்கி வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காக மட்டும் 17 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாக வழங்கியுள்ளது.

ஏற்கனவே பல நூறு கோடி ரூபாய்கள் பல்வேறு உலக நாடுகளால் வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காக என்று அள்ளிக் கொடுக்கப்பட்டன.

குடாநாட்டை கைப்பற்றிய பின்னர் அங்கு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதாக கூறியும் பெருமளவான நிதி உதவிகள் பெறப்பட்டன.

நிதியைக் கொடுத்துவிட்டு அந்தந்த நாடுகள் தம்பாட்டில் இருந்து விடுமானால், வடக்கு-கிழக்கில் எத்தகைய அபிவிருத்திகளும் நடைபெற்றிருக்க மாட்டாது.

ஆனால், நிதியைக் கொடுத்த நாடுகளின் பிரதிநிதிகள், உலக வங்கி பிரதிநிதிகள் போன்றோர் குறிப்பிட்ட பகுதிகளுக்கு நேரடியாக விஜயம் செய்வார்கள். தாம் கொடுத்த நிதிக்கு ஒரு பணிகூட நடைபெறவில்லை என்று தெரிந்தால் நிதி உதவியை நிறுத்தி விடுவார்கள்.

எனவேதான், வடக்கு-கிழக்கில் தமது கட்டுப்பாட்டு பகுதிகளில் சில அபிவிருத்திப் பணிகளை செய்ய அரசு முன்வருவதுண்டு.

யாழ் குடாநாட்டுக்கு அடிக்கடி வெளிநாட்டு பிரமுகர்கள் செல்கிறார்கள் என்றால், குடாநாட்டை கூறி பல நாடுகளிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது என்பதே அர்த்தமாகும்.

யாழ் குடாநாட்டுக்கு அவசரமாக மின்சாரம், தொலைபேசி என்பவை வழங்கப்பட்டதற்கும், உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட்டதற்கும் நிதியுதவி செய்யும் நாடுகளுக்கு 'ஷோ' காட்டுவதும் ஒரு முக்கிய காரணமாகும்.

யாழ் குடாநாட்டில் மாநகர சபை உட்பட உள்ளூராட்சி சபைகள் ஒழுங்காக இயங்குவதாக ஆட்சியாளரால் காண்பிக்க முடியவில்லை.

அவ்வாறு காண்பிக்க முடிந்திருந்தால் அதனை வைத்தே மேலும் பெருமளவான நிதி உதவியை ஆட்சியாளர்கள் பெற்றிருப்பார்கள்.

'நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழி ஒடி புல்லுக்கும் ஆங்கே பொசியும்' என்று கூறுவார்கள். வடக்கு-கிழக்கை பொறுத்த வரை அவற்றின் பெயரால் பெறப்படும் நிதிகள் தென்னிலங்கை அபிவிருத்திகளுக்கு நதியாக பாய்ந்த பின்னரே, வடக்கு-கிழக்கை புல்லாக கருதி கொஞ்சம் பொசிவதுண்டு.

உதவி வழங்கிய நாடுகளுக்கு கணக்கு காட்டும் தேவை இல்லையானால் புல்லாகக்கூட வடக்கு-கிழக்கு கருதப்பட்டிருக்குமா என்பது சந்தேகமே.

இந்நிலையில் குடாநாட்டில் இயல்பு நிலை திரும்பிவிட்டதாகவும், சிவில் நிர்வாகமும், மக்களால் தெரிவான நிர்வாகமும் கோலோச்சுவதாகவும் வெளியுலகுக்கு காண்பிக்க ஆட்சியாளர்கள் தொடர்ந்து முயன்று வருகின்றனர்.

ஆனால் குடாநாட்டில் படையினரின் உத்தரவின்றி அரச நிர்வாகம் அசையமுடியாது. யாழ் அரச அதிபர் முதற்கொண்டு சகல அரச அதிகாரிகளும் படையினரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தே செயற்பட்டு வருகின்றனர்.

யாழ் மாநகர முதல்வராக இருந்த சிவபாலன் தான் பலியாவதற்கு சில நாட்களுக்கு முன்னர் விடுத்த அறிக்கையில், 'படையினர் எங்கும் ஆதிக்கம் செலுத்துவதால் அபிவிருத்திப் பணிகள் எதனையும் மாநகர சபையால் செய்ய முடியாதுள்ளது' என்றே கூறியிருந்தார்.

யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சி சபைகளும் படையினரின் விருப்புகளுக்கு மாறாக செயற்பட முடியாது.

படையினரது போக்குவரத்து தேவைகளுக்கு தெருக்கள் அவசியம் என்பதால், அவற்றை அமைப்பதற்கு உள்ளூராட்சி சபைகளுக்கு சுதந்திரம் தரப்பட்டுள்ளது.

ஆனால் மக்களுக்கான கப்பல் போக்குவரத்தை நடத்துவதற்கு யாழ் அரச அதிபரால் எதுவும் செய்ய இயலாது. பாதுகாப்பு அமைச்சே முடிவுசெய்ய வேண்டும்.

குடாநாடு தொடர்பாக உண்மைக்கு மாறான ஒரு சித்திரத்தை வெளியுலகுக்கு ஆட்சியாளர் காண்பித்து வருவதையிட்டு எந்தவொரு தமிழ்க் கட்சியும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

குடாநாட்டு மக்களது அன்றாட வாழ்க்கையை அடிமை முகாம் வாழ்க்கையாக மாற்றுகின்ற கெடுபிடிகளைப் பற்றியும் தமிழ்க் கட்சிகள் எதிர்த்துப் போராட முன்வந்திருக்கவில்லை.

குடாநாட்டில் நடப்பது சிவில் நிர்வாகமல்ல என்ற உண்மையை தமிழ்க் கட்சிகள் ஆதாரபூர்வமாக நிரூபித்திருக்க முடியும்.

சிவில் உத்தியோகத்தர்களால் இராணுவத்தின் நலன்களுக்கு ஏற்ப நடத்தப்படும் நிர்வாகமே யாழ் குடாநாட்டில் நிலவுகிறது என்ற உண்மையை உரத்து கூறியிருக்க வேண்டும்.

அதனைச் செய்யத் தவறிய தமிழ்க் கட்சிகள், ஆட்சியாளரதும், படையினரதும் உத்திகளை முறியடிக்க புலிகள் முனைந்தபோது மட்டும் கண்டிக்கத் தலைப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகள் ஆட்சியாளருக்கு எதிராகவும் இராணுவத் தீர்வு நகர்வுகளுக்கு எதிராகவும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை இக் கட்சிகள் முன்னின்று எதிர்க்கின்றன. பின்னர் புலிகள் தம்மைத் தாக்கும்போது 'நாம் புலிகளுக்கு என்ன செய்தோம்?' என்று அப்பாவித்தனமாக கேள்வி எழுப்புவதும், 'சகோதரப் படுகொலை' என்ற பழைய பல்லவியை தற்போதும் புலம்புவதும் வேடிக்கையாக விளங்குகிறது.

ஆனால், படையினரும், தமிழ்க் கட்சிகளும் என்னதான் முயன்றாலும் புலிகளது தடையை மீறி அரச நிர்வாக உத்தியோகத்தர்களோ, ஊழியர்களோ பணிக்கு செல்ல முன்வரவில்லை.

பயம் காரணமாக செல்லவில்லை என்று படையினர் கூறினால்கூட, அதுவும் படையினரின் தோல்வியையே வெளிப்படுத்துகிறது.

யாழ் குடாநாட்டில் படையினர் எங்கெங்கும் நிறைந்திருந்தாலும், புலிகளது செயற்பாட்டை தடுத்துவிட முடியாது என்று நம்பப்படுகிறது என்பதே அதன் அர்த்தமாகும்.

எனவே, எவ்வகையில் நோக்கினாலும் யாழ் குடாநாட்டில் புலிகள் விதித்த அரசாங்க நிர்வாக தடை ஆட்சியாளரது முகத்தில் கரி பூசியுள்ளது.

அரச நிர்வாகத் தடையை நீக்குவது தொடர்பாக 27.05.99 திகதியிடப்பட்ட புலிகளது கடிதம் 01.05.99 செவ்வாய்க்



கிழமை அரச அதிகாரி ஒருவரின் கையில் கிடைத்திருக்கிறது.

அவர் அக் கடித விடயத்தை சீருடை உயர் அதிகாரிக்கு தெரியப்படுத்தி இருந்தார்.

தாம் சொல்லும்வரை கடிதம் கிடைத்த தகவலை வெளியேவிடவேண்டாம் என்று அந்த அரச அதிகாரிக்கு சீருடை அதிகாரி பணித்தாராம்.

இதனையடுத்து யாழ் இராணுவத் தளபதியின் அறிவித்தல் ஒன்றை தேசிய பாதுகாப்பு அமைசசின் நடவடிக்கை தலைமைச் செயலகம் செய்தி ஊடகங்களுக்கு அனுப்பிவைத்தது.

'யாழ் குடாநாட்டில் சகல அரச அலுவலகங்களும் கண்டிப்பாக இயங்க வேண்டும். ஊழியர்கள் கடமைக்கு திரும்ப வேண்டும்' என்றும் கடமைக்கு திரும்பாதோர்மீது அவசரகால சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ் இராணுவத் தளபதி அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் புலிகளின் கடிதம் பற்றிய தகவல் சீருடையினரையும்மீறி வெளியாகிவிட்டது. அத் தகவல் வெளியான பின்னரே தளபதியின் அறிவிப்பு செய்தி ஊடகங்களுக்கு எட்டியிருந்தது.

எனவே, புலிகளின் தடையை தாம் முறியடித்ததாகவும், அதனால் புலிகள் தடையை வாபஸ் பெற்றதாகவும் சித்தரிக்க படைத்தரப்பு எடுத்த முயற்சி கைகூடவில்லை.

ஆனால் தளபதியின் அறிவித்தல் ஒரு உண்மையை புலப்படுத்தியிருக்கிறது. யாழில் இருப்பது சிவில் நிர்வாகம் என்றால் அது தொடர்பான அமைச்சுத்தான் அரச அதிகாரிகளுக்கு பணிப்புரைகளை விடுத்திருக்க வேண்டும்.

ஆனால் வழக்கமாக இராணுவ ஆட்சியுள்ள பகுதிகளில் செய்யப்படுவது போன்று அரச ஊழியர்களுக்கு இராணுவததளபதியே கட்டளைகளை பிறப்பித்துள்ளார்.

அதுமட்டுமல்ல, யாழ் குடாநாட்டு அரச நிர்வாக தடை குறித்து பாதுகாப்பு அமைச்சும், இராணுவ அதிகாரிகளுமே கருத்துக்கள் கூறியிருந்தனர். பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தனக்கும் அதற்கும் தொடர்பிருப்பதாகக்கூட காட்டிக் கொள்ளவில்லை.

01.06.99 அன்று யாழ் அரச அதிகாரிகள் அனைவரும் வாகனங்களில் ஏற்றப்பட்டு பலாலி படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஒன்றரை மணிநேரம் காக்கவைக்கப்பட்ட பின்னரே யாழ் இராணுவத் தளபதி அவர்களை சந்தித்திருந்தார்.

இவையெல்லாம் யாழ் குடாநாட்டில் இராணுவ ஆட்சியே நடைபெறுகிறது என்பதற்கு தெளிவான உதாரணங்களாகும்.

இத்தகைய ஆட்சிக்கும், அதன் உத்தரவுக்கு கீழ்படிய வேண்டிய நிர்வாகத்தையுமே 'சிவில் நிர்வாகம்' என்று தமிழ்க் கட்சிகளும் கூறிவருகின்றன. இவற்றுக்கு இடையூறு செய்வதையே ஜனநாயக விரோதம் என்றும் புலம்பி வருகின்றன.

அரச நிர்வாகத்தை குறிப்பிட்ட காலத்திற்கு சீர்குலைப்பது என்பது அமைதிவழிப் போராட்டத்திலும் ஏற்கப்பட்ட வழிமுறையாகும்.

இதனால் மக்களுக்கு சில சிரமங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். புலிகளை கண்டித்த ஈ.பி.டி.பி.கூட அன்றாடப் பணிகளை நிறுத்தக்கூடிய ஹர்த்தாலைத்தான் அனுஷ்டித்தது.

புலிகள் அரச அலுவலகங்களை மட்டுமே மூடுமாறு கூறினார்கள். ஈ.பி.டி.பியினர் பாடசாலைகளையும் மூடுமாறு கோரியிருந்தனர். பாடசாலைக்கு சென்ற மாணவர்கள் பலர் திரும்பி செல்ல வேண்டியிருந்தது. வங்கிகளையும் மூடுமாறு கோரியிருந்தனர்.

எனவே, மக்களுக்கு சிரமம் இல்லாத போராட்டம் என்பது கற்பனையான ஒன்றேயாகும். அடக்கப்படும் மக்கள் அடக்குவோர் முன்பாக மண்டியிட்டு அடிமைகளாக வாழ தீர்மானித்தால் மட்டும் போராட்ட சிரமங்கள் ஏற்பட வாய்ப்பிருக்காது.

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

### சோனியாவும் புலிகளும்



சோனியாவைக் கொல்ல புலிகள் சதி செய்வதாக செய்திகள் பெரிதாக வெளியாகியுள்ளன.

இதனை புலிகள் மறுத்துள்ளனர். கட்டுக்கதை என்று தட்டிக்கழித்துள்ளனர்.

சோனியா காந்தி பதவிக்கு வருவதே தற்போது கேள்விக்குறியாகிவிட்டது. அவசரப்பட்டு வாஜ்பேய் அரசைக் கவிழ்த்து கெட்ட பெயரை சம்பாதித்து கொண்டார்.

சோனியா பதவிக்கு வந்தால்கூட தனிப் பலம் பெற முடியாது. அதுபோல இலங்கைப் பிரச்சனையிலும் தலையிட முடியாது.

பாராமுகமாய் இருக்கலாமே தவிர, படையும் அனுப்ப முடியாது. புலிகளுக்கு பெரும் தடையாகவும் இருக்க முடியாது.

தவிர ராஜிவ் கொலை வழக்கில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை அடுத்து தமிழ்நாட்டில் புலிகளுக்கு ஆதரவான சூழல் மறுபடி தலைதூக்கி வருகிறது.

இந்நிலையில் சோனியாவை தீர்த்துக்கட்டும் தேவை புலிகளுக்கு எழாது.

சோனியாவுக்கு அனுதாபம் தேட காங்கிரஸ் வட்டாரங்களால் சமைத்து பரிமாறப்பட்ட செய்தி தான் இது.

இதனை தென்னிலங்கை ஆங்கிலப் பத்திரிகைகள் சில பெரிதாக கொட்டை எழுத்தில் போட்டிருந்தன.

ராஜிவ் கொலை வழக்கின் தீர்ப்பு இலங்கை அரசுக்கும் அதிர்ச்சிதான்.

அதனால் 'சோனியாவை கொல்ல புலிகள் சதி' என்ற செய்தி அரசுக்கும் கொஞ்சம் ஆறுதலான செய்திதான்.

புலிகள் கப்பல் கப்பலாக பாக்கு நீரிணையூடாக ஆயுதம் கடத்துகிறார்கள் என்று கூறி இந்தியாவை மிரட்டப் பார்த்தனர். அக் கதை எடுபடவில்லை. இந்திய பாதுகாப்பமைச்சராக பெர்னாண்டஸ் இருக்கும்போது இக் கதையை தயாரித்தது விரயம்.

—*—

வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எ.ப். நடத்திய பேரணிக்கு மூவாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர்.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கடந்த பத்தாண்டுகளில் நடைபெற்ற பெரிய பேரணி இதுதான்.

பஸ்சுகள் அனுப்பித்தான் ஆட்களை ஏற்றிவந்தனர். ஆனால் கட்டாயப்படுத்தவில்லை. மக்கள் தாமாக விரும்பித்தான் வந்திருந்தனர்.

மக்களுக்கு அரசை எதிர்த்த தம உணர்வுகளை கொட்ட ஒரு களம் தேவையாக இருந்தது.

பாஸ் கெடுபிடி, இயக்க மோதல்களால் அப்பாவிகளின் பலிகள், படையினரின் கெடுபிடிகள் போன்ற பாதிப்புகளால உள்ளூர கொதித்துக் கொண்டிருந்த வவுனியா மக்களில் பலருக்கு இந்தப் பேரணி ஒரு வடிகாலாக திகழ்ந்தது.

மக்கள் வீதியில் இறங்கத் தயாரில்லை. பிரார்த்தனை என்று அழைத்தால்தான் வருவார்கள் என்று கடந்த வருட இறுதியில் அரச வானொலிப் பேட்டியில் கூறியிருந்தார் சுரேஸ் பிரேமச்சந்திரன். மக்கள் போராட தயாராக உள்ளதாக கூறியதால், முரசையும் மறைமுகமாக சாடியிருந்தார்.

அதே சுரேஸ் பிரேமச்சந்திரன்தான் இந்தப் பேரணிக்கு தலைமை தாங்கினார்.

மக்கள் போராட்டங்கள் தேவையில்லை. அரசுடன் பேசியே அனைத்தையும் செய்யலாம் என்று கூறிய தமிழ்க் கட்சித் தலைமைகள் இப்போது சரணடைந்துள்ளன. மக்கள் போராட்டம் பற்றி போதிக்கத் தொடங்கியுள்ளன.

மக்களுக்கு இவர்கள் போதிக்கத் தேவையில்லை. மக்கள்தான் இவர்களுக்கு போதித்தனர்.

தாமாகவே தெருவில் இறங்கி மக்கள் போராட ஆரம்பித்த பின்னர்தான், இக் கட்சிகளும் போராட்டம், ஊர்வலம் என்று கிளம்பியுள்ளன.

தனது கட்சிக்குள் ஏற்பட்ட பிரச்சனையால்தான் சுரேஸ் சுறுசுறுப்பாக பேரணி நடத்த முன் வந்தார்.

மக்கள் போராட வரமாட்டார்கள் என்று கூறிக்கொண்டிருந்தவர் தனது சோம்பேறித் தனங்களை மூட்டை கட்டிப்போட்டுவிட்டு பேரணி நடத்த துணிந்தார்.

அதேபோல 'இயக்க ஒற்றுமை ஓங்குக' என்று புளொட், ரெலோ பிரதிநிதிகள் இந்தப் பேரணியில் சென்றதும் சுத்தமான போலித்தனம்!

வவுனியாவில் புளொட், ரெலோ இரண்டும் பெயர் கெட்டுப் போவதால், தம்மை மாற்று சக்தியாக வளர்த்துக் கொள்ள இந்தப் பேரணி ஈ.பி.ஆர்.எல்.எ.ப்புக்கு ஒரு சந்தர்ப்பம்.

பேரணியை நடத்தியவர்களது நோக்கம் குறுகியதாக இருந்தாலும், பேரணியில் கலந்து கொண்ட மக்களது உணர்ச்சிக் கொந்தளிப்பு உண்மையானது. நேர்மையானது.

இந்தப் பேரணிக்கு முன்னர் வவுனியாவில் ஈ.பி.ஆர்.எல்.எ.ப். சிறு கருத்தரங்குகள் நடத்தியது. அதில் ஏகப்பட்ட கேள்விகள்.

எட்டாம் வகுப்பு மாணவர்கள்கூட கேள்விகளால் துளைத்துவிட்டனராம். "யாழில் நடப்பது சிவில் நிர்வாகமோ?" என்று ஒரு ஆசிரியர் கேள்விகளை தொடுக்க, அவரை தனியே அழைத்துப்போய் சமாளிக்கப் பார்த்தார்களாம். அப்படியும் அவர் விடவில்லையாம்.

பேரணிக்கு முன்னர் எம்.ரி.வியில் ஆங்கிலப் பேட்டியில் புலிகளை சாடியிருந்தார் சுரேஸ். ஆனால் பேரணியில் புலி எதிர்ப்புக் கோஷம் எதுவும் இருக்கவில்லை.

சுரேசின் நோக்கம் எதுவாக இருந்தாலும், பேரணியை சிறப்பாக ஒழுங்கமைத்து நடத்தியதற்கு பாராட்டலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 65

### கடந்தவாரம்

**இடி அமீனுக்கு தன் பதவிக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் தோன்றுகிறது. அதனால் வெளிநாட்டு வங்கிகளில் பணம் போட ஆரம்பிக்கிறான். ஜனாதிபதி நிதி என்ற பெயரில் சுருட்டத் தொடங்குகிறான். உகண்டாவை கிறிஸ்தவ ஆதிக்கத்தில் இருந்து விடுவித்து முஸ்லிம் நாடாக அமீன் மாற்றப்போவதாக அமீனின் எதிரிகள் பிரசாரம் செய்கிறார்கள்.**

**இனி....**

# இடி அமீன்

உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றும் திட்டம் அமீனுக்கு இருப்பதாக எங்கும் பேசப் பட்டது.

அமீனுக்கு பயந்து அதுவரை வாய்மூடிக் கொண்டிருந் தவர்கள்கூட இந்த விவகாரத்தில் வாய் திறந்து பேச ஆரம்பித்தனர்.

உகண்டாவின் சனத்தொகையில் அப் போது பத்து வீதத்தினரே முஸ்லிம்கள். ஆனாலும் பணம் திரட்டுவதில் நாட்டம் கொண்ட அமீன், உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றினால் அயலிலுள்ள அரபு நாடுகளில் இருந்து பெரும் நிதியைப் பெற்றுக் கொள்ளலாம் என்று திட்ட மிட்டான்.

உகண்டாவின் அமைச்சரவையில் 1971 இல் இரு முஸ்லிம் அமைச்சர்களே இருந் தனர்.

1973க்கும் 1977க்கும் இடையே முஸ்லிம்களே அதிக அமைச்சுப் பொறுப்பு களை ஏற்றனர்.

1977 ஆகஸ்ட் மாதத்தில் 21 அமைச்சர் களில் 14 பேர் முஸ்லிம் அமைச்சர்களா யினர்.

இதற்கு அமீன் எதிர்பார்த்த பலனும் ஏற்பட்டது. அரபு நாடுகள் சில ஒரு தொகை நிதியை உதவியாக வழங்கின.

உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்று வதைமிட்டு பலத்த எதிர்ப்புக் கிளம்பியதைக் கண்டு அமீன் கலக்கமடைந்தான்.

கிறிஸ்தவ மதத் தலைவர்கள் சிலரை அழைத்து பேச்சு நடத்தினான். **"நாடு நிதி நெருக்கடியில் இருக்கிறது. அதனால் தான் அரபு நாடுகளிடம் உதவி பெற வேண்டியிருக் கிறது. அவர் களது உதவியை நம்பி இருப்பதால் முஸ்லிம் அமைச்சர்களை கூடுதலாக சேர்த் துக் கொண்டேன். உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றும் எண்ணம் துளிகூடக் கிடையாது. நான் சகல மக்களுக்கும் ஜனாதி பதி. முஸ்லிம்களது ஜனாதி பதியல்ல. என்னை நம்புங் கள்!"** என்று உருக்கமாகப் பேசினான்.

அமீனா இப்படிப் பேசு வது? அவர்களுக்கு தம் காதுகளையே நம்ப முடிய வில்லை.

சந்திப்பு முடிந்ததும் மதத் தலைவர்களை உகண்டா அரச வானொலி பேட்டி கண்டது.

**"ஜனாதிபதி எம் கருத் துக்களை மதிக்கிறார். முஸ் லிம் நாடாக மாற்றும் எண் ணம் தமக்கில்லை என்று கூறியுள்ளார்"** என்று மதத் தலைவர்கள் கூறியிருந் தனர்.

அந்தப் பேட்டி ஒலிபரப் பாவதை தன் அலுவலகத்தி லிருந்து கேட்டுக் கொண்டி ருந்த அமீனின் உதட்டில் கபடமான புன்னகை எட்டிப் பார்த்தது. **"முட்டாள்கள், நன்றாக ஏமாந்துவிட்டார் கள்!"** என்று வாய் விட்டே கூறினான்.

உகண்டாவில் ஜன நாயகம் இருக்கிறது என்று நம்பவைக்கவும், உள்நாட்டில் தனக்கெதிரான புகைச் சலை அடக்கவும் அமீன் ஒரு அற்புதமான நாடகம் ஆடி னான்.



கிறிஸ்தவ மதத்தில் இருந்தும், ஏனைய இனங்களில் இருந்தும் சிலரை பொறுக்கி எடுத்தான். அவர்கள் உள்ளூர் களில் செல்வாக்கு உள்ளவர்கள்.

அவர்களது பலம், பலவீனங்கள் தொடர்பாக அமீனின் உளவுப் பிரிவு பல மாதங்களாக மோப்பம் பிடித்தது.

பின்னர் அவரவர் பலவீனத்தைப் பயன் படுத்தி வலையை வீசினான் அமீன்.

பண ஆசை, சொத்து ஆசை, பெண் ஆசை, பதவி ஆசை போன்றவற்றில் யாருக்கு என்ன ஆசையோ அதனை நிறைவேற்றினான் அமீன்.

உகண்டாக்காரர்களுக்கு வெளி நாட்டு பெண்களில் மோகம் இருப்பதை அமீன் அறிவான். அதனால் தன் ஆட்கள் சிலரை அனுப்பி வெள்ளைக்காரப் பெண் களை அழைப்பித்து வைத்திருந்தான்.

காய்ந்த மாடுகள் கம்பில் விழுவது போல, அந்தப் பிரமுகர்கள் வெள்ளைத் தோலைக் கண்டதும் பாய்ந்து புரண்டார் கள்.

அமீன் என்ன சொன்னாலும் கேட்க சித்தமானார்கள். அமீனை வாயாரப் புகழ்ந் தார்கள்.

அனைவரையும் ஒரு நாள் தன்முன்பாக அழைத்தான். அனைவரும் தெய்வ சந் நிதானத்தில் நிற்பதுபோல மிகப் பவ்விய மாக காட்சியளித்தனர்.

அமீன் ஒரு நமட்டுச் சிரிப்போடு, **"எனக்காக நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும். செய்வீர்களா?"** என்று கேட் டான்.

அவர்கள் ஒரே குரலில், "காத்திருக்கி றோம்!" என்று கூறியபோது, தங்கள் முதுகு களை வில்லாக வளைத்துக் காட்டினார்கள்.

அடுத்து அமீன் கூறிய வார்த்தைகள் அவர்களைத் தூக்கிவாரிப்போட்டது.

**"எனக்கு எதிராக நீங்கள் பேசவேண் டும்!"** என்றான் அமீன்.

"என்ன?" என்று அவர்கள் கதிகலங்கிப் போனார்கள். அமீன் தங்களை சோதிக்கி றானோ? என்றும் சந்தேகப்பட்டார்கள்.

அதனால் விழுந்தடித்து **"நாம் ஒரு போதும் அவ்வாறு செய்யமாட்டோம். அவ் வாறு பேசினால் எங்கள் நாக்கு அழுகிப் போய்விடும்!"** என்று படபடப்பாக பேசினார் கள்.

அவர்களை அற்பப் புழுக்களாக அலட்சிய மாக நோக்கிய அமீன், **"நான் சொல்வதைக் கேட்பீர்களா? மாட்டீர்களா?"** என்றான் கடுமையான தொனியில்.

"கேட்கிறோம்" என்று பயந்த தொனியில் பதில் வந்தது.

**"தீய சக்திகள் சில நாட்டைக் கெடுக்க கிளம்பியிருக்கின்றன. அவர்கள் சதியை முறி யடிக்க என்னிடம் மருந்து இருக்கிறது. அந்த மருந்தை உங்கள் மூலமாக கொடுக்க விரும்பு கிறேன்!"** என்றான் அமீன்.

அவர்களுக்கு எதுவுமே புரியவில்லை. மாடுகள்போல தலையை ஆட்டினார்கள். அவர் களுக்குப் புரியவில்லை என்பது அமீனுக்கு தெரியும்.

**"எனக்கு எதிராக பேசுவதுபோல பேசி எனக்கு சார்பாக நடந்து கொள்ள வேண்டும். அதுதான் நீங்கள் இந்த நாட்டுக்குச் செய்யும் சேவை!"** என்றான் அமீன்.

அவர்களுக்கு மேலும் குழப்பமாக இருந் தது. அமீனுக்குப் பயந்து தங்கள் குழப்பத்தை மறைத்துக் கொண்டார்கள்.

அறிக்கை ஒன்றைக் கொடுத்து அதில் கையொப்பம் போடுமாறு கோரினான் அமீன்.

அறிக்கையை வாசித்தே பார்க்காது அனை வரும் கையொப்பமிட்டனர். படித்துப் பார்த்தால் அமீனுக்கு கோபம் வந்துவிடுமே என்ற பயம்.

## தருவது ரசிகன்

அவர்கள் கையொப்பம் இட்டதும் தனது உதவியாளரை அழைத்து அறிக்கையைப் படித் துக்காட்டுமாறு கூறினான்.

**"உகண்டாவை முஸ்லிம் நாடாக் எம் உயிர் உள்ளவரை அனுமதியோம். ஜனாதிபதி அமீனிடம் அப்படி திட்டம் இருக்குமானால், அதன் விளைவுகள் நாட்டுக்கு நல்லதல்ல என் பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்..."** என்று தொடர்ந்தது அறிக்கை.

அந்த அறிக்கையை அரச வானொலியும் முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பியது. இதனால் உகண்டா மக்கள் பெரும் வியப் படைந்தனர்.

அமீனுக்கு எதிரான செய்தியை உகண்டா வானொலி வெளியிடுவது அதுதான் முதற் தடவை.

அதனால் பலர் வியப்படைந்த போதும், சந்தேகப்பட்டவர்களும் இருந்தனர். அமீன் ஆடும் நாடகம்தான் இது என்றே அவர்கள் சந்தேகப்பட்டனர்.

அந்த அறிக்கை வெளியாகி ஒருவாரத் தின் பின்னர் அதே உள்ளூர் பிரமுகர்கள் இன் னொரு அறிக்கையை வெளியிட்டனர். அதுவும் அமீனின் உதவியாளரால் தயாரிக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்ட அறிக்கைதான்.

"முஸ்லிம் தீவிரவாதிகள் உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றத் திட்டமிட்டனர். அதனை முறியடித்துள்ள ஜனாதிபதி அமீனுக்கு நன்றி தெரிவிக்கிறோம்!" என்று அந்த அறிக் கையில் வாசகங்கள் காணப்பட்டன.

இதன் பின்னரும் பல பிரச்சனைகளில் அந்த உள்ளூர் பிரமுகர்கள் அரசுக்கு எதிராக கருத்துக் கூறுவதும், பின்னர் அரசையும், அமீனையும் புகழ்வதும் தொடர்ந்தது.

ஒரு கட்டத்தின் பின்னர் இந்த ஏமாற்று வித்தையை மக்கள் இனம் கண்டு கொண்ட னர்.

அதுவும் அமீனது கவனத் திற்கு வந்தது. "இது ஏமாற்று வேலை என்று மக்கள் நினைக்கி றார்கள். உள்ளூர் பிரமுகர்கள் தற்போது பெரும் வசதி பெற்றிருப்பதும் மக்களுக்குச் சந் தேகத்தை ஏற் படுத்தி இருக்கிறது!" என்று புலனாய்வுப்பிரிவு அறிக்கை சமர்ப்பித்தது.

அந்த அறிக்கை சமர்ப்பிக் கப்பட்ட மூன்றாவது நாள், உள்ளூர் பிரமுகர்களில் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார்.

அவரது உடலுக்கு அருகே, 'அமீனின் விசுவாசி கள்' என்று எழுதப்பட்ட துண் டுக் காகிதம் ஒன்று காணப் பட்டது.

இச் செய்தியும் சகல பத் திரிகைகளிலும், அரசின் வானொலியிலும் வெளியா னது.

'அமீனின் விசுவாசிகள்' என்று துண்டுக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்ததை வெளி யிட சில பத்திரிகைகள் தயக் கம் காட்டின.

அதனைப் பயமின்றி வெளி யிடுமாறு ஜனாதிபதி அலுவல கத்தில் இருந்து உத்தரவு கொடுக்கப்பட்டது.

அமீனுக்கு எதிரான செய் தியை வெளியிடுமாறு ஜனாதி பதி செயலகமே உத்தரவிடு வது என்றால், அமீனுக்கு ஏதா வது நடந்து விட்டதோ? அமீனை இரகசியமாக பதவி இறக்கி விட்டார்களோ என்று கூட சில பத்திரிகையாசிரியர் களுக்கு உள்ளூர சந்தேகம்.

ஆனால் அமீனின் திட்டம் வேறாக இருந்தது. குறிப் பிட்ட உள்ளூர் பிரமுகர்களுக் கும் தனது ஆதரவாளர்களுக் கும் இடையே பகை இருப்ப தாக மக்களை நம்பவைக்கவே, அவர்களில் ஒருவரைத் தீர்த்துக் கட்டினான்.

**"மக்கள் மத்தியில் எமக்கு எதிரான சக்தி கள் வளர்வதைவிட, நமக்கு ஆதரவான சக்தி கள் நமக்கு எதிராக நடித்துக் கொண்டிருப்பது நமக்கு பாதுகாப்பானது!"**

அமீனின் விளக்கத்தைக் கேட்ட சியம்பா, அமீன் கபடத்தனத்தில் கைதேர்ந்து விட்டான் என்பதை ஐயமின்றி அறிந்து கொண்டார்.

உள்ளூர் பிரமுகர்களது அறிக்கைகளைக் கண்டு சியம்பாவுக்கு சந்தேகம் எழவே செய் தது.

அதனால் நேரடியாகக் கேட்காது சுற்றி வளைத்து, "உங்களுக்கு எதிராக இப்படி அறிக்கைகள் வருவது அத்தனை நல்லதல்ல என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்!" என்று கூறினார்.

அதற்குத்தான் அப்படி அதிரடியான விளக் கம் கொடுத்துவிட்டு, என் தந்திரம் எப்படி என்பது போல இடிச் சிரிப்பை உதிர்த்தான்.

சியம்பா தன்னை ஏமாற்றி தப்பிச் செல்ல முடியாது என்ற நம்பிக்கையில் அவரிடம் தன் தந்திரங்களை மறைக்காது கூறிவந்தான் அமீன்.

யாரிடமாவது உண்மையைக் கூறி, தன் திறமையை பறைசாற்றினால்தான் அமீனுக்கு நிம்மதி.

அதற்கு அமீன் தெரிவு செய்தவர்களில் ஒருவர் சியம்பா. தன் மனைவியர் சிலரோடும் அமீன் மனம்விட்டு எல்லாவற்றையும் கொட்டி விடுவான்.

இக் காலகட்டத்தில் அமீனிடம் இருந்து வந்த செய்தி ஒன்று நாட்டையே நகைப்பில் ஆழ்த்தியது.

(இடி தொடரும்)

# குரங்கு வளர்ப்பு




**சி**னிமாப் படங்களில் குழந்தையை மிருகங்கள் வளர்த்து ஆளாக்குவது போல காட்சிகள் பார்த்திருப்பீர்கள். சினிமாவில் தான் இப்படி நடக்கும் என்றுதானே நினைத் திருப்பீர்கள்.

சமீபத்தில் உண்மையாகவே அப்படி யொரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

ஆபிரிக்காவில் காதல் ஜோடி ஒன்று குழந்தையை பெற்று காட்டிலேயே கைவிட் டுப் போனது. அந்தக் குழந்தையை காட்டில் இருந்த குரங்குகள் எடுத்து பக்குவமாக வளர்த்திருக்கின்றன.

மூன்று வருடகாலமாக வளர்த்து ஆளாக்கியுள்ளன. காட்டுக்கு வேட்டைக்குப் போன சிலர் அந்த குழந்தையைக் கண்டு மீட்டுள்ளனர்.

குரங்கு போலவே நடந்து திரிந்தானாம். பின்னர் பயிற்சி கொடுத்து நடை, உடை, பாவனைகளை மாற்றியுள்ளனர்.

# நடிகையாகும் ஹிலாரி



**அ**ரசியலில் நடித்து அமெரிக்க மக்களை ஏமாற் றிய கிளின்ரன், மோனிகா விவகாரத்தில் நீதிமன்றத் திலும் நடித்தார்.

பின்னர் தொலைக் காட்சி நாடகம் ஒன்றிலும் நடித்திருந்தார். பிரபல பொப் பாடகி பார்பராவின் வேண்டுகோளை மறுக்க முடியாமல்தான் நடித்தா ராம். அந்த தொடரை பார் பராவின் கணவரான ஜேம்ஸ் புரோலின் இயக்கினார்.

கிளின்ரனின் பின்னர் அமெரிக்க ஜனாதிபதியாக ஆசைப்பட்டவர் ஹிலாரி கிளின்ரன். அதாவது கிளின்ர னின் பின்னர் அமெரிக்க மக்கள் முன்பாக நடிக்க ஆசைப்பட்டவர்.

மோனிகா விவகாரத்தால் ஹிலாரியின் கனவு பகற்கன வாகியது. கணவன் வழியில் ஜனாதிபதியாக சந்தர்ப்பம் இல்லையானாலும், கணவன் வழியில் தொலைக்காட்சி தொட ரில் நடிக்கப் போகிறார்.

'பெக்கர்' என்னும் தொலைக் காட்சித் தொடரில் தான் ஹிலாரி நடிக்கவுள்ளார்.

ஹிலாரியின் உயிர்தோழி மேரி ஸ்டீன்பர்ஜென் என்பவரது கணவர் இத் தொடரை இயக்குகிறார்.

# கொலைகார மனைவிகள்



**எ**கிப்து நாட்டின் உள் துறை அமைச் சகம் சமீபத் தில் திடுக்கிடும் அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளது.

எகிப்திய பெண்கள் பலர் வெறுப்பின் காரணமாக தங்கள் கண வன்மாரை போட்டுத் தள்ளிவிடுகிறார்களாம். ஆமாம், கொலையேதான்!

கடந்த ஆண்டு 21 பெண்கள் தங்கள் கணவன்மாரை போட்டுத் தள்ளியுள்ளனர். அதற்கு முதல் ஆண்டில் 18 மனைவிமார் கள் தங்கள் கணவர்களை போட்டுத்தள்ளி னர்.

இத்தகைய கணவன்மார் கொலைகள் அதிகம் நடப்பது எகிப்தின் தலைநகரான கெய்ரோவில்தான் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக கணவன்மாரை கொன்ற நூறு பெண்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது.

அவர்களில் 48 பெண்கள் 20 முதல் 40 வயதிற்குட்பட்டவர்கள். இக் கொலை களுக்கான காரணம் என்ன? தங்களை ஏமாற்றிவிட்டு கணவன்மார் இன்னொரு பெண்ணுடன் சல்லாபம் கொள்வதை இவர்களால் சகிக்க முடியவில்லையாம்.

# சரியும் சனத்தொகை

**ர**சியாவில் மக்கள் தொகை வீழ்ச்சி யடைய ஆரம்பித்துள்ளது. இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 2 இலட்சத்து 9 ஆயிரத்தி 700 பேர் குறைந்துள்ளனர். அதனால் சனத்தொகை 15 கோடியாக சரிந்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக மக்கள் தொகை வீழ்ச்சியடைந்து வருகிறது.

ரசியாவில் சோசலிச ஆட்சி நிலவிய போது அதிக பிள்ளைகள் பெற்று பல தாய்மார்கள் சாதனை படைத்தனர். தற்போது பிள்ளைகள் பிறப்பது குறைந்து போய்விட்டது.

வறுமை, உணவுப் பஞ்சம், உடல் நலக் குறைவு, மதுப்பழக்கம் போன்ற வையே ஆண் பெண் உறவில் நாட்ட மின்மையை ஏற்படுத்தி உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன.

# கிரிக்கெட் அணிக்குள் பிளவு

**இ**லங்கை கிரிக்கெட் அணிக்குள் ரணதுங்கா அணி மாநாமா அணி என்று இரண்டு கோஷ்டிகள் உருவாகியுள்ளன.

அணித்தலைவர் ரணதுங்காவும், உப தலைவர் அரவிந்தாவும் முன்புபோல நெருக் கம் கிடையாது. இருவருக்கும் இடையேயும் விரிசல்கள் தோன்றியுள்ளன.

சனத் ஜெயசூரியா முன்பு அணித் தலைவருக்கு விசுவாசமாக இருந்தார். தற்போது முரண்பட்டிருக்கிறார்.



இந்தியாவுக்கு எதிரான போட்டியில் சனத்தை நாலாவது அல்லது ஐந்தாவதாக இறக்க விரும்பினார் ரணதுங்கா. ஆனால் சனத் மறுத்துவிட்டார். ஆரம்ப துடுப்பாட்டக் காராகவே இறங்குவேன் என்று பிடிவாத மாக கூறிவிட்டார்.

கலுவிதாரனவுக்கு பதிலாக திலகரட் ணாவை சேர்த்துக் கொள்ள ரணதுங்கா எடுத்த முயற்சியை அரவிந்தாவும் ஆதரிக்க வில்லையாம். இலங்கை அணியின் தொடர் வெற்றிகளால் அமுங்கிப் போயிருந்த உள் பிரச்சனைகள் இப்போது வெளியே வரத் தொடங்கியுள்ளன.

முன்னாள் பயிற்சியாளர் வட்மோரை ரணதுங்காதான் துரத்தினார். சென்ற முறை வட்மோர் வகுத்துத்தந்த உத்திகள் தான் உலகக் கிண்ணத்தை பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்தன. வட்மோ ரின் பெயர் பரவலாக அடிபட்டதால், தன் பெயர் பின் தள்ளப்படுவதாக ரண துங்கா எரிச்சலடைந்தார். அதுதான் வட்மோருடன் முரண்பட்டார் என்பது ரணதுங்காவுக்கு எதிரானவர்களது வாதம்.

இம்முறை இலங்கை அணியிடம் புதிய உத்தி எதுவும் இல்லாமல் போன தையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிரிக்கெட் சுட்டுப்பாட்டுச் சபை உட்பட அனைத்திலும் தனது பிடியை தக்கவைக்கவே ரணதுங்கா அக்கறை காட்டினார். ரணதுங்காவின் சகோதரர் களும் ஆதிக்கம் பெற்றனர். இவையும் அணிக்குள் பலருக்கு மனக் கசப்பை உண்டாக்கியதாம்.

இதேவேளை கிரிக்கெட் கட்டுப்பாட் டுச் சபை தேர்தலில் ரணதுங்காவின் பலத்தால்தான் ஜனாதிபதியின் உறவினர் தோற்கடிக்கப்பட்டார்.


தற்போதைய தோல்வியால் ரணதுங் காவுக்கு ரசிகர்களிடையே ஏற்பட்டுள்ள அதிருப்தியை பயன்படுத்தி, அவரை மட்டம்தட்ட 'குறிப்பிட்ட பிரமுகர் தரப்பு' முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

சென்ற உலகக் கோப்பை முடிந்த தும் தான் ஓய்வுபெறப்போவதாக அறிவித் தார் ரணதுங்கா. பலரும் வற்புறுத்தி பதவியில் நீடிக்க வைத்தனர்.

ஆனால் இம்முறை ரணதுங்கா 'நான் விலக விரும்பவில்லை' என்று கூறவேண் டியதாகிவிட்டது. தோல்வியுடன் விலகி னால், தன் மதிப்பு பறிபோய்விடும் என்ப தால்தான் ரணதுங்கா விலக மறுத்துள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com



## சுட்டிக் குரங்கு

↑ ஹொட்டல்களில் சர்வர்களைப் பார்த்திருப்பீர்கள். இங்கு காணப் படும் இருவரில் ஒருவரைப் பாருங் கள். இப்படி வேறு எங்காவது பார்த்துள்ளீர்களா? ஜப்பானில் 'நாசு' என்ற இடத்தில் உள்ள ஓய்வு இல்லத் தில்தான் இக் குரங்கார் பணியாளராக இருக்கிறார்.

இவருக்கு இரண்டு வயதாகிறது. படு சுட்டி! உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ள வண்டியை நகர்த்திச் செல்வது மட்டும்தான் இவருக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலை.

## மதிப்பு உயர்ந்தது

→ ஐந்து சதக் குற்றிகளுக்கு இப்போது மரியாதை கிடையாது. இந்த நாணயக் குற்றிகள் ஆயிரம் சேர்ந்தால்தான் ரூ 50 மதிப்பு.

ஆனால் கலை நுணுக்கத்தோடு சிந்தித்த கலைஞர் ஒருவர் ஆயிரம் 5 சத குற்றிகளை பயன்படுத்தி அழகான தேர் ஒன்றை உருவாக்கியுள்ளார். இதன் பெறுமதி நம்மூர் மதிப்பில் அறுநூறு ரூபா.

நூறு கிராம் பெவிகாலை பயன்படுத்தி இதனை உருவாக்கினாராம். இதனை வாங்கிய ஒருவர் உள்ளே முருகன் சிலைவைத்து வழிபடுகிறார். மரியாதை உழைப்புக்குத்தான்.



## இருபதாவது தயார்

↓ அமெரிக்காவில் ஒரு பெண்மணி இதுவரை மொத்தம் 19 பிள்ளைகளை பெற்றுக் குவித்துள்ளார். (இதுவரை என்பதை அடிக்கோடிடுக) தற்போது கையில் இருப்பது 19வது குழந்தை. இருபதாவது வயிற்றில் தயாராகிக் கொண்டிருக்கிறது.

கல்யாணமானதில் இருந்து ஆண்டுக்கு ஒன்று என்ற கணக்கில் பெற்றுக்கொண்டே இருக்கிறாராம். உலக சாதனையை எட்டிப் பிடிக்க வேண்டுமானால் மேலும் முயற்சியை தொடரவேண்டியிருக்கும்.

55 குழந்தைகளை பெற்றதுதான் உலக சாதனை. ஆகவே கணவனும், மனைவியும் அந்த சாதனையை உடைக்க அயராது பாடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள்.




## எப்போது 2000?

↓ இரண்டாயிரமாவது ஆண்டை மிக வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கிறோம். அதனை வரவேற்க உலகெங்கும் ஆரவாரமான ஏற்பாடுகள் நடந்து வரு கின்றன.

தமிழ் நாட்டின் தலை நகரான சென்னை அண்ணாசாலையில் நிறுவப்பட்டுள்ள பிரமாண்டமான மின்னணுக் கடிகாரமே இதுவாகும். இரண்டாயிரமாவது ஆண்டுக்கு இன்னமும் எத்தனை மணித்துளிகள் பாக்கியுள்ளன என்பதை ஒரே பார்வையில் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு வினாடியாகக் குறைந்து கொண்டே போய் 0000:00:00 என இக் கடிகாரம் காட்டும்போது ஆண்டு 2000 பிறந்திருக்கும்.

தனியார் நிறுவனம் ஒன்று இதனை நிறுவியுள்ளது.



## ஒரே பாய்ச்சல்

↑ இது பறவையா? அல்லது விமானமா? இரண்டுமில்லை, இது ஜோன்டிரோட்ஸ்.


1994இல் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கிட்டத்தட்ட இதேபோன்ற ஒரு படத்தை பிரசுரித்து, மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தன வெளிநாட்டு பத்திரிகைகள்.

பந்தை தடுத்து, விக்கெட் நோக்கி பாய்ந்து இன்சமாம்மை ரன் அவுட்டாக்கினார் ஜோன்டிரோட்ஸ். இன்று உலகில் தலை சிறந்த பந்து தடுப்பாளர் இவர் தான். இம்முறையும் சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் தலைக்கு மேலே பறந்த பந்தை அந்தரத்தில் தாவித் தடுத்து லபக் கென்று அமுக்கினார். இங்குள்ளபடம் 1992இல் பந்தை தாவி பிடிக்கும்போது கிளிக் செய்யப்பட்டது.



## தகவல் பெட்டி

## முள் தொப்பி



↗ இலண்டனில் தொப்பி அணிவதும் ஒரு நாகரிகம். டயானாவும் விதம் விதமான தொப்பிகள் அணிந்து காட்சியளித்திருக்கிறார்.

சமீபகாலமாக தொப்பிகளுக்கு மவுசு குறைவதாக 'ஃபாஷன்' பிரியர்கள் கவலைப்பட்டனர்.

அவர்களது கவலையைப் போக்க உருவானதுதான் இந்த முள் தொப்பி. இந்த தொப்பிக்கு இலண்டனில் பயங்கர வரவேற்பு கிடைத்ததாம். இதில் ஒரு வசதியும் உண்டு. வம்பர்கள் வாலாட்டினால் ஆயுதமாகவும் பாவிக்கலாம்.


படிப்பகம்

# கஜோலின் தேனிலவு நேட்டோ தாக்குதல்

அஜய் தேவ்கான்-கஜோல் இருவரும் இப்படி அதிரடியான போஸ் கொடுத்து கலங்கடித்தது திருமணத்திற்கு முன்னர்.

தற்போது இந்த ஜோடிக்கு திருமணமாகி தேனிலவும் முடிந்துவிட்டது. தேனிலவுக்கு உலகம் சுற்றப் போனார்கள். சிட்னி, மெல்போர்ன், லொஸ் ஏஞ்ஜல்ஸ், ஆஸ்திரியா என்று பல நகரங்களையும், நாடுகளையும் சுற்றி தேனிலவை அதிரடியாய் கொண்டாடினார்கள்.

இறுதியாக கிரீஸ் நாட்டுக்கு சென்று அங்குள்ள விடுதி ஒன்றில் இருவரும் நீச்சல் குளத்தில் இறங்கி விளையாடினார்கள்.

அப்போது கேட்டது பாருங்கள் சத்தம். நேட்டோ படைகள் யூகோசலாவியாமீது குண்டு மழை பொழிந்த சத்தம்தான் அது.

கலங்கிப்போன இருவரும் அன்றே விமானத்தைப் பிடித்து மும்பாய்க்கு பறந்து சென்றனர். கிரீசில் சில இரவுகளை கழிக்க விடாது, சிவபூசைக் கரடியாகிவிட்டன நேட்டோ படைகள்.

கஜோல் பற்றி இன்னொரு சங்கதி; கஜோல்மீது மும்பாய் இளம் நாயகர்கள் பலர் கண்வைத்திருந்தனர். ஆனால் அவர்களில் கஜோலின் இதயத்தை கொள்ளையடித்த நாயகன் அஜய் தேவ்கான். கஜோலின்மீது நடிகர் விஜய்கூட ஆர்வமாக இருக்கிறார்.

'மின்சாரக் கனவில்' கஜோலின் நடிப்பும், நளினமும் விஜய்க்கு பிடித்து விட்டதாம். அதனால் கஜோலுடன் ஒரு படத்திலாவது ஜோடி சேர ஆசைப்பட்டார்.

சொந்த தயாரிப்பான 'நெஞ்சினிலே' படத்தில் நடிக்க கஜோலை சிபாரிசு செய்தார் விஜய்.

ஏற்கனவே ஒப்புக்கொண்ட படங்களில் நடித்து முடிக்க வேண்டும். முன்புபோல அதிக நேரம் நடிக்க முடியாது. கணவரையும் கவனிக்க வேண்டும். அதனால் மறுத்துவிட்டார் கஜோல். அதனால் வருத்தம் விஜய்க்கு.



அஜய் தேவ்கான்-கஜோல்

## வெளிநாட்டு மோகம்

தமிழ்ப்பட உலகில் காலத்திற்கு காலம் ஒரு மோகம் மேலோங்கி இருக்கும். தற்போது மேலோங்கி இருப்பது வெளிநாடுகளில் பாடல் காட்சிகளை சுட்டுத் தள்ளும் மோகம்.

'ஜீன்ஸ்' படத்தின் பின்னர் 'உன்னைத்தேடி', 'என்றென்றும் காதல்' போன்ற படங்கள் வெளிநாடுகளில் படமாக்கப்பட்டன. தற்போது சரத்குமார் நடிக்கும் 'ஒருவன்' இலண்டனிலும் 'ஸ்ரீ ராம ஜெயம்' சுவிற்சர்லாந்திலும், 'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' செக் கோஸ்லாவாக்கியாவிலும் பாடல் காட்சிகள் சுட்டுத் தள்ளப்பட்டுள்ளன.

அடுத்து பாலச்சந்தரின் 'ரோஜா வனம்' பிரபு தேவா நடிக்கும் 'டைம்' ஆகிய படங்களின் பாடல் காட்சிகள் சிலவும் வெளிநாடுகளில் படமாக்கப்பட உள்ளன.

## தாடிமணி

'தாஜ்மஹால்' படத்தில் மணிவண்ணன் தாடியில்லாமல் நடிக்கிறார். பாரதிராஜா கேட்டுக் கொண்டதால் இந்த ஏற்பாடு. அதே தாடியில்லாத முகத்தோடு வேறு சில படங்களிலும் நடிக்க இருக்கிறார்.

'வாழ்க்கைச் சக்கரம்' போன்ற படங்களிலும் முன்னர் தாடி இல்லாமல் நடித்திருந்தார் மணிவண்ணன்.

## தாய்மாமன்

'கல்யாணக் கலாட்டா' 'பொண்ணு வீட்டுக்காரன்' படங்களின் பின்னர் சத்யராஜ் மறுபடி எழுந்திருக்கிறார். 'அழகர்சாமி', 'வீரநடை', 'மலபார் பொலிஸ்', 'ஆறுவது சினம்', 'அடிமைகள்' ஆகிய நான்கு படங்களில் ஒரே சமயத்தில் நடிக்கிறார்.

வீரநடை படத்தில் மரியாதைக்குரிய தாய்மாமன் பாத்திரம். தாய்மாமன் உறவு எத்தனை புனிதமானது என்பதுதான் கதை. ஜோடி குஷ்பு.

ஒரு படத்தை முற்றாக முடித்துவிட்டுத்தான் மறுபடத்தில் நடிக்க ஆரம்பிப்பது என்ற கொள்கையை மூட்டை கட்டிப் போட்டுவிட்டார் சத்யராஜ்.

அப்படி நடித்த படங்களில் சில வெளிவர தாமதமானதால் பெரிய இடைவெளி ஏற்படுகிறது. ரசிகர்களுக்கும் ஏமாற்றம். அதனைத் தவிர்க்கவே தற்போது ஒரே நேரத்தில் பல படங்களில் நடிக்க முடிவுசெய்துவிட்டார்.

## இரு நாயகர்கள்

'பூ மகள் ஊர்வலம்' படத்தில் இரண்டு கதாநாயகர்களில் ஒருவராக நடித்து பாராட்டுப் பெற்றுள்ளவர் லிவிங்ஸ்டன்.

அடுத்து அருண்குமாருடன் இணைந்து நடிக்கிறார். இப்படத்திற்கு, 'பேட் பாய்ஸ்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. பிரபல கதாநாயகிகள் நடிக்க உள்ளனர். இசை: எஸ்.ஏ. ராஜ்குமார். வடிவேலுவும் நடிக்கிறார்.

## ரம்யா மவுசு

'படையப்பா' படத்தின் பின்னர் ரம்யா கிருஷ்ணனுக்கு அமோக மவுசு. தமிழக பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் எங்கும் அவர் பேட்டிதான். ரம்யாவும், பிரபு தேவாவும் நடித்து தெலுங்கில் வெளியான படம், 'நீ எனக்கு உயிரம்மா' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டுள்ளது. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்கிறார்கள்.



சுவாதி
படம்: பொன்விழா

## இஷாவுக்கு கார்த்திக் சிபாரிசு

கமல், ரஜினி தவிர்ந்த ஏழு முன்னணி கதாநாயகர்களில் இன்று முன்வரிசையில் நிற்பவர் கார்த்திக். ஏனையோரின் மார்க்கெட் நிலவரம் குறிப்பிடும்படி இல்லை.

கார்த்திக் கைவசம் பல படங்கள். அத்தனையிலும் வெவ்வேறு கதாநாயகிகளுடன் நடிக்கிறார்.

கடைசியாக ஒப்பந்தமாகியுள்ள படம் 'சந்தித்த வேளை'. பிரசாந்த்-சிம்ரான் நடித்து பெரு வெற்றி பெற்ற படம் 'கண்ணெதிரே தோன்றினாள்.' அதனை இயக்கிய ரவிச்சந்திரன்தான் இதனையும் இயக்குகிறார்.

கதாநாயகிகள் இரண்டுபேர். யாரைப் போடலாம்? என்று கார்த்திக்கை கேட்டார் இயக்குநர்.

ஒன்று உங்கள் தெரிவு, இன்னொன்று என் தெரிவு என்று கூறிய கார்த்திக், சிபாரிசு செய்த நடிகை: இஷா கோபிகர். இயக்குநர் விரும்பிப் போட்ட நடிகை: சிம்ரான். இசை: தேவா.

மணிவண்ணன், விஜயகுமார், கரண், தலைவாசல் விஜய், விவேக், வையாபுரி, சுஜாதா, கவிதா உட்பட பலர் நடிக்கின்றனர்.

## 'லவ் ஸ்டார்'

'காதலுக்கு மரியாதை' படத்தின் பின்னர் ஷாலினிக்கு படவுலகில் செம மரியாதை.

மணிரத்னத்தின் படம் 'அலைபாயுதே' சரண் இயக்கும் 'அமர்க்களம்' போன்ற படங்களில் கலக்கிக் கொண்டிருக்கிறார் ஷாலினி.

ஷாலினிக்கு 'அமர்க்களம்' பட இயக்குநர் சரண் கொடுத்துள்ள பட்டம்: 'லவ் ஸ்டார்'. அதுபோல அஜித் குமாருக்கு அவர் கொடுத்துள்ள பட்டம் 'லக்கி ஸ்டார்'.

## மினி சினி

- மணிரத்னம் இயக்கும் 'அலைபாயுதே' படத்தில் இந்தி நடிகர் ஷாருக்கானும், மலையாள நடிகர் மோகன்லாலும் கௌரவ வேடத்தில் நடிக்கின்றனர்.
- 'காதல் கோட்டை', 'தொடரும்' படங்களில் இணைந்து நடித்துள்ள அஜித்குமார்-தேவயானி ஜோடி 'யாரடா நீ மன்மதா' என்ற படத்தில் மறுபடியும் இணைந்து நடிக்கவுள்ளார்கள்.
- மணிவண்ணன் இயக்கத்தில் சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் 'ஆறுவது சினம்' படத்தில் கதாநாயகியாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார் விந்தியா.
- 'மலையூர் மம்பட்டியான்' படத்தில் வில்லனாக நடித்த நகைச்சுவை நடிகர் செந்தில், இப்போது 'வீரநடை' படத்தில் அருண்பாண்டியனுடன் வில்லனாக நடித்து வருகிறார்.

## திரையுலக மறுபக்கம் 106 மேனி ஜெ...

தமிழ்நாட்டிலிருந்து மயன்

தமிழ் நடிகைகளில் ஜெய... காலத்தில் பலரை தூக்கம் ... ஒரு முறையாவது அ... கள் துடித்தனர். ... பிரபல நடி... மானார் ஜெ... நடிகருடன் ... கிடையாது. ... பாடல் ... தொட்டுப் ... காட்...

- நெப்போலியன்-சங்கீதா நடிக்கும் 'பரணி' படத்தை இயக்கிவரும் கனேசராஜ். இதையடுத்து 'கரிசல் குயில்' என்ற படத்தை இயக்கவுள்ளார்.
- 'படையப்பா'வில் நீலாம்பரி வேடத்தில் வில்லியாக அசத்திய ரம்யா கிருஷ்ணன், கே. பாக்யராஜ் தயாரிக்கும் படத்தில் நாயகியாக நடிக்கவுள்ளார். கே.சுபாஷ் இயக்கும் இப்படத்தில் பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கிறார்.
- 'கண்ணெதிரே தோன்றினாள்' படத்தை இந்தியில் தயாரிக்கிறார் ஸ்ரீதேவியின் கணவர் போனிகபூர். தமிழ்ப்படத்தை இயக்கிய ரவிச்சந்திரனே இந்திப்படத்தையும் இயக்குகிறார்.
- சுரேஷ் கோபி நடித்து வெற்றிபெற்ற 'பத்ரம்' என்ற மலையாளப்படம் அதே பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டுள்ளது. 'பத்ரம்' என்றால் தமிழில் பத்திரிகை என்று அர்த்தம்.
- சுப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்க, பிரபு நாயகனாக நடிக்கும் 'திருநெல்வேலி' படத்தின் நாயகி ரோஜா. கதளி என்னும் பரிசல் ஓட்டும் பெண்ணாக நடித்து வருகிறார்.
- 'என் சுவாசக் காற்றே' படத்தைத் தயாரித்த படநிறுவனம் அடுத்து முரளியை வைத்து படமொன்றைத் தயாரிக்கவுள்ளது. இப்படத்தை அன்வர் என்னும் புதியவர் இயக்கவுள்ளார்.



www.padippakam.com

www.padippakam.com

# எழில் கண்டு மெய்மறந்தனர் ஜெயலலிதா கூறிய அனுபவம்

தாவின் அழகும், துறுதுறுப்பும் அக் க்க வைத்தது.

ர தொட்டுப் பார்த்துவிட பல கதாநாயகர் ற்காகவே அவருடன் நடித்தனர்.

ஒருவருடன் ஒரு படத்தில் ஒப்பந்த லிதா. கதைப்படி அப்படத்தில் அந்த ஜயலலிதாவுக்கு பாடல் காட்சி எதுவும்

ட்சி இருந்தால்தானே ஜெயலலிதாவைத் பார்க்க முடியும். அதனால் கனவுக் க பாடல் வைக்குமாறு ஒற்றைக்காலில் றார் நடிகர். அதன்படியே பாடல் வைக்கப் ட்டது. நடிகரின் ஆசை நிறைவேறியது.

இவ்வாறு நடிகர்களையே மயங்க வைத்த ஜெயலலிதாவுக்கு தன் அழகு ற்றி பெருமையும் இருந்தது. அவர் ப்போது 1965இல் எழுதிய கட்டுரையில் ந்த பெருமை தெரிகிறது. இதோ அந்தக் ட்டுரை:

"சென்னையில் பிரபலமாக விளங்கும் வுண்ட் ரோட்டில், சமூக வாழ்க்கையில் ரபலமான பலரை உருவாக்கும் "சர்ச் ர்க் கான்வெண்ட்' என்று சொல்லப்படும் ங்கிலப் பள்ளிக்கூடம் அமைந்துள்ளது.

ஒருநாள், திறந்து கிடக்கும் அந்தப் ள்ளியின் வாசலில் இருந்து மேல் படிப்புக் க பத்திரங்களை பெற்றுக் கொண்டு வளியேறினேன்.

என் மனதில்தான் எத்தனை என் ங்கள். இளம் பெண்கள் உள்ளத்திற்குத் ன் அந்த உணர்ச்சிகள் புலப்படும். ரிந்து கிடக்கும் வாழ்க்கைப் பாதை. தில் வண்ண எழில் காட்டும் வாழ்க் கத் துறைகள்!

என் அன்னையோ சிறந்த நடிகை, ந்தியும் அப்படித்தான். மற்றப் பழக்கங் ரும் கலையுலக தொடர்புடைய கலைஞர் ருடன்தான்.

இப்படி இருந்த நேரத்தில், பருவ நிலைச் சுமந்து கொண்டிருந்த என் லிக்கு பதினாறும் நிறையாத வயதுதான்.

என் முகத்தைப் பார்த்தவர்கள் கிலிடையே வண்ண நிலவைத் தேடினர். மேனி எழிலைப் பார்த்தோர் மேனி எழிலையே பார்த்தனர். மெய்மறந்தனர்!

என் எதிர்காலம் அன்னைக்கு தெரியுமோ என்னவோ, அதுதான் பெயரிலேயே வெற்றியைச் சேர்த்து 'ஜெயலலிதா' என்று சூட்டிவிட்டார்.

## நடிகையானேன்

நானும் நடிகையானேன். ஆமினும் படித்துத் தேறினேன். கல்லூரி செல்லும் ஆவலில் "ஸ்டெல்லா மேரிஸ்" கல்லூரியில் சேர்ந்தேன்.

இதற்குள் 'முரடன் முத்து' கன்னடப் பதிப்பு வெளிவந்திருந்தது. அதில் நடித்திருந்த என்னை பிரபல இயக்குநர் ஸ்ரீதருக்குப் பிடித்துவிட்டது.

சித்ராலயாவின் 'வெண்ணிற ஆடை' கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டேன். படம் வெளிவந்ததும் பாராட்டுக்கள் குவிந்தன. உண்மையிலேயே என் மனம் மகிழ்ச்சியில் அலைமோதியது. 'ஜெயலலிதாவின் சிறப்பான நடிப்பு' என்று எழுதாத பத்திரிகையே கிடையாது."

மேற்கண்டவாறுதான் எழுதி இருந்தார் ஜெயலலிதா.

## அன்புப் பிடியில்

ரசிப்போடு தொடர்புடைய மூன்றெழுத்து பெயர் கொண்ட நடிகை பற்றி முன்னரும் குறிப்பிட்டிருந்தோம்.

தற்போது அந்த நடிகை தமிழக ஆளும் கட்சி பிரமுகர் ஒருவரது அன்புப் பிடியில் இருக்கிறாராம். மூத்த தலைவரின் விழாவில் மேற்படி நடிகை ஆடியிருந்தார்.

அதன்பின்னர் இவரை மடக்க குறிப்பிட்ட கட்சிப் பிரமுகர்கள் சிலர் பலத்த போட்டி போட்டனர். இறுதியில் வென்றவர் மேலிட செல்வாக்கு நிறைந்த பிரமுகர்தானாம்.

நடிகைக்கு பெண் தோழிகள் பிரியம் என்றாலும், மேலிட செல்வாக்கு தேவையென்பதால் பிரமுகரை மகிழ்வித்து வருகிறாராம்.

# காதோடு சொல்லுகிறோம்

நகைச்சுவை 'வேல்' நடிகர் பற்றி தொடர்ந்து விவகாரமான செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. படப்பிடிப்பில் பெண்களைக் கண்டால் விட்டு வைப்பதில்லையாம். கன்னத்தில் 'பளார்' வாங்கிய அனுபவமும் சமீபத்தில் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, தொலைக் காட்சி தொடரில் நடிக்க இவரை அழைத்தார்களாம். நான் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபா கேட்டாராம். இவரது லொள்ளு தாங்க முடியவில்லை, ஜொள்ளும் தாங்க முடியவில்லை என்கிறார்கள்.

இசையில் ஞானம் பெற்ற இசையமைப்பாளர் சாந்தம் பற்றியும் போதித்திருக்கிறார். ஆனால் இப்போது அவரே கோபராஜாவாக மாறியிருக்கிறார். காரணமேயில்லாமல் பாடலாசிரியர்கள்மீது பாய்ந்து விழுகிறாராம்.

கோபிகரமான மும்பாய் இறக்குமதி நடிகை பணத்தில் மட்டும் குறியாக இருப்பதாக கூறப்படுகிறது. சொன்ன தொகையை கையில் வைக்கவில்லையானால், பையைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிடுகிறாராம். இவர்மீதுதான் கடைசியாக கண்வைத்துள்ளார் 'கா' நடிகர்.

மூன்றெழுத்து இயக்குநர் முன்னாள் பேபி நடிகையிடம் சரண் புகுந்துள்ளாராம். தான் இயக்கும் படத்தில் நடிகையை பாட வைத்து தன்மீது அபிமானத்தை ஏற்படுத்தியுள்ளாராம். ஐஸ்கிரீம் பிரியையான நடிகைக்கு தினமும் ஐஸ்கிரீம் கொடுத்து மகிழ்விக்கிறாராம்.


சரத்குமார்-ரம்பா
படம்: கேசவன்

## இயக்குநரான நடிகர்

அந்தக் கால வெள்ளிவிழா படங்களது கதாநாயகன் ரவிச்சந்திரன். அவரது மகன் அம்சர்விதன்.

மகனை வைத்து 'மானசீகக் காதல்' என்றொரு படத்தை இயக்குகிறார் நடிகர் ரவிச்சந்திரன்.

இப்படத்திற்காக கவர்ச்சிக்கு தாராளமாக ஒத்துழைக்க தயாரான 'சுஷ்வரி' என்ற புதுமுகத்தை கதாநாயகியாக நடிக்க வைத்துள்ளார்.

நடிப்புச் சொல்லித் தரும் சாக்கில் அந்த புதுமுகத்தை கட்டிப்பிடித்து காதல் ரசம் கொட்டுகிறார் ரவிச்சந்திரன். இந்த கிசு கிசு பற்றி ரவிச்சந்திரன் என்ன கூறுகிறார்.

"முப்பது கதாநாயகிகளுக்கு மேல் கட்டிப்பிடித்து காதல் காட்சிகளில் நான் நடித்திருக்கிறேன். எதிலும் விரசம் இருக்காது. அப்படி இருக்கும்போது இளசுகள் இரண்டுக்கு இயக்குநர் என்ற முறையில் நான் சொல்லித் தருவது தவறா?" என்கிறார்.

## பாரதரத்னா

தமிழ், தெலுங்கு இருமொழிகளில் உருவாகும் படம் 'பாரதரத்னா'. இதில் விஜயசாந்தி கதாநாயகியாக நடிக்கிறார்.

விஜயசாந்தி படத்தில் கதாநாயகனுக்கு வேலை இருக்காது. இடைக்கிடையே தலையை காட்டிவிட்டுப் போக வேண்டியதுதான். இப்படத்தில் விஜயசாந்தியின் ஜோடி வினோத்குமார். பிரபல தெலுங்கு இயக்குநர் கோடி ராமகிருஷ்ணா இயக்குகிறார்.


ஜெயராம்-மீனா
படம்: ஃப்ரெண்ட் (மலையாளம்)

## தபு வெட்கம்

நடிக்க வந்த சிறிது காலத்திலேயே இந்திய தேசிய விருது வாங்கியதை பெரிய சாதனையாக நினைக்கிறார் தபு. அதே சமயம் நாகார்ஜுனுடன் இணைந்து கிசு கிசு பரவியுள்ளதை எண்ணி வெட்கப்படுகிறாராம்.

## தெக்கத்தி பொண்ணு

நெப்போலியன், ரோஜா இணைந்து நடிக்கும் படம் 'தெக்கத்தி பொண்ணு'. ரோஜா போதாது என்று இன்னொரு நாயகியையும் நடிக்க வைக்கப் போகிறார்கள்.

ரஞ்சித், விஜயகுமார், மனோரமா, சந்திரசேகர், செந்தில் ஆகியோர் நடிக்கின்றனர்.

கதை, திரைக்கதை, வசனம், எம். ரத்னகுமார், இசை: இளையராஜா. இயக்கம் கஸ்தூரிராஜா.

## சங்கவி-விக்னேஷ்

சங்கவியை தமிழ்ப்பட உலகம் கொஞ்சம், கொஞ்சமாக மறந்துவருகிறது. அவரை மறுபடி ஞாபகப்படுத்த தயாராகும் படம் 'என் பாரதிக்கு'. இப்படத்தில் விக்னேஷ், சங்கவி நடிக்கின்றனர். இயக்கம்: ஆர்.கே. சம்பத்குமார்.

மனோரமா, வெ.ஆ.மூர்த்தி, வையாபுரி, பாரி வெங்கட், குமரிமுத்து உட்பட பலர் நடிக்கின்றனர். இசையும் இயக்குநர்தான். பாடல்கள்: பழனி பாரதி.


பிரபு-தேவயானி
படம்: என் உயிர் நீதானே

## பிரபுவின் ஜோடி

பிரபு-தேவயானி முதன் முதலாக ஜோடியாக நடித்த படம் 'என் உயிர் நீதானே!. அப்படம் சுமாராக ஓடியது. ஆனாலும் தேவயாணியின் அணுகுமுறை பிரபுவுக்கு பிடித்துவிட்டது.

அதனால் தேவயாணிக்கு மீண்டும் வாய்ப்புக் கொடுத்துள்ளார். தற்போது வெளியாகியுள்ள 'கும்மிப் பாட்டு' படத்தில் பிரபுவின் ஜோடி தேவயாணி.

அதிக விளம்பரம் இல்லாமல், மளமளவென்று படப்பிடிப்பை நடத்தி படத்தை வெளியிட்டுள்ளனர்.

இப்படமும் சுமாராகவேனும் ஓடினால், இந்த ஜோடி இன்னொரு தடவை சேரலாம்.

பிரபு மட்டுமல்ல, சரத்குமாரும் தேவயாணியைத்தான் ஜோடியாக போடுவதற்கு விரும்புகிறார். இருவரும் ஜோடியாக நடித்த படங்கள் வெற்றி பெற்றதும் அதற்கு ஒரு காரணம்.

## முகப்பில்

கஜோல்-விஜய்

## ஃபயர் ஷப்னா

ஃபயர் படத்தில் நடித்து சர்ச்சை கிளப்பிய நடிகை ஷப்னா ஆஸ்மி. தேசிய விருது பெற்ற நடிகை. இவர் விரைவில் தமிழ்ப் படம் ஒன்றில் நடிக்கப்போகிறார்.

'அன்னக்கிளி' படத்திற்கு கதை எழுதிய ஆர்.செல்வராஜ் தயாரித்து இயக்கும் படத்தில்தான் ஷப்னா நடிக்கப் போகிறார்.

www.padippakam.com

## பிரபஞ்சமே சொல்லு!

வானம் பார்க்கிறது
பூமி தொட்டுணர்கிறது.
காற்று தழுவி சுகம் கேட்கிறது.
நெருப்பு சுட்டவிக்கிறது.
நீர் குளிர்ச்சியில் சிலிர்க்கிறது.
***
ஐம்பூதங்களெனப் பெயரிட்டு
பிரபஞ்சமேயென வாய்விட்டுக் கதறி
அழுகிறானே மனிதன்- கேட்கவில்லையா?
உன் சக்தி என்ன அத்தனை பலமற்றதா?
***
ஒன்று சேர குண்டடிபட்டு
ஒருமித்துப் பிரியும் உயிர்கள்
பெருமூச்சு உன்னை
உசுப்பவில்லையெனில்...!
***
பச்சைக் குழந்தைகள் பலர்
பதைக்கத் துடிக்க கதறி
பாழுமுயிர் போவதுமறியாமல்
போகும் பரிதாபம் உன்னை
உசுப்பவில்லையெனில்...!
***
தினமும் இரத்தத்தில் காய்ந்த பூமி
நனைந்து
வாடையில் குருதி கலந்து நாறும்;
பூக்களில், காய்களில்–
மனிதத் தோலும், தசையும் கலந்து
பூமியெங்கும் மனித நேயங்கள் சிதைந்து
மானுடம் கதறுவது உன்னை
உசுப்பவில்லையெனில்...!
***
ஒருநாள் ஒரு பொழுதின் நடுநிசியில்
எத்தனையென்று சொல்ல
அத்தனை கைகளில் நெய்விளக்கு
ஆருயிர் நெஞ்சங்களில்
துன்பச்சுமைகள் அழுத்த
பிரிவின் பெருந்துயரில் வெடித்து
கண்களில் கண்ணீர் மடைதிறக்க
கல்லறைகள் முன் கதறும் ஓலம்
உன்னை உசுப்பவில்லையெனில்...!
***
........மரணித்தவர்கள்
மண்ணின் விதையாகிப் போனார்கள்.
ஒன்றிரண்டென்றால் உன்னைத்
தொடாதிருக்கலாம்.
சொல்லு பிரபஞ்சமே!
எத்தனை வித்துக்கள் உன்மடியில்
புதைந்துவிட்டன ஒன்றாக.
இப்பவும் உன்னை
உசுப்பமுடியவில்லையெனில்....!
***
உன் சக்தி என்ன அத்தனை பலமற்றதா?
இல்லை... இருப்பதாக எண்ணும் மனிதன்
அறிவற்றவனா?
சொல்லு பிரபஞ்சமே! சொல்லு...!!!

ஜெ. சூரியன்.

## தேன் கிண்ணம்



## அந்தநாள் ஞாபகம்

↑ ஆண், பெண், சிறியவர், பெரியவர் என்ற வேறுபாடின்றி அனைவரையும் கவர்ந்து இழுத்துள்ள விளையாட்டு கிரிக்கெட். இங்கே கிரிக்கெட் மட்டையுடன் காட்சி தருபவர் ஒரு பெரும் தலைவர். தமிழக முதல்வராக இருந்த அமரர் காமராஜர். எப்போதும் வேட்டிதான் கட்டியிருப்பார். சினிமாகூட அரிதாகவே பார்ப்பார். கட்டை பிரம்மச்சாரி. படிக்காத மேதை. எளிமையானவர். அப்படிப்பட்ட காமராஜரையே கிரிக்கெட் ஈர்த்திருக்கிறது என்றால் சும்மாவா?

தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் பந்தை எல்லைக் கோட்டுக்கு அடித்த பெருமிதத்தோடு காமராஜர் வீறு நடை போடும் காட்சிதான் இது!

## அநீதி

பறந்தால் மாலை அழகு
கரைந்தால் காலை அழகு!
இவர்கள்–
கூலி வாங்காத
சுத்திகரிப்பாளர்கள்!
பறவைகள்
உழைப்பாளர்படை!
பறவைகளுக்குள்
இவர்கள்தான் உழைக்கும்படை!
***
காக்கைதான் அசல்!
அதனை
'பிரின்ட்' செய்துவிட்டு வீசிய
'நெகடிவ்'தான் புறாக்கள்!
***
'மெல்பன்' மைதானத்திற்கு
வெண்பறவைகளே
அழகென்றால்
எங்கள் 'கெத்தாராமை'க்கு
காக்கைகள்தானே அழகு?
***
குயிலிடம் வாடகை வாங்காமலே
பிரசவத்திற்கு
வீடு கொடுப்பவர்கள்–
இவர்கள்!
தன் குழந்தையோடு
பிறர் குழந்தையையும்
ஊட்டி வளர்க்கும்
உத்தமர்கள்!
***
உங்கள் உணவுகளை
தட்டிப் பறிப்பது
காக்கையின் சுயநலம்
என்பீர்கள்!
அது தவறு!
***
உனக்கும்
எனக்கும்
பிள்ளைப் பராயத்திலேயே
விவேகம்–
கற்பித்தது காக்கைகள்தான்!
மனிதனுக்கு
ஆறறிவு!
காக்கைக்கு
ஏழறிவு!
***
எந்தக் காக்கையேனும்
தானிருக்க வீடு கட்டி
உங்கள் வீடுகளை
அசிங்கம் செய்திருக்கிறதா?
காக்கை புணரக் கண்டிருக்கிறீரா?
கண்ணியமானது காக்கை!
***
மனிதா!
மிருகங்களில்
உறவு சொல்லி அழைப்பது
மாடு மட்டும்தான்!
பறவைகளில்
உறவு சொல்லி அழைப்பது
காக்கை மட்டும்தான்!
***
என்றாலும்
அதன் துரதிஷ்டம்
இங்கே–
காக்கைகளை துரத்தி
புறாக்களுக்கு தீனி போடும் கைகள்!

மீராவோடை எஸ். நஸீம்- மருதானை.

## இந்தவாரம் உங்கள் பலன்

**13.06.99 முதல் 19.06.99வரை**

ஜோதிடர் 'கர்ணர்'

### மேடம்:

முதலாம் இடத்துக்கு வந்துள்ள குரு நல்ல பலன்களையே தருவார். எதிர்பார்த்த நற்கருமங்கள் ஈடேறும். பணப்புழக்கம் சீரடையும். குடும்பத்தில் சில பிணிகள் தோன்றினாலும் கவலைப்படும்படி எதுவும் நடக்காது. கார்த்திகை நட்சத்திரக்காரருக்கு யோகமான காலம்.

அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 7.
அதிஷ்ட திகதிகள் : 1,7.

### இடபம்:

இதுவரை அனுபவித்து வந்த வசதிகள் சற்றுக் குறையக் கூடும். இருப்பினும் விடா முயற்சியும் நண்பர்களின் ஒத்துழைப்பும் நலிவு ஏற்பட இடம் தரமாட்டா. குடும்பத்தில் சிறிய பிரச்சனைகள் தலை காட்டும். பிரயாண அலைச்சலுக்கு இடமுண்டு.

அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 8.
அதிஷ்ட திகதிகள் : 9,3.

### மிதுனம்:

வியாபாரத்திலோ தொழிற்துறையிலோ எதிர்பார்த்த முன்னேற்றமுண்டு. தூர இடத்து தகவல்கள் ஆறுதலளிக்கும், குடும்பம் மற்றும் நண்பர்கள் உறவு மகிழ்ச்சி அளிக்கும். திருவாதிரை நட்சத்திரப் பெண்களுக்கு எதிர்பாராத நன்மைகள் கிட்டும்.

அதிஷ்ட நாள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள் : 6,3.

### கற்கடகம்:

உடல் உபாதைகள் தொல்லை தரும். பணச் செலவும் அலைச்சலும் சற்று அதிகரிக்கும். பொதுவாக இவ்விராசிக்காரருக்கு எச்சரிக்கை தேவை. பெரியோர்களின் அனுதாபமுண்டு.

அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 4.
அதிஷ்ட திகதிகள் : வெள்ளி, செவ்வாய்.

### சிம்மம்:

இன்பமும் துன்பமும் இணைந்தே பின்னிப்பின்னி வரும். பண வருவாயும் அதற்கேற்ற செலவும் உண்டு. தூர இடத்துத் தொடர்பு ஆறுதல் அளிக்கும். உத்தர நட்சத்திரக்காரர்கள் நம்பிக்கைக்குரியவர்களாலேயே ஏமாற்றப்படக்கூடும்.

அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, புதன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 8.
அதிஷ்ட திகதிகள்: 3, 7.

### கன்னி:

வியாழனும், சனியும் அட்டமத்தில் இருப்பதால் பலவிதமான சோதனைகளை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். குடும்பத்தில் பல சச்சரவுகள்; தொழிலில் இணைந்திருப்பவர்கள் நம்பிக்கைத் துரோகிகளாகலாம்.

அதிஷ்டநாட்கள்: சனி, புதன்.
அதிஷ்ட நிறம்: கருமை கலந்த நிறங்கள்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 7,16.

### துலாம்:

குடும்பத்தில் வீண் சச்சரவுகள் தோன்றி மறையும். முன்கோபத்தை அடக்கி நிதானமாக நடக்க வேண்டும். பண வருவாய் உண்டு. பிள்ளைகளிடம் கவனம் தேவை.

அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 3.
அதிஷ்ட திகதிகள் : 7,9.

### விருச்சிகம்:

எதுவித நல்ல பலன்களையும் எதிர்பார்க்க முடியாது. குடும்பத்தவர்களுடைய ஆதரவும் குறையும். முதியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடக்கவும். விசாக நட்சத்திரப் பெண்களுக்கு எதிர்காலம் பற்றிய சுப செய்திகள் வரும்.

அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : வெளிர் பச்சை; எண்: 1.
அதிஷ்ட திகதிகள் : 14, 16.

### தனுசு:

பொதுவாக நல்ல பலன் தரும் காலம். இருப்பினும் நன்மையும் தீமையும் மாறிமாறி வரும். பிள்ளைகளிடமிருந்து நல்ல செய்திகள் வரும். பணம், கல்வி, சுமாராக அமையும்.

அதிஷ்ட நாட்கள் : வியாழன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 8.
அதிஷ்ட திகதிகள் : 2,7.

### மகரம்:

அதிக சிரமத்தின் பேரிலேயே காரியங்கள் நிறைவேறும். தொழிலில் சில சிக்கல்கள்தோன்றி மறையும். மறைமுகமான எதிர்ப்புகள் சஞ்சலம் தரலாம். திருவோண நட்சத்திரக்காரருக்கு யோகமான காலம்.

அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 7.
திகதிகள் : 12, 9.

### கும்பம்:

தொழில், பண வருவாய் சிறப்பாக இருக்கும். பிரயாணங்கள் பலன் தரும். குலைந்துபோகும் நிலையிலிருந்து திருமண ஏற்பாடுகள் சீரடையும்.

அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 7.
அதிஷ்ட திகதிகள் : 3,9.

### மீனம்:

வியாழன் 2ம் இடத்துக்கு வந்திருப்பது நல்ல பலன்களைத் தரும். இதுவரை இருந்த சிக்கல்கள் குறையும். குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கலாம். உத்தரட்டாதி நட்சத்திரப் பெண்கள் பயணத்தில் எச்சரிக்கை தேவை.

அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மண் நிறம்; எண்: 9.
அதிஷ்ட திகதிகள் : 9, 28.

## முரசின் 300 பரிசுமழையில் வெற்றியீட்டியவர்கள் இவர்கள்தான்!

151. ஆ.யோகானந்தி,
இல. 794/3, மந்தண்டாவளை, மாத்தளை.
152. எம்.எம்.எம்.ரிம்ஸான்,
இல. 32/டி,துவ வீதி, மாபோல, வத்தளை.
153. எம்.டபிள்யூ.எம்.நகீப்,
அல்லை நகர்-06, தோப்பூர்.
154. ஏ.எல்.நவாஸ்,
இல. 480, ஏ.எம்.கே.வீதி, ஓட்டமாவடி-03.
155. ஜெ.மைக்கல்,
இல. 151, பிரதான வீதி, இறக்குவானை.
156. சித்தி ஆமிசா,
இல. 194, உலங்கஸ்ஹின்ன, மீப்பிடிய, நாவலப்பிட்டிய.
157. செ.சுபா
இல. 185, கெரவலபிடிய வீதி, ஹெந்தளை, வத்தளை.
158. எம்.பி.ஹுசைன்,
இல. 184/5-பி, வென்னவத்த, வெல்லம்பிட்டிய.
159. இந்திரா வெரோனிக்கா,
இல. 5, கங்கா மாவத்தை வீதி, பொல்கொல்ல கண்டி.
160. கு.சிவதாசன்,
இல. 176, பிரதான வீதி, நீர்கொழும்பு.
161. ஸீனியா ஜுனைடீன்,
இல. 255/1, தம்பிடிய, கெகுனுகொல்ல.
162. சி.பத்மநிருபன்,
இல. 19, அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு-03.
163. எஸ்.எம்.எம்.அனஸ்,
இல. 357/பி, மாத்தளை வீதி, அக்குறணை.
164. க.பிறின்ஸ மேரி,
மெதடிஸ்த ஆலயம், அதுர, புளச்சிங்கள.
165. என்.வினோத்குமார்,
இல. 25, புருட் ஹில், எட்டன்.
166. ம.கந்தசாமி,
இல. 514/110, ரஞ்சன் விஜேரத்தினபுர, வெள்ளவத்தை.
167. எஸ்.ஜெயலட்சுமி,
இல. 46, யு.சி.குவாட்டர்ஸ், போல்ஸ் வீதி, புத்தளம்.
168. எம்.ஏ.எம்.சாம்,
இல. 23/32, விக்கிரம சிங்கபிளேஸ், களுத்துறை.
169. பி.பிரேம்லன்,
இல. 70, பிரதான வீதி, தெல்தோட்டை.
170. யு.எல்.எம்.சாருக்,
ஏசியன் கோர்னர், பஸார் வீதி, பதுளை.
171. மொஹம்மட் மின்ஸார்,
இல. 178/3, வெளிபிடியவீதி, கொலேதண்ட, வெளிகம.
172. எஸ்.எம்.அன்சாத்,
இலங்கை வங்கி ஒழுங்கை, 1ம் குறிச்சி, பொத்துவில்.
173. ஏ.ஐ.பாத்திமா,
இல.183, மருதான வீதி, பேருவளை.
174. செ. சிவகுமார்
2ம் வட்டாரம், குச்சவெளி, திருகோணமலை.
175. எம்.எம்.கே.சியாதா,
216, மெதகம, பிபிலை.
176. ந.நெமிநாதன்,
கடதாசி கம்பனி லிமிடட், காகிதஆலை. வாழைச்சேனை.
177. வீ.கிருஸ்ணன்,
498, நாவலவீதி, ராஜகிரிய.
178. அ.சுகிர்தா,
98, பிரதான வீதி, திருகோணமலை.
179. எம்.ஐ.சரிஹா,
332, நிதுல்கஹ கோட்டுவ, உக்குவலை.
180. க.பொன்னுதுரை,
செம்மண் தீவு, முருங்கன்.
181. க.சுசிகலா,
அரசினர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
182. அ.ச.ரமீஸா,
56, மத்திய பள்ளி வீதி, கிண்ணியா-02.
183. வே.அருள்ராஜ்,
740, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
184. எம்.தயாபரன்,
33பி, தண்ணீர் கிணற்றடிவீதி, முகத்துவாரம், மட்டக்களப்பு.
185. ரி.இளங்கோ,
மல்வத்தை தோட்டம், பண்டாரவளை.
186. ரி.துரையப்பா,
4,பரஸ் வீதி, ஹவா எளிய, நுவரெலியா.
187. சா.யோகராசா, பாலநகர், மூதூர்-02.
188. க.தவீந்திரன்,
41, 2வது ஒழுங்கை, தெகிவளை.
189. ப.நந்தினி,
109, 1/2, டேம் வீதி, கொழும்பு-12.
190. எல்.டி.பிரகாஷ்,
எல்லப்பர்மருதங்குளம், கல்லடி ஒழுங்கை, வவுனியா.
191. கு.அருணகுமார்,
இரணை இலுப்பைக்குளம், வவுனியா.
192. ம.சுவேதகுமாரன்,
மாவட்ட வைத்தியசாலை, சம்மாந்துறை.
193. மஸாமிரா உசைன்,
44, டீன் வீதி, காத்தான்குடி-06.
194. எம்.ஓ.எம்.அப்துல் காதர்,
421, ஹில் அவுஸ், உலஹிடிவெல, மல்வான.
195. எஸ்.வினிஸ்டெல்லா,
பள்ளிமுனை, மன்னார்.
196. T. RAVICHANDRAN,
OB-AAREGG WEG, 3004-BERN, SWITZERLAND.
197. S RAJAN,
36, RUE MONTHOLON, 7500G PARIS, FRANCE.
198. MRS.SURESKUMAR,
AM FOLHEN GAREN, D-85764 OBER SCHLEISSHEIM, GERMANY.
199. N.THAYANI
3560, BEDFORD #04
MONTREAL QC
H35 - 1G7
CANADA.
200. செல்வி.எஸ். வனிதா
சென்லெனாட்ஸ் கொலனி, இராகலை, ஹல்கரனோயா.

ஏனையோர் விபரம் அடுத்த முரசில்

## நில்-கவனி-முன்னேறு

மிருகங்களிடம் இருக்கிற தூய்மையை இறைவன் மனிதனிடம் வைக்கவில்லை. அவற்றுக்கு அளித்த பாதுகாப்பு மனித சாதிக்கு இல்லை.

மிருகங்கள் பல் தேய்ப்பதில்லை. ஆனால் பல் டாக்டர்களிடம் மனிதன் போகிற அளவுக்குப் போவதில்லை.

சுத்தமான நீரில் குளிப்பதில்லை. ஆனால் சரும வைத்தியர்களை மனிதன் நாடுவது போல நாடுவதில்லை.

கண்டபடி உடலுறவு கொள்ளுகின்றன. மிருகங்களில் விலை மாதரும் பொது மகளிரும் மனித சாதியைக் காட்டிலும் கொள்ளையோ கொள்ளை. ஆனாலும் எய்ட்ஸ் நோயோ அல்லது அதைப் போன்ற



நோயோ அதற்கான பிரசாரமோ அவற்றிடம் இல்லை.

மாமிசம் உட்பட அனைத்தையும் பச்சையாகவேதான் உண்கின்றன. தூசி, மண், அழுக்கு,பூச்சி,புழு அனைத்துடனும்தான் பசு புல்லைத் தின்னுகிறது.

கல்லையும் மண்ணையும் நீக்கி சமைத்து உண்ணுகிறவனுக்கு குடலிலே கல்.

என்னவோ மனுஷன் ரொம்பத்தான் தனக்கு ஆறறிவு ஆறாயிரம் அறிவு என்று ஜம்பம் அடித்துக் கொள்கிறான்.

சரிதான் போடா மனுஷா!

பிரகஸ்பதி



படிப்பகம்

www.padippakam.com



# கூந்தல் அழகுக்கு

## கண்டிஷனர் தயாரிக்கலாம்

தேவையான பொருட்கள்:

முட்டை- 01
மருதோன்றித்தூள்- ஒரு மேசைக்கரண்டி
தேயிலைச்சாயம் (கடுமையான)- ஒரு டம்ளர்.

செய்முறை:

முட்டையை உடைத்து அதில் உள்ள மஞ்சட் கருவை எடுத்துவிட்டு வெள்ளைக்கருவில் மருதோன்றித் தூளை சேர்த்து நன்கு கலக்கவும். அந்தக் கலவையில் கொதிக்கும் தேயிலைச் சாயத்தை ஊற்றி மேலும் நன்கு கலக்கவும். ஹென்னா கண்டிஷனர் தயார்.



அதை 15 நிமிடங்கள் வைத்துவிட்டு, தலைமுடியில் கால் காலாக எடுத்துப் பூசிக் கொள்ளலாம். சைனஸ் தொல்லை உள்ளவர்கள் இத்துடன் இரண்டு சொட்டு யூகலிப்டஸ் எண்ணெயைச் சேர்த்துக் கொள்ளலாம்.

சைனஸ் தொல்லை இல்லாதவர்கள் அந்தக் கலவையுடன் எலுமிச்சம்பழச் சாற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

அழகு நிலையங்களுக்குப் போனால் எக்கச்சக்கமாகச் செலவாகி விடுமே என்று நினைப்பவர்கள் இந்த எளிய முறையைப் பயன்படுத்திப் பயனடையலாம். இந்தக் கண்டிஷனரால் பல நன்மைகள் உள்ளன. இதில் செயற்கையான இரசாயனக் கலவைகள் ஏதும் இல்லாததால் தலைமுடி மற்றும் சருமத்திற்கு எவ்வித பாதிப்போ பின்விளைவோ ஏற்படாது. எனவே இதைத் தைரியமாக உபயோகிக்கலாம்.

இளநரை முடி உள்ளவர்களுக்கு இது ஒரு இயற்கையான 'ஹேயார் டை' ஆகப் பயன்படுகிறது. இந்தக் கண்டிஷனரை வாரம் ஒரு முறை உபயோகித்தால் தலைமுடி நன்றாக வளரும். பொடுகுத் தொல்லையிலிருந்து மீளலாம்.

முக்கிய குறிப்புக்கள்:

1. அழுக்கான அல்லது எண்ணெய்ப் பிசுக்கு உள்ள தலைமுடியில் இந்தக் கண்டிஷனரைப் பயன்படுத்தினால் பலனளிக்காது.

2. இதைப் பயன்படுத்து முன் ஷம்பூ அல்லது சீயக்காய் தேய்த்து முடியை நன்கு கழுவ வேண்டும்.

3. ஈரமான தலையில் கண்டிஷனர் போடக்கூடாது. தலைமுடி நன்கு உலர்ந்த பின்தான் கண்டிஷனர் செய்ய வேண்டும்.

4. கண்டிஷனர் உலர்ந்த பின் இளம் சூடான நீரில் தலைமுடியை நன்கு அலச வேண்டும்.

5. கண்டிஷனர் போட்ட பின் தலைமுடியில் ஷம்பு அல்லது சீயக்காய் எதுவும் போடக்கூடாது.

# அசைவம் கோடைக்கு உகந்ததா?



கோடை காலங்களில் அசைவ உணவுகளைச் சாப்பிடுவது நல்லதல்ல.

ஏனென்றால், கோடை காலத்தில் அசைவ உணவுகளில் பக்ரீரியாக்கள் எளிதில் தோன்றி உணவுப் பொருட்களை விஷத்தன்மை கொண்டதாக மாற்றிவிடும். இந்த உணவை உண்ணும்போது வாந்தி, மயக்கம் என்பன ஏற்படும்.

சிலருக்கு வயிற்றில் இரைச்சல் ஏற்படும். இதனால் கோடை காலங்களில் இம்மாதிரியான உணவு வகைகளைக் குறைத்துக் கொள்வது நல்லது.

அதிக உஷ்ணம் காரணமாக சிலருக்கு உடலில் உள்ளநீர் வியர்வையாக மாறி அதிக அளவில் வெளியேறும். இப்படிப்பட்டவர்களுக்கு களைப்பு ஏற்பட்டு அடிக்கடி மயக்கம் ஏற்படும். நீராகாரத்தை உடனடியாகப் பருகக் கொடுத்து இப்படியானவர்களின் மயக்கத்தைப் போக்கலாம்.

# சின்னச் சின்ன செய்திகள்

★ வெய்யில் காலங்களில் சந்தனத்தோடு பன்னீரைக் கலந்து முகத்தில் பூசி, காய்ந்த பின்னர் அலம்பி விட்டால் பருக்கள் வராது.

★ ஷம்பு போடுவதால் தலைமுடி மிகவும் வறட்சியாகக் காணப்படும். அது போன்ற தன்மையை நீக்க, ஷம்பு போட்டுத் தேய்த்து தலையைக் கழுவிய பின் அரை டம்ளர் பாலை தலையில் விட்டு தேய்த்து அலசினால் கூந்தல் மென்மையாகவும் அழகாகவும் இருக்கும்.

★ புத்தகங்களின் மீதோ அல்லது முக்கிய ஆவணங்கள் மீதோ எண்ணெய்க் கறை பட்டால், கறைபட்ட இடத்தில் இரண்டு பக்கமும் நிறைய டால்கம் பவுடரைத் தூவி, பின் ஒரு மெல்லிய துணியால் துடைத்தால், கறை மறைந்து விடும்.

# கண்ணீரில் கரைந்த இரவுகள் 91

புவனா

டோடியின் இல்லத்தை கார்கள் நெருங்கியதும், அங்கு கண்ட காட்சி டோடி, டயானா இருவரையும் திகைப்பில் ஆழ்த்தியது.



டோடியின் இல்லத்தை கண்டுபிடித்து அங்கும் பல படப்பிடிப்பாளர்களும், செய்தியாளர்களும் கூடியிருந்தனர்.

இல்லத்தின் முன்னால் வண்டிகள் நின்றதும் ஒரு கூட்டமாக வண்டியை சூழ்ந்து கொண்டனர்.

டோடியும், டயானாவும் பயணம் செய்த காரின் பின்னால் வந்த ரிச் ஹோட்டலின் பாதுகாவலர் கள் இறங்கி ஓடிவந்து, கூட்டத்தை விலக்க முற்பட்டனர்.

அவர்களை கெட்ட வார்த்தைகளால் படப்பிடிப்பாளர்கள் திட்டினார்கள். டோடி குடும்பம் பற்றியும் அவதூறான வார்த்தைகளை வீசினார்கள்.

காரின் கண்ணாடிகள் மூடப்பட்டிருந்ததால் டோடியின் காதுகளில் அந்த வார்த்தைகள் விழவில்லை.

அந்தக் கூட்டத்தில் ஓர் உருவத்தைக் கண்ட டயானா அச்சமுற்றார். ஆறு அடிக்கு சற்று அதிகமான உயரம் கொண்ட ரொமெளல்ட் ராட் உயரத்துக்கு ஏற்ற பருமன் கொண்டவர். கையில் கமராவை வைத்துக் கொண்டு அவர் பார்த்த பார்வை டயானாவுக்கு விபரீதமாக தோன்றியது.

திகில் படங்களில் வருகின்ற வில்லன்போல அந்த படப்பிடிப்பாளர் காணப்பட்டார்.

பாதுகாப்பாளர் ஒருவர் அவரது கமரா லென்சில் தன் கையை வைத்து படம்பிடிக்காது தடுத்தார்.

அந்தப் பாதுகாவலரை பயங்கர உறுமலுடன் மறுபுறம் தள்ளிவிட்டார் ரொமெளல்ட் ராட்.

அக் காட்சியையும் அவதானித்த டயானா, அருகிலிருந்த டோடியிடம் "இந்த மனிதன ஆபத்தானவன்" என்று சுட்டிக் காட்டினார்.

## முற்றுகை

படப்பிடிப்பாளர்களது முற்றுகைகள், கண்ணைக் கூசும் கமரா வெளிச்சங்கள் என்பவை டயானாவுக்கு புதியவையல்ல.

ஆனால் அன்று டோடியின் இல்லத்தின் முன்பாக திரண்டு நின்ற படப்பிடிப்பாளர்கள் நடந்து கொண்ட முறை டயானா முன்னர் சந்தித்த அனுபவங்களில் இருந்துமாறுபட்டிருந்தது. அதுதான் அவருக்கு அச்சம் ஏற்பட்டது.

ஒருவிதமாக கூட்டத்தை சமாளித்து டோடியும், டயானாவும் இலத்திற்குள் பிரவேசித்தனர்.



டயானா வெளிறிப் போயிருந்தார். டோடியும் சோர்வடைந்தும், மிகவும் கோபமடைந்தும் காணப்பட்டார்.

தனது தந்தையின் பாதுகாப்புபிரிவை நம்பி, ∴பிரான்ஸ் அரசின் பாதுகாப்பை நிராகரித்தது தவறோ என்றும் டோடி எண்ணினார்.

முதலில் மறுத்துவிட்டு இனி மேல் கோரினால், டயானா இளக்காரமாக நினைப்பார் என்று பேசாதிருந்தார் டோடி.

இருவருமே அமைதி இழந்து போனதால் இரண்டு மணிநேரம் ஓய்வெடுத்தனர்.

டோடியின் மார்பில் முகத்தை புதைத்தபடி டயானா கண்களை மூடியிருந்தார். டயானாவின் முதுகை அன்பாக வருடிக் கொடுத்தபடி டோடியும் மனதை ஒரு நிலைப்படுத்த முயன்று கொண்டிருந்தார்.

அன்றிரவு நடைபெற இருந்த விருந்துக்கு செல்வதற்கு இருவரும் ஆயத்தமாக வேண்டியிருந்தது.

## ஹென்றிபோல்

டோடிக்கு மிகவும் நம்பிக்கையானவர் ஹென்றிபோல். ரிட்ஸ் ஹோட்டல் பாதுகாப்புப் பிரிவின் உபதலைவர் அவர்தான்.

ஹென்றிபோல் உல்லாசமான ஆசாமி. பெண்களும், மதுவும் என்றால் தன்னை மறந்து மூழ்கிவிடுவார்.

சபானாயிஸ் சாலையில் சாம்ப்மெஸ்வே என்னும் மதுக் கடை இருந்தது.

அந்த மதுக்கடையில் அழகிகள் மத்தியில் தமாஷாக பேசிக் கொண்டு இருந்தார் ஹென்றி போல். அவரது தொடையை கிள்ளி விஷமம் செய்தவளை விஷமமான இடத்தில் ஹென்றிபோல் கிள்ளியபோதுதான் அவருடைய கையடக்க தொலைபேசி சிணுங்கியது.

அன்றிரவு ரிட்ஸ் ஹோட்டலின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த ∴பிராங்கோயிஸ் ரெண்டிஸ் என்பவரிடமிருந்தே அழைப்பு வந்திருந்தது.

"டோடி உன்னை வலைவீசி தேடிக் கொண்டிருக்கிறார். உடனடியாக ஹோட்டலுக்கு வந்து சேர்" என்று அழைத்தார் ∴பிராங்.

அன்றிரவை தன்னுடன் களிக்க தயாராக இருந்த அழகியை சமாதானப்படுத்தி, முத்தம் ஒன்றை கொடுத்துவிட்டு புறப்பட்டார் ஹென்றிபோல்.

ரிட்ஸ் ஹோட்டலின் நிர்வாகத்தில் இரண்டாவது ஸ்தானத்தில் இருந்தவர் கிளொடி ரெளலற்.

டோடி-டயானா கலந்து கொள்ளும் இரவு விருந்துக்கான ஏற்பாட்டை கவனிப்பதற்காக கிளொடி ரெளலற் செஸ் பெருனாயிட் உணவு விடுதிக்கு முன்பாக நின்றிருந்தார்.

இரவு 9 மணிக்கு டோடியின் இல்ல தொலைபேசி சிணுங்கியது. உணவகத்தில் சகல ஏற்பாடுகளும் தயாராகிவிட்டதாக தகவல் கூறப்பட்டது.

9.30க்கு டயானா-டோடி

## துரத்திய படப்பிடிப்பாளர்கள்



இருவரும் இரவு உணவுக்கு செல்வதற்கான ஆயத்தங்களை முடித்துக் கொண்டனர்.

டயானா வெள்ளை நிறத்தில் கால் முழுவதையும் மூடும் வேர்சாக் பிளேசர் அணிந்திருந்தார்.

தங்கக் கைக்கடிகாரம், ரி∴பாணி கழுத்தணி, வெள்ளைக்கற்கள் பதித்த தங்கக் காதணி ஆகியவற்றையும் அணிந்து கொண்டார்.

டோடியும் முக்கியமான இந்த நிகழ்வுக்கு ஏற்றவாறு நீல வர்ண கல்வின் கிளீன் ஜீன்ஸ், வெள்ளை தோலாலான சேட், பழுப்பு நிற கௌபாய் பாதணிகள் அணிந்து கொண்டார்.

சிட்டிஸன் கைக்கடிகாரம் டோடியின் கையில் காணப்பட்டது. புறப்படும்போது மறக்காமல் ஒரு பொருளை எடுத்து தன் பொக்கெட்டில் போட்டுக் கொண்டார்.

டயானா அன்போடு பரிசளித்த தங்கத்தால் செய்யப்பட்ட சுருட்டு நுனி நறுக்கும் கருவிதான் அது.

## புறப்பாடு

டோடியின் இல்லத்தில் இருந்து இரு வண்டிகளும் புறப்பட்டன. துரித வேகத்தில் முன்னால் டோடி, டயானா பயணம் செய்த வண்டி பறந்தது. அதன் பின்னால் பாதுகாவலர்களது வண்டி தொடர்ந்தது.

அந்த வண்டிகளது அசுர வேகத்திற்கு ஈடுகொடுத்து, அவற்றின் பின்னால் கார்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும் படப்பிடிப்பாளர்கள் துரத்தி வந்தனர்.

டோடிக்கு தமது காரைச் செலுத்தும் சாரதியின் வேகம் போதாது என்று தோன்றியிருக்க வேண்டும். அதனால் மேலும் வேகத்தை அதிகப்படுத்துமாறு தூண்டிக் கொண்டிருந்தார்.

இதற்கிடையே செஸ் பெருனாயிட் உணவு விடுதிக்கு இருவரும் வரப்போகும் செய்தியும் எப்படியே கசிந்து விட்டது.

அதனால் அங்கும் ஏராளமான படப்பிடிப்பாளர்கள் கூடி நின்றனர். உணவக வாயிலை அடைத்துக் கொண்டு அவர்கள் நின்றனர்.

உணவகத்தை நெருங்கியதும் டோடிக்கு வெறுப்பாகிவிட்டது. இங்கும் அமைதியாக கொண்டாட முடியாது என்று தெரிந்து போனது.

தனது கார் சாரதியான ∴பிலிப் டௌர்நெளவிடம் காரை ரிட்ஸ் ஹோட்டலுக்கு செலுத்துமாறு கூறினார்.

மீண்டும் ரிட்ஸ் ஹோட்டல் நோக்கி கார் விரைந்தது. படப்பிடிப்பாளர்களின் துரத்தலும் தொடர்ந்தது. **(அடுத்த வாரமும் வரும்)**


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** FW

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................
கையொப்பம்:........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-06-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**மன்னார் வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | அமுதா ஜெயராஜா, எழுத்தூர், மன்னார். |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**அம்மன் ஜுவல்ஸ்–முரசு இணைந்து வழங்கும்**

**வைர மோதிரப் போட்டி**

● முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாகக் காத்திருக்கிறது.
● 25 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
● 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
● பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
● இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அறிவிக்கும்போது அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.

அம்மன்–முரசு வைர மோதிரப் போட்டி




படிப்பகம்

www.padippakam.com






சக்தி தனக்கே கருவியாக்கு - சிவ
சக்திசொலும் மொழியது கேட்கும்
- செவி
சக்தி தனக்கே கருவியாக்கு - அது
சக்திதிருப் பாடலினை வேட்கும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## தன்வினை தன்னைச் சுடும்



ஓர் ஊரில் ஒரு செல்வந்தரிடம் இரண்டு குதிரைகளும், இரண்டு கழுதைகளும் இருந்தன.

செல்வந்தர் குதிரைகளையும், கழுதைகளையும் நன்றாகவே பராமரித்து வந்தார்.

கழுதைகள் இரண்டிற்கும் குதிரைகள் மீது சரியான பொறாமை. குதிரைகள் இரண்டைப் பற்றியும் எல்லாரும் நல்லபடியாகப் பேசுவதே கழுதைகளின் பொறாமைக்குக் காரணம்.

குதிரைகள் இரண்டையும் ஓட முடியாதபடி செய்து விட்டால், செல்வந்தர் அவைகளை விரட்டி விடுவார் என்று கழுதைகள் இரண்டும் நினைத்தன.

குதிரைகளை ஓடமுடியாதபடி செய்ய அவற்றின் கால்களை முறிக்க கழுதைகள் திட்டமிட்டன.

வழக்கமாக குதிரைகள் இரண்டும் மாலை வேளைகளில் மேய்ச்சலுக்குச் சென்று விட்டு, இருட்டத் தொடங்கியதும் லாயத்திற்கு வரும்.

எனவே குதிரைகள் வழக்கமாக வரும் வழியில் குழிதோண்டி அதில் அவைகளை வீழ்த்தி, அவற்றின் கால்களை முறிக்க கழுதைகள் திட்டமிட்டன.

மாலையில் குதிரைகள் மேய்ச்சலுக்குச் சென்ற பின், இரண்டு கழுதைகளும் குழி தோண்டின. சற்று ஆழமானதும், அந்தக் குழியின் மேல் சிறு குச்சிகளை அடுக்கி, குச்சிகளின் மேல் சருகுகளைப் பரப்பின.

இப்போது குழி இருக்குமிடம் தெரியவில்லை.

பின் இரண்டு கழுதைகளும் ஒன்றும் நடவாதது போல் நல்ல பிள்ளைகளாக குதிரைகள் மேயுமிடத்திற்குச் சென்றன.

அன்று மாலை செல்வந்தர் எங்கோ செல்லப் புறப்பட்டார். அதனால் குதிரைகளை லாயத்திற்கு ஓட்டிச் செல்லாமல், அவைகளை வீட்டின் முன்பக்கமாக இருந்த வண்டியில் கொண்டு போய்ப் பூட்டினான் வேலையாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த கழுதைகளுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. "தாம் நினைத்தது நடக்கவில்லையே" என்று கவலைப்பட்டன.

அப்போது கழுதைகள் நின்ற இடத்திற்கு சில வேட்டை நாய்கள் பாய்ந்தோடி வந்தன. வேட்டை நாய்கள் தம்மைத்தான் கடிக்க வருகின்றன என நினைத்து கழுதைகள் தறிகெட்டு ஓடின.

தாம் எங்கே ஓடுகிறோம் என்று தெரியாமல் ஓடி, குதிரைகளுக்குத் தோண்டிய குழியில் விழுந்து தமது கால்களை முறித்துக் கொண்டன கழுதைகள் இரண்டும்.

குழந்தைகளே! பிறருக்குத் தீங்கு செய்ய நினைத்தால் அது அவர்களுக்கெதிராகவே திரும்பி விடும். இதைத்தான் நமது முன்னோர்கள் 'தன்வினை தன்னைச் சுடும்' என்று சொல்லி வைத்திருக்கிறார்கள்.


## அதிசயம் — ஆனால் உண்மை!



↗ சுவிற்ஸர்லாந்தில் உள்ள எமராபின் என்ற கை ஊனமுற்ற பெண், தனது கால்களால் அழகாகப் பின்னல் வேலை செய்வார். முத்து முத்தாக எழுதுவார். பின்னர் படிப்படியாக புகழ் பெற்ற ஓவியா ஆனார்.



↑ ஆபிரிக்க நாட்டின் தங்கனிகா நாட்டு கொண்டோ பழங்குடியினர் சில வகை மூலிகைச் சாறுகளை உடலில் பூசிக் கொண்டு உடலை நெருப்புத் தீண்டாதவாறு காக்கின்றனர். இவர்களின் உடலின்மீது தீப்பந்தத்தை வைத்தால் நெருப்பு இவர்களைப் பொசுக்காது.



← நியூஸிலாந்தின் ஒக்லாண்ட் நகரில் 100 தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து 3 மணி 44 நிமிடம் 59 விநாடிகளில் வீடு ஒன்றைக் கட்டி கின்னஸ் சாதனை படைத்தார்கள். இதன் மூலம் அமெரிக்கர்களின் 4 மணி 9 நிமிடம் 15 விநாடிகளில் கட்டி முடிக்கப்பட்ட வீட்டு சாதனை முறியடிக்கப்பட்டது.

## ஏர் உழும் குதிரை




அமெரிக்க நாடுகளில் ஏரில் குதிரைகளைப் பூட்டி உழுவார்கள். இது அங்கு சாதாரணமான விஷயம்.

எமது நாட்டில் எருதுகளை ஏரில் பூட்டி வயல்களை உழுவார்கள். ஐரோப்பிய, இப்படி குதிரைகளை ஏரில் பூட்டி உழும் முறை கி.பி. 800ம் ஆண்டில் ஐரோப்பியாவில் தொடங்கியது. இதற்கு முன் எருதுகளை வைத்து ஏரில் பூட்டும் நுகத்தடி குதிரைகளுக்குப் பொருந்தாமல் இருந்தது.

800ம் ஆண்டில் தான் குதிரைகளின் தோள்களில் வைத்து, அது இழுக்கக்கூடிய நுகத்தடிகள் தயாரிக்கப்பட்டன.

குதிரைகள் எருதுகளைப் போல் ஐந்து மடங்கு வலிமையுடன் ஏர் உழக்கூடியவை.

## பெயர் வரக் காரணம்




இன்று நாம் பயன்படுத்தும் பேனாவை ஆங்கிலத்தில் பென் என்று சொல்வோம். இந்தப் பெயர் வந்தது எப்படி என்று தெரியுமா?

'பென்னா' என்ற இலத்தீன் சொல்லில் இருந்துதான் பென் என்ற சொல் வந்தது. 'பென்னா' என்றால் பறவைகளின் இறகு என்று அர்த்தம்.

ஆரம்பத்தில் பறவைகளின் இறகுகளே பேனாக்களாகப் பயன்பட்டன. அதனால் தான் பறவைகளின் இறகு, என்று அர்த்தம் கொண்ட 'பென்னா' என்ற சொல் பென் என்று அழைக்கப்படுகிறது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **19.06.1999.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 300**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல.1772**
**கொழும்பு.**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 298

பரிசுக்குரியவர்:
சி. பிரஷாந்தன்,
தி/ சம்பூர் மகாவித்தியாலயம், சம்பூர்-4.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| இராமச்சந்திரன் சதீஸ்ராஜ், கராகொடை முஸ்லிம் வித்தியாலயம், எட்டியாந்தோட்டை. | நிஷாந்தினி ரட்ணம், இ/ பலாங்கொடை த.ம.வி., பலாங்கொடை. |
| க. தனுஷன், பாரதி தமிழ் மகா வித்தியாலயம், வத்துகாமம், கண்டி. | முஹைடீன் முஹைஸ், விபுலானந்தா த.ம. வித்தியாலயம், திருகோணமலை. |
| ஹுஸ்னுன் நளீல் ஹுதைபா, ஸாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம். | மோகன் பிரசாந்தன், நு/ புளியாவத்தை த.ம.வி., டிக்கோயா. |
| சுரேந்திரராஜா-சுரேகா, ஸ்ரீ சண்முக வித்தியாலயம், திருகோணமலை. | எம். ஜக்கீஸ், அல்ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயம், நரைச்சோலை. |
| பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. | எம். சுபாஸ், நம்மாதா பாடசாலை, நுவரெலியா. |

## விடுகதைகளும் விடைகளும்

1. பெட்டியைத்திறந்தேன் பூட்ட முடியவில்லை.
அது என்ன?
2. சின்னத்தம்பி சிவந்த தம்பி, திறந்த வாய் மூடாத தம்பி.
அது என்ன?
3. வரும்போது வெண்சிவப்பு, வளர வளர தகதகப்பு, போகும் போது பெரும் சிவப்பு.
அது என்ன?
4. அழைக்கும் போது உரத்துக் குரல் கொடுப்பான், பேசும்போது காதில் கிசுகிசுப்பான்.
அவன் யார்?
5. தரையில் வளராத மரம், கிளையும் இல்லாத மரம்.
அது என்ன?
6. வீட்டை விட்டு வெளியே வராமலேயே ஊர் விஷயம் முழுக்கப் பேசுவான்.
அவன் யார்?
7. வலை விரித்திடுவான் வேடனல்ல, உயிர் குடித்திடுவான் எமனும் அல்ல.
அவன் யார்?
8. வளர்வதும் மெலிவதும் இவளது வாடிக்கை.
அவள் யார்?
9. அடர்ந்த காட்டில் ஒற்றையடிப்பாதை, நடப்பார் தான் யாருமில்லை.
அது என்ன?
10. தண்ணீரில் தள்ளாட்டம், தரைக்கு வந்தால் கல்லாட்டம்.
அது என்ன?

### விடைகள்

1. தேங்காய் 2. தபால்பெட்டி
3. சூரியன் 4. தொலைபேசி
5. தலைமுடி 6. நாக்கு
7. சிலந்தி 8. நிலா
9. தலைவகிடு 10. படகு.

தொகுப்பு: ஏ. அகல்யா.

## உணவைத் தேடி...



வடதுருவத்தில் வாழும் போலர் கரடிகள் தமது இரைக்காக ஆயுள் முழுவதும் நடந்து கொண்டிருக்கும்.

இளவேனில் காலத்தில் வடக்குப் பக்கமாகச் செல்லும். இலையுதிர் காலத்தில் தெற்குப் பக்கமாகத் திரும்பி விடும்.

இதன் இரை சீல்கள் ஆகும். இந்தச் சீலின் இரை ஒரு வகை மீன்கள். அந்த மீன்களின் இரை இறால் போன்ற சிறிய மீன்கள்.

அந்த இறால்கள் இருக்குமிடத்தில் மீன்கள் இருக்கும். தன் இரையைத் தேடி மீன் செல்ல, மீனைத் தேடி சீல் செல்லும். சீல்களைத் தேடி போலர் கரடிகள் செல்லும். இந்தப் பயணம் வாழ்நாள் முழுவதும் நடந்து கொண்டிருக்கும்.

இக்கரடி ஒரு வாரத்தில் 120 கிலோ மீட்டர் வரை பயணம் செய்யும். நீந்துவதிலும் கெட்டித்தனமானது. இது சளைக்காமல் 320 கிலோ மீட்டர் வரை தொடர்ந்து நீந்தக் கூடியது.

## முதல் கொடி



உலகில் முதன் முதலாக கொடி ஏந்தியவர்கள் பண்டைக்கால எகிப்தியர்கள். இவர்கள் தான் கொடி ஏற்றிப் போர்க்களத்திற்கும் சென்றவர்கள்.

இவர்கள் முதலில் ஏந்திய கொடி, நீண்ட தடியில், மிக நீளமான துணியைச் சுற்றி பறந்து கொண்டிருந்தது.

தமது சின்னத்தை மரத்தில் செதுக்கி, அதனைத் தடியின் உச்சியில் வைத்திருந்தனர்.

இதன் பின்னர் இவாகள் காற்றில் பறக்க முடியாத கொடியையும் தயாரித்துப் பயன்படுத்தினார்.

## முதலைக் கண்ணீர்

சிலர் போலியாக அழுவதை முதலைக் கண்ணீர் வடிப்பதாகக் கூறுவார்கள். இதற்குக் காரணம் முதலை ஒருபோதும் அழுவதில்லை, ஆனால் அதன் கண்களில் இருந்து கண்ணீர் வரும்.

முதலை உணவு சாப்பிடும், உணவில் உள்ள உப்புச் சத்தும், தண்ணீரும் கண்ணீராக வெளியேறுகிறது. உண்மையில் இது கண்ணீர் அல்ல. எனவே தான் போலியாக அழுபவர்களை முதலைக் கண்ணீர் வடிப்பதாகக் கூறுவார்கள்.

## வர்ண நதிகள்



உலகில் உள்ள நதிகள் பல நிறங்களின் பெயர்களைக் கொண்டிருக்கின்றன.

- ஆபிரிக்காவில் உள்ள நைல் நதி, நீல நதி (BLUE RIVER) என்றும், வெள்ளை நதி (WHITE RIVER) என்றும் அழைக்கப்படுகிறது.
- அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் சிவப்பு நதி (RED RIVER) உள்ளது.
- அமெரிக்கா மற்றும் கனடாவில் மூன்று கறுப்பு நதிகள் (BLACK RIVERS) உள்ளன.
- சீனாவில் குவாங்கோ நதி உள்ளது. குவாங்கோ நதி என்றால் சீனமொழியில் மஞ்சள் நதி (YELLOW RIVER) என்று பொருள்.
- அமெரிக்காவில் இரண்டு பச்சை நதிகள் (GREEN RIVERS) உள்ளன.
- ஆபிரிக்காவில் நைஜர் நதி உள்ளது. நைஜர் நதி என்றால் ஆபிரிக்க மொழியில் கறுப்பு நதி (BLACK RIVER) என்று அர்த்தம்.



படிப்பகம்

www.padippakam.com

குருமூர்த்தி, இன்ஸ்பெக்டர் பலராமனைப் பயப்பார்வையோடு ஏறிட்டபடியே கேட்டார்:

"பூவிழியைப் பத்தி என்ன என்கொய்ரி?"

"உங்களுக்கு இன்னும் விஷயம் தெரியாதா? இல்லை விஷயம் தெரியாதது மாதிரி நடிக்கிறீங்களா?"

"இன்ஸ்பெக்டர்! உங்க கேள்விகளே சரியில்லை. எதையுமே வெளிப்படையாப் பேசுங்க. ஏதோ கொலைக்குற்றவாளியை விசாரிக்கிற மாதிரி விசாரணை பண்ணிட்டிருக்கீங்க..."

"நடந்திருக்கிறது கொலையாச்சே! பின்னே எப்படி விசாரணை பண்ணணும்னு நினைக்கிறீங்க?"

"என்னது.. கொலையா..?"

"எஸ்... உங்க கம்பெனியின்

### இதுவரை

பாக்கியத்தின் மகள் வர்ஷாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனை காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. இதேவேளை, சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலையாகிறாள். பொலிஸ் விசாரிக்கிறது. இனி...






கம்ப்யூட்டர் பிரிவில் வேலை பார்க்கிற பூவிழி, இந்த நிமிஷம் ஜெனரல் ஹொஸ்பிடல் மார்ச்சுவரியில் போஸ்ட் மார்ட்டத்துக்காகக் காத்துக்கிட்டிருக்கா..."

"இன்ஸ்பெக்டர்! வாட்... டூ.. யூ... ஸே? பூவிழி கொலை செய்யப்பட்டாளா..? எப்படி....? அவளைக் கொலை செய்தது யாரு...?"

"நீங்க கேட்ட கேள்விக்கெல்லாம் விடை கண்டு பிடிக்க இப்பத்தான் எல்.கே.ஜி.லெவல்ல இறங்கியிருக்கேன். முதல் விசாரணை இங்கேயிருந்துதான் ஆரம்பம். நீங்க தர்ர தகவல்களை வெச்சுக்கிட்டுத்தான் இருட்டாயிருக்கிற இந்தக் கேஸை வெளிச்சத்துக்குக் கொண்டுட்டு வர முடியும்... அப்படி உட்கார்ந்து பேசுவோமா...?"

"வாங்க...." குருமூர்த்தி வியர்த்து வழியும் முகத்தைத் துடைக்கக் கூடத் தோன்றாமல் தன்னுடைய கேபினுக்கு உள்ளே கூட்டிக்கொண்டுபோய் நாற்காலியைக் காட்டி விட்டுத் தானும் உட்கார்ந்தார். அருந்ததி தயக்கமாய் அவருக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள்.

பலராமன் முதல் கேள்வியைக் கேட்டார்:

"பூவிழி இன்னிக்கு ஆபீசுக்கு வந்தாளா?"

"வரலை..."

"நிச்சயமா உங்களுக்குத் தெரியுமா..?"

"நான் இந்தக் கம்பெனிக்கு ஏ.ஓ.கம்பெனிக்கு இன்னிக்கு யார் யார் வந்திருக்காங்க... யார் யார் வரலைன்னு எனக்குத் தெரியாதா என்ன..?"

"உங்க கம்பெனி டெலிஃபோன் ஆபரேட்டர் பேர் என்ன..?"

"பாலச்சந்திரன்...."

"அவருக்கு கம்பெனியில் யார் யார் வந்திருக்காங்கன்னு நல்லா தெரிஞ்சிருக்கும் இல்லையா...?"

"கண்டிப்பா..."

பலராமன் புன்னகைத்தார். "தேங்க் யூ வெரிமச் ஃபார் யுவர் ஸ்டேட்மெண்ட். இப்ப விஷயத்துக்கு வர்றேன். பூவிழியோட அப்பா நீலமேகம் இன்னிக்கு நாலு மணி சுமாருக்கு உங்க கம்பெனிக்கு ஃபோன் பண்ணி பூவிழியைப் பத்திக் கேட்டதுக்கு பூவிழி ஸ்டாஃப் மீட்டிங் டிஷ்கஷனில் இருக்கிறதாகவும், கொஞ்ச நேரம் கழிச்சு ஃபோன் பண்ணும்படியாகவும் சொல்லியிருக்கார். அவர் சொன்ன மாதிரியே கொஞ்ச நேரம் வெயிட் பண்ணிப் பார்த்துட்டு, நீலமேகம் மறுபடியும் ஃபோன் பண்ணியிருக்கார். இந்தத் தடவை ஃபோன் பண்ணும்போது கம்பெனியில வேறு யாரோ ஃபோனை அட்டெண்ட் பண்ணியிருக்காங்க. பூவிழி இன்னைக்கு ஆபீஸுக்கே வரலைன்னு சொல்லியிருக்காங்க."

"அப்படிச் சொன்னது யாரு...?"

"அது யாருன்னு தெரியலை. இப்ப நான் உங்க கிட்ட கேக்கிறதெல்லாம் டெலிஃபோன் ஆபரேட்டர் சொன்னது உண்மையா... பொய்யா...?"

"டெலிஃபோன் ஆபரேட்டர் பூவிழி ஆபீசுக்கு வந்திருக்கிறதா தப்பா நினைச்சிருக்கலாம். பட் அவள் ஆபீசுக்கு வரலை... அயாம் ஷ்யூர் அபௌட் இட்...."

"உங்க டெலிஃபோன் ஆபரேட்டர் அடிக்கடி இது மாதிரியான தப்பைப் பண்ணக் கூடியவரா...?"

"இல்லை... இன்னிக்கு மட்டும் இந்தத் தப்பைப் பண்ணியிருக்கலாம். இந்தக் கம்பெனியின் பல்வேறு பிரிவுகளில் தொண்ணூத்தி ஆறுபேர் வேலை செய்யறாங்க... டெலிஃபோன் ஆபரேட்டருக்கு என்னிக்காவது 'ஸ்லிப்'பாவது தவிர்க்க முடியாத ஒண்ணு."

அது வரைக்கும் ஒண்ணும் பேசாமல் இருந்த அந்த அருந்ததி இப்போது வாயைத் திறந்தாள்.

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

"ஸார்..., எனக்கு நிச்சயமாத் தெரியும். பூவிழி இன்னிக்கு ஆபீசுக்கு வரலை... ஏன்னா லஞ்ச் அவர்ல எப்பவுமே நானும் அவளும் ஒண்ணா உட்கார்ந்து சாப்பிடுவோம். லஞ்ச் அவர்ல அவ செக்ஷனுக்குப் போய்ப் பார்த்தேன். அவ அங்கே இல்லை... மத்தியானம் மூணரை மணிக்கு டீ குடிக்கக் கீழே இருக்கிற காண்டீனுக்குப் போவோம். அப்பவும் அவ செக்ஷன்ல இல்லை."

பலராமன் அவள் சொல்வதை உன்னிப்பாய்க் கேட்டுக் கொண்டு குருமூர்த்தியிடம் திரும்பினார்.

"டெலிஃபோன் ஆபரேட்டர் பாலச்சந்திரனுக்கு வீடு எங்கே...?"

"நுங்கம் பாக்கம் ஹைரோட்ல, மல்லிகை அபார்ட்மெண்ட்ஸ்..."

"அவருக்கு ஃபோன் இருக்கா?"

"இருக்கு."

"நெம்பர் தர முடியுமா...?"

குருமூர்த்தி அருந்ததியைப் பார்க்க- அவள் அறைக்கு வெளியே போய் இரண்டு நிமிஷ அவகாசத்தில் ஒரு ஃபைலோடு திரும்பி வந்தாள்.

"நெம்பர் நோட் பண்ணிக்கிறீங்களா ஸார்?"

"ம்..."

அவள் நெம்பரைச் சொல்ல, பலராமன் அந்த நெம்பரைக் காகிதத்தில் குறித்துக் கொண்டு குருமூர்த்தியை ஏறிட்டார்.

"இங்கேயிருந்து ஒரு ஃபோன் பண்ணிக்கலாமா?"

"ப்ளீஸ்..."

பலராமன் டெலிஃபோனை நகர்த்தி வைத்துக்கொண்டு பாலச்சந்திரன் வீட்டுக்கு டயல் செய்தார்.

மறுமுனையில் ரிங்போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது.

ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

"ஹலோ..."

"அங்கே பலச்சந்திரன் இருக்காரா?"

"இல்லையே..."

"எங்கே போயிருக்கார்...?"

"அவர் இன்னும் ஆபீஸிலிருந்தே வீடு திரும்பலை... ஆமா நீங்க யாரு...?"

"அவரோட ஃப்ரெண்ட். எம்பேர் பாலாஜி. காலேஜ் மேட். நேட்டிவ் கோயமுத்தூர். மெட்ராஸுக்கு வரும்போது ஃபோன் பண்ணச் சொல்லியிருந்தார்."

"அவர் வழக்கமா ஆபீஸ் முடிஞ்சதும் ஆறு மணிக்கெல்லாம் வந்துடுவார். இப்ப மணி எட்டாகப் போகுது. இன்னும் வரலை."

"ஆபீஸுக்கு ஃபோன் பண்ணிப் பார்த்தீங்களா?"

"பார்த்தேன். ரிங் போயிட்டேயிருந்தது. யாரும் எடுக்கலை..."

"சரி... ஒரு அரைமணி நேரம் கழிச்சு மறுபடியும் நான் ஃபோன் பண்றேன்." இன்பெக்டர் பலராமன் ரிஸீவரை வைத்து விட்டுக் குழப்பத்தோடு நெற்றியைப் பிடித்துக் கொண்டார்.

***

டாக்டர் ரத்னவேலின் வெடர்னரி க்ளினிக். காலை ஒன்பது மணி. ரத்னவேல் தன் நண்பரும், சக டாக்டருமான ஈஸ்வரிடம் ஆச்சர்யம் கலந்த குரலில் பேசிக் கொண்டிருந்தார்.

"ஈஸ்வர்...! டிஸ்டெம்பர் நோய் வந்து எந்த நாயும் உயிர் பிழைச்சதா சரித்திரமே கிடையாது. உலகத்துல எந்த நாட்டிலும் இந்த அதிசயம் நிகழ்ந்தது கிடையாது. ரியலி திஸ் ஈஸ்... கிரேட்..."

அந்த ஈஸ்வர் புன்னகைத்தார்.

"ரத்னவேல் நாயை நல்லா டெஸ்ட் பண்ணீங்களா...?"

"பண்ணினேன்..."

"அந்த நாய்க்கு வந்திருந்தது டிஸ்டெம்பர்தான்னு உறுதிப்படுத்திவிட்டீங்களா...?"

"ஒரு பர்செண்ட்கூட சந்தேகம் கிடையாது. சரி... நீங்க சொன்ன மாதிரி நான் சரியாக் கவனிக்காமே விட்டிருக்கலாம். வேப்பேரி வெடர்னரி ஹொஸ்பிடல்ல அந்நேரத்துக்கு இருந்த டாக்டர்ஸும் நாயைப் பார்த்துட்டு இது டிஸ்டெம்பர் நோய். நாய் பிழைக்காதுன்னு சொல்லியிருக்காங்களே!"

"சரி அந்த நாய் உயிர் பிழைச்ச பின்னாடி அதை டெஸ்ட் பண்ணிப் பார்த்தீங்களா...?"

"வீட்டுக்கே போய்ப் பார்த்தேன். நாய் ஹெல்த்தியா துள்ளி விளையாடிகிட்டு இருந்தது. என்னால நம்பவே முடியலை. அந்த நாயின் உடம்புக்குள்ளே புதுசா ஒரு உயிர் புகுந்துட்ட மாதிரி எனக்கு ஒரு ஃபீலிங்... அந்தப் பொண்ணு வர்ணா இன்னும் கொஞ்ச நேரத்துல நாயோடு இங்கே வருவா. மொதல்ல ஒரு பிளட் டெஸ்ட் பண்ணிப் பார்த்துடலாம். அதுக்கப்புறமா அதனோட ப்ரெய்னை ஸ்கேன் பண்ணிப் பார்க்கணும். நீங்களும் இருந்து அந்த நாயைப் பார்க்கணும் ஈஸ்வர். அதுக்காகத்தான் உங்களையும் ஃபோன் பண்ணி வரவழைச்சேன்."

"மெடிக்கலி ஒரு நாய்க்கு டிஸ்டெம்பர் நோய் வந்தா அதைக் குணமாக்கவே முடியாது. இருந்தும் நாய் உயர் பிழைச்சிருக்கன்னா கடவுள் அந்த நாய்க்கு அதிகப்படியான ஆயுளைக் கொடுத்திருக்காருன்னுதான் அர்த்தம்."

"ஈஸ்வர்...! நான் இப்போ ஒரு சந்தேகம் கேட்கப் போறேன். நீங்க சிரிக்கக்கூடாது..." கேட்ட ரத்னவேலை ஈஸ்வர் வியப்பாய்ப் பார்த்தார்.

"என்ன கேட்கப் போறீங்க...?"

சில விநாடிகள் தயங்கி விட்டு ரத்னவேல் கேட்டார்: "இந்தக் கூடு விட்டு கூடு பாயறதெல்லாம் உண்மைதானா?"

ஈஸ்வர் சிரித்தார்.

"சுத்த ஹம்பக். அம்புலி மாமா கதை..."

"இல்லை.... ஈஸ்வர்.... அதெல்லாம் உண்மைன்னு என் மனசுக்குப் படுது..."

(தொடர்ந்து வரும்)

## நடிகை ஸ்ரீவித்யா தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்




இஷ்டம்போல் அரட்டை அடிக்கலாம்.

இந்தச் சூழலில் தான் ஒரு நாள் மெதுவாக தன் காதலை என்னிடம் தெரிவித்தார். "உன்னை மாதிரி ஒரு பெண்ணைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப்படறேன்," என்றார். "நீங்கள் ஏற்கெனவே காதலித்த அந்தப் பெண் என்ன ஆனாள்?" என்று கேட்டேன்.

"இல்லை, எங்களுக்குள் ஒத்துவரவில்லை. நான் இல்லாத நேரத்தில் இங்கு வந்து ஏராளமாக ஃபோன் பண்ணிவிட்டு, பில் வந்தபோது பொய் சொல்றா. அந்த மாதிரி மலிவான பெண்ணெல்லாம் எனக்கு ஒத்துவராது," என்றார்.

தங்கள் காதல் முறிந்துவிட்டதாகத் தெரிவித்தார். நானும் அதை நம்பினேன். அவர் திட்டமிட்டுதான் இப்படிச் செய்திருக்கிறார் என்பதை அப்போது நான் உணரவில்லை; அந்த மன நிலையிலும் நான் இல்லை. உண்மையில் அவர்கள் ஏன் பிரிந்தார்கள் என்பது இன்றுவரை எனக்குத் தெரியாது.

என்னைப் போலவே அவரும் காதலில் தோல்வியுற்று வேதனையிலிருக்கிறார் என்று எனக்கு அவர் மீது ஒரு பரிதாபம்தான் பிறந்தது. எனக்கு அவர் மீது இருந்த இரக்கத்தை அவர் புரிந்து கொண்டார். மீண்டும் ஒரு நாள் சொன்னார். "உன்னை மாதிரி ஒரு பெண் கிடைச்சா கல்யாணம் பண்ணிக்கிட்டு செட்டில் ஆயிடுவேன்" என்றார்.

நானும் உடன்பட்டேன். என் பெற்றோர்களிடம் வந்து விஷயத்தைச் சொன்னேன். வேறு ஒரு மதத்தைச் சேர்ந்த ஒருவரை நான் திருமணம் செய்து கொள்வதில் அவர்களுக்கு உடன் பாடில்லை. முதலில் பலத்த எதிர்ப்புதான் இருந்தது. இந்த நேரத்தில் என்னுடைய குடும்பப் பின்னணியை நான் சொல்லியாக வேண்டும்.

### அன்புக்காக

சின்ன வயதிலிருந்தே பெற்றோர்களின் அன்புக்காக ஏங்கிய குழந்தைகள் நாங்கள். தாயின் அரவணைப்புக்காக ஏங்கிய நாட்கள் பல உண்டு. அம்மாவிற்கும் அப்பாவிற்கும் ஏதோ ஒரு கருத்து வேறுபாடு இருந்து கொண்டே இருந்தது. அப்பா அறைக்குள் போகவே எங்களுக்கு அனுமதி கிடையாது. அப்பா அறைக்குள் போனாலே தாத்தா அடிப்பார்.

அந்தக் குழந்தைகளுக்கு உயிர் கொடுத்த தகப்பனாயிற்றே என்கிற எண்ணமெல்லாம் தாத்தாவிற்கு இருந்ததில்லை. 'வீட்டு மாப்பிள்ளை' என்கிற அலட்சியம் அவருக்கு. தாத்தாவிற்கும் அப்பாவிற்கும் இருந்த மோதலில் அம்மா, தன் அப்பா பக்கம் சாய்ந்தார். அதுதான் அவர் எடுத்த மோசமான முடிவு.



அப்பாவும் அம்மாவின் விருப்பத்திற்கு மாறாகத்தான் எதையுமே செய்வார். 'இவள் என்ன சொல்வது, நான் என்ன கேட்பது' என்று நினைத்தார்.

மனம் விட்டுப் பேசிக் கொள்கிற சூழ்நிலை வீட்டில் இருந்ததில்லை. ஒவ்வொருவரும் ஒருசில

**ஸ்ரீவித்யா**

என்றுகூடச் சொல்லலாம். இந்தச் சூழ்நிலையில்தான் நான் என் திருமணத்தைப் பற்றி பேசி, வீட்டாரின் சம்மதத்தை வாங்க வேண்டும். யாரிடம் பேசுவது? யார் என் உதவிக்கு வருவார்கள்?

அந்த நேரத்தில் சட்டென்று என் நினைவிற்கு வந்தது என் அண்ணன்தான். எனக்கும், அவனுக்கும் அதிக நெருக்கம் கிடையாது. அண்ணன், தங்கை சண்டை எங்களுக்குள் நிறைய நடக்கும். தாத்தா காலத்தோடு எங்களுக்குள் இருந்த நெருக்கம் குறைந்து போயிற்று. நான் சினிமாவிற்கும், அவன் காலேஜுக்கும் போக ஆரம்பித்தோம். எங்களுக்குள் இருந்த இடைவெளி அதிகமாயிற்று. என்னைவிட ஒண்ணரை வயதுதான் மூத்தவன். ஆனாலும் பெரியவர்களிடம் மனம் விட்டுப் பேச முடியாததை அவனிடம் பேசலாம் என்கிற நம்பிக்கை மட்டும் இருந்தது.

என் காதல் விஷயத்தில் பெற்றோர்களிடம் பேச அவனை தூதுவனாக்க முடிவு செய்தேன். என்னுடைய வேண்டுகோளைக்கூட அவனிடம் நேரடியாகக் கேட்க எனக்கு தைரியமில்லை. ஒரு சீட்டில் எழுதி அவன் அறைக்குள் தள்ளிவிட்டு வந்தேன். அவனும் அதைப் படித்துவிட்டு என்னிடம் பேசவில்லை. நேராக அம்மாவிடம்தான் பேசினான்.

பிறகு எல்லாருமாகப் பேசினார்கள். அம்மா சொன்னார்: "இதோ பாரு, அந்தக் கல்யாணம் நடக்கலைங்கிறதுக்காக அவசரப்பட்டு ஒரு முடிவு எடுக்காதே. இரண்டு, மூணு வருஷம் போகட்டும்!" என்றார். அப்போதுகூட 'என் நல்லதுக்காகத்தான் அம்மா சொல்கிறார்' என்று என்னால் எடுத்துக் கொள்ள முடியவில்லை. 'நான் சினிமாவில் நடித்து இவர்கள் கடனை அடைப்பதற்குத்தான் திட்டம்போடுகிறார்கள். நமக்கு திருமணம் செய்து வைக்கிற எண்ணமெல்லாம் இவர்களுக்கு இல்லை,' என்றுதான் நினைத்தேன்.

என் திருமண விஷயமாக நான் என் அப்பாவிடம் போய் பேசியபோது எனக்கு 23 வயது. காரணம், எதுவேண்டுமானாலும் அம்மாவிடமே கிடைத்துவிடும். அதனால் அவரிடம் பேசுகிற வாய்ப்பு எங்களுக்கு மிகக் குறைவு. கணவனை விட்டுக் கொடுத்து அம்மா தன் அப்பா பக்கம் சாய்ந்ததை இன்று வரையில் நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

அப்பாவிடம் திடீரென்று எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது என்று எனக்குப் புரியவில்லை. பெற்றோர்களுக்குள் இருக்கும் போட்டியில் நான் பாதிக்கப் படக் கூடாது என்று பயந்தேன். எப்படியோ அவரிடம் விஷயத்தை விளக்கினேன். ஆனாலும் யாருக்கும் இந்தத் திருமணத்தில் உடன்பாடில்லை.

இதற்குள் நானும், அம்மாவும் சேர்ந்து அமெரிக்காவில் நிகழ்ச்சிகள் நடத்த ஒப்புக்கொண்டிருந்தோம். இரண்டு மாத நிகழ்ச்சி. அம்மா கச்சேரி செய்யும்போது நான் அவருடன் பாடுவேன். பிறகு என்னுடைய நாட்டிய நிகழ்ச்சி நடக்கும். அதற்கு அம்மா பாடுவார்.

### அம்மா ஆறுதல்

வெளிநாடு செல்லத் தயாராகிக் கொண்டிருந்தோம். இரண்டு மாதம் திருமணப் பேச்சு இருக்காது என்பதில் அம்மாவிற்கு லேசான ஆறுதல். அங்கே போய் என் மனதை மாற்றலாம் என்கிற எண்ணம் அம்மா விற்கு இருந்திருக்க வேண்டும்.

இந்த இடைப்பட்ட காலத்தில் ஜார்ஜிடமும் ஒரு மனமாற்றம் ஏற்படலாம் என்கிற எதிர்பார்ப்பும் அம்மாவிற்கு இருந்தது. ஆனால் அம்மா எதிர்பார்த்தது நடக்கவில்லை. நாங்கள் இரண்டு மாத நிகழ்ச்சி முடிந்து பம்பாய் வந்து இறங்கினோம். இப்போது இருக்கிற அளவு டெலிஃபோன் வசதி அப்போது இல்லாததால் நாங்கள் வருவதை யாருக்கும் சொல்ல வில்லை. ஆனால் விமான நிலையத்தில் எங்களை வரவேற்க ஜார்ஜ் வந்திருந்தார். எங்களுக்குப் பெரும் வியப்பு.

### அதிர்ச்சி

அப்போது இந்தியாவில் 'எமர்ஜென்சி' அமுலாகியிருந்த நேரம். கஸ்டம்ஸ் கெடுபிடிகள் அதிகம். நாங்கள் அமெரிக்காவிலிருந்து எதையும் கொண்டு வரவில்லை. எங்களை அழைத்துச் செல்ல 'டாஃபே' மகாதேவன் வந்திருந்தார். அவர் எங்களின் நெடு நாளைய குடும்ப நண்பர். ஏர்ஃபோர்ட்டில் ஜார்ஜை பார்த்ததும் அம்மா படு அப்ஸெட்.

மகாதேவனுக்கும் அதிர்ச்சி- அவரும், அம்மாவும் பேசிக்கொண்டிருப்பது மட்டும் லேசாக என் காதில் விழுந்தது. "என்னம்மா, இந்தப் பையன் வந்து இப்படி நிக்கிறானே? இதெல்லாம் ஒத்து வராதும்மா" என்கிறார்.

"'இவனைத்தான் கல்யாணம் பண்ணிப்பேன்'னு ஒத்தக்கால்ல நிக்கறா. எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலே" என்கிறார் அம்மா.

சென்னை செல்லும் விமானத்துக்கு மாறுகிற இடைப்பட்ட நேரம். தங்குவதற்காக அங்கே 'சென்ட்டார்' ஓட்டலில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

(தொடர்ந்து வரும்)


படிப்பகம்

www.padippakam.com

**தமிழ் நாட்டின் முற்போக்கு எழுத்தாளர் ஜெயகாந்தன். அவரது எழுத்துக்கள் உலகப் பிரசித்தமானவை. பலகோடி வாசக நெஞ்சங்களை வசீகரம் செய்தவை.**

**மு.க.சுருக்கம்**

அனந்தராமன் ஒரு பத்திரிகையாளன். அவனது மனைவி கோகிலா. இருவருக்கும் இடையே மன ஒற்றுமை நிலவவில்லை. இருவருக்கு இடையேயும் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. இனி....

**06**

# கோகிலா என்ன செய்து விட்டாள்?

## ஜெயகாந்தன்

"கல்யாணம், ரிஜிஸ்ட்ரேஷன் என்ற சடங்குகளெல்லாம்-அவை, எவ்வளவு பழமையாக இருந்தாலும் அல்லது நவீனமாக இருந்தாலும்-இரண்டு ஆத்மாக்கள் சங்கமிக்கவில்லையெனில் இரண்டு உடல்களை மட்டும் இறுகக் கட்டி நெருக்கும் விலங்காகப் போய்விடுகிறது, பார்த்தாயா?" என்று கேட்டுவிட்டு அதைத் தொடர்ந்து இயல்பாக வரவிருக்கும் அடுத்த யோசனை இருவர் மனத்திலும் ஒரே சமயத்தில் தோன்றியதெனினும் அவர்கள் இருவருமே அதை மௌனமாகப் பரிவர்த்தனை செய்து கொள்வதுபோல் எதற்கோ அஞ்சி ஒருவரை ஒருவர் சற்று நேரம் பாசமோ, பகைமையோ இல்லாமல் வெறித்துப் பார்த்துக் கொண்டனர்.

அவன் ஒரு பெருமூச்சுடன் சொன்னான்:

"சரி இதற்கு நாம் என்ன செய்யலாம்? இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று அவன் கேட்டபோது கோகிலா இதுபற்றி என்ன செய்வதென்று தீர்மானம் செய்துவிட்டதை நெஞ்சிலே வைரம் பாய்ந்த விரக்தியோடு கூறினாள்:

"என்னைப் பொறுத்தவரை வாழ்ந்து தீர்ப்பது என்று முடிவு செஞ்சுட்டேன். நான் ஏமாந்து போனதை லோகத்தின் முன்னே பகிரங்கமா ஒத்துக்க எனக்கு அவமானமா இருக்கு. என்னதான் அவா என்னை வெறுத்து ஒதுக்கியே வெச்சிருந்தாலும் நான் என்னவோ என் வரைக்கும் ரொம்ப சுயநலத்தோட சந்தோஷமா இருக்கிறதா நினைச்சுண்டு இரகசியமாகத் திருப்திப்பட்டுண்டிருக்கற எங்க அப்பா, அம்மாவுக்கு அந்தச் சமாதானமாவது இருக்கட்டும். எதுவுமில்லாம இந்த என் உடம்பை நாலு எடங்களுக்கு வீசி எறியறதன் மூலம் என் மனசு சுகம் கண்டுடாதுங்கறதையும் நான் புரிஞ்சிண்டிருக்கேன். இப்படி நான் சொல்றப்போ தயவு செஞ்சு உங்களுக்காக நான் ஏதோ தியாகம் செஞ்சுட்டதா நினைச்சு உருகிடாதேங்கோ... இது என் விதி. இது எனக்கு நானே குடுத்துக்கற கௌரவம். இதிலே மத்தவங்களுக்குப் பங்கில்லை..."

ஒரு பெண்மையின் சுடர்போல, அவள் உடம்பே பிரகாசித்துக் கொண்டிருப்பது போல் அவனுக்குத் தோன்றுகையில் அவள் நிழலிலே சரணாகதி அடைவதுபோல் அவன் அவளிடம் கெஞ்சினான்.

"ஓ! கோகிலா... எனக்கு நீ வேண்டும்...." என்று அவன் தன்னை மறந்து பிதற்றுகையில் அவள் தன்னை மறக்க முடியாமல் பதில் சொன்னாள்.

"அதான் இருக்கேனே."

"நீ இல்லாமல் நான் இருக்க முடியாது."

"அதனால்தான் இருக்கேன்."

தான் எவ்வளவு உள்ளுணர்ச்சிகளோடு பேசுகின்ற வார்த்தைகளுக்கு அவள் எவ்வளவு மேலோட்டமாகப் பதில் சொல்கிறாள் என்று எண்ணிப் பார்த்தபோது அவன் மிகவும் சலிப்புற்றான். இறுதியில் அவளைப் போலவே இந்த வாழ்க்கையைத் தானும் வாழ்ந்து தீர்ப்பது என்று அவனும் வைராக்கியம் கொண்டான்.

இவ்விதம் மனம் ஒட்டாமல் ஒரு மரத்துப் போன தனது வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கும் அவளுக்குத் திடீரென ஒரு நாள் அவளது பாலிய கால நண்பன் தன் வாழ்க்கையிலும் அவன் வாழ்க்கையிலும் எவ்வளவோ விரும்பத்தகுந்த- விரும்பத்தகாத மாற்றங்கள் பல நிகழ்ந்த பிறகும் அந்த நட்பை மறக்காமல் தன்னை நினைவில் வைத்துக் கொண்டு பார்க்க வந்ததில் விவரிக்க வொண்ணாத ஆனந்தம் பிறந்தது.

அவன் அவளை விட்டுப் பிரியநேர்ந்த அந்தக் காலத்தில் அவளுக்கு ஒரு கடிதம்கூட எழுதி இருக்கிறான். பின்னர் அதை நினைத்துத் தனது சிறு பிள்ளைத்தனத்துக்காக அவன் பல சமயம் சிரித்துக் கொண்டதாக அவளிடம் இப்போது கூறியதுண்டு.

அதை நினைத்து உள்ளூர அழுது கொண்டிருக்கும் அவள் ஒப்புக்காக வெளியே சிரிக்கிறாள்.

அனந்தராமனைக் கைப்பிடித்த நாள் முதல் போக்குவரத்தற்றிருந்த கோகிலாவின் குடும்பத்தாருக்கும் அவளுக்கும் இடையே அவன் வருகை ஒரு தூதாயிற்று.

ஆறு மாதங்களுக்கு முன்பு-பத்து வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள் அனந்தராமனின் அனுமதியோடு கோகிலா தன் பிறந்த வீட்டுக்குச்சென்றாள். தனியாகச் சென்ற தன்னிடம் தன் கணவனைப் பற்றி ஒப்புக்குக்கூட ஒரு வார்த்தை விசாரிக்காத தன் பெற்றோரின் பிடிவாதத்தால் மனஸ்தாபம் கொண்டு 'இனிமேல் இந்த வீட்டுக்குள் வந்தால் அவருடன்தான் வருவது' என்று தீர்மானத்தில் இந்த ஆறு மாத காலமாக அவள் தன் பிறந்த வீட்டுப் பக்கம் கூடத் திரும்பாமலே இருந்தாள். எனவே சமீப நாட்களாய் 'அவன்' கோகிலாவைப் பார்ப்பதற்கு அடிக்கடி இங்கேயே வரவேண்டியிருந்தது.

கோகிலாவின் கணவன் தன்னோடு அதிகம் பேசாமல் இருப்பது குறித்தோ கோகிலாவும் தானும் சுவாரசியமாகச் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது அதில் கலந்து கொள்ளாமல் இருப்பது குறித்தோ அவன் தவறாக நினைத்துக் கொண்டதில்லை. ஏனெனில் தன் கணவனைப்பற்றி அவன் மனத்தில் ஓர் உயர்ந்த அபிப்பிராயம் உருவாக வேண்டுமென்பதற்காக அவள் அவனிடம் ஒரு சமயம் கூறி இருந்தாள்:

"அவருக்கு எப்போது பார்த்தாலும் யோசனையெல்லாம் பத்திரிகையைப் பத்தியும் எழுத்தைப் பத்தியும்தான். எனக்குக் கூட அதுதான் பயம்...

"எந்தச் சமயத்தில் எதைப்பத்தி அவர் யோசிச்சுண்டிருப்பாரோ? எதையாவது போய்ச் சொல்லிக் கெடுத்துடக்கூடாதோல்லியோ? சமயத்தில் அவருக்குச் சாப்பிட்டது மறந்து போயிடும்; எதிரே வருபவங்க கண்ணுக்குத் தெரியமாட்டாங்க... அவரைப் புரிஞ்சுக்காதவா தப்பாத்தான் நினைச்சுக்குவா..."



ஆரம்ப காலத்தில் அவர்கள் வீட்டிற்கு 'அவன்' விஜயம் செய்தபோதெல்லாம் அனந்தராமனின் அசட்டை குறித்து அவன் சிறிதே துணுக்குற்றது உண்டு. இப்போதெல்லாம் அது அவனுக்குப் பழக்கமாகி விட்டதாலும் தனது நட்புக்கு உரியவள் கோகிலா மட்டுமே என்பதாலும் அவளைத் தேடியே அவன் அங்கு அதிகம் வந்து கொண்டிருந்தான். அவன் ஒரு மாதத்தின் பல நாட்களை வெளியூர்களிலும் சில சமயங்களில் வெளிநாடுகளிலும் கழிப்பவன். எனவே அவனது பேச்சிலும் அவனது அனுபவங்களிலும் அவளுக்கு அலாதியான தொரு சுவை இருந்தது. அவனிடமும் பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருந்தன. அவனோடு பேசுகின்றபோதெல்லாம் அவள் மறக்காமல் அவன் விரைவில் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற விஷயத்தை அடிக்கடி குறிப்பிடுவாள். அவன் அதற்கு ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு விதமாய் மனம் போன போக்கில் பதில் சொல்லுவான். ஆனால் அவை ஒவ்வொன்றிலும் ஓர் ஆழ்ந்த அர்த்தம் இருக்கும்.

சில சமயம் அவன் காரில் வருவான். சில சமயம் ஸ்கூட்டரில் வருவான். ஆனால் எப்போதுமே அவன் வெறுங்கையுடன்தான் வருவான், அவளுக்கு மனத்துள் ஓர் ஆசை: 'அவன் ஏதேதோ தேசங்களுக்கெல்லாம் போகிறானே, அங்கே இருந்து தனக்காக ஏதாவது வாங்கி வரமாட்டானா-உலகத்தில் எதுவும் இவனுக்கு விநோதமாகப் படுவதில்லையா?' என்றெல்லாம் தோன்றினாலும் அவனிடம் அப்படிக்கேட்கத் தனக்கு உரிமை இல்லை என்ற காரணத்தால் தன்னோடு பேசிக் கொண்டிருப்பதற்காகவேனும் அவன் வருகிறானே என்பதில் அவள் பரமதிருப்தி கொண்டு விட்டாள்.

அவளது இருண்ட வாழ்க்கையில் அவனது வருகை நிகழும்போதெல்லாம் ஒரு சிறு விளக்கின் ஒளியேற்று அவள் முகத்தில் ஒரு மங்கலான பிரபை தவழும். அவன் வராத நாட்களில் அந்தப் பிரபை கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்து அவள் முகத்தில் அந்தப் பழைய இருள் வந்து மீண்டும் கவிந்து கொள்ளும். அவளுக்கே தெரியாமல் அவளில் நிகழும் இந்த மாற்றத்தை அனந்தராமன் மட்டும் தான்-சந்தேகத்திற்கிடமில்லாமல் தனது ஐயத்தைத் தானே சோதித்துப் பார்த்து, அப்படித்தான் என்று தெரிந்து வைத்திருந்தான்.

அவனது வருகையைத் தன் கணவன் விரும்பவில்லை என்பதை அவள் அறிந்து வைத்திருந்தும் அதை அறிந்து கொள்ளாதவள்போல் அவள் நடித்துக் கொண்டிருந்தாள். என்றாவது ஒரு நாள் இது ஒரு பிரச்சனையாகுமென்று அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் எது குறித்தும் அவள் அஞ்சிக் கொண்டிருக்கவில்லை.

அனந்தராமனுக்கும் கோகிலாவின் மீது கேவலமான சந்தேகங்களோ, அவள் தனக்குத் துரோகமிழைத்து விடுவாள் என்ற பயமோ நிச்சயமாக இல்லை; அவ்விதம் ஏதும் நிகழக்கூடுமானால் அதற்காக அவன் வருத்தமும் கொள்ளமாட்டான். உதற முடியாமல் ஒட்டிக் கொண்டிருக்கும் இந்த உறவற்ற உறவைத் தட்டிக் கழிப்பதற்கு அது ஒரு தகுந்த முகாந்திரம் என்பதால் அதற்காக அவன் மகிழ்ச்சியேயுறுவான்.

ஒரு சமயம் அனந்தராமன் கோகிலாவிடம் அவனைப் பற்றி விசாரித்தான்.

(கோகிலா.... தொடரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

**15**

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

~கண்ணதாசன்~

ஓர் ஆடம்பரமான மாளிகை; எங்கு பார்த்தாலும் சலவைக்கல் பதிப்பு; எல்லா அறைகளிலும் குளுகுளு வசதி; ஏராளமான பணிப் பெண்கள்: அறுபதாயிரம் ரூபாய் செலவில் அலங்கரிக்கப்பட்ட ஓர் அறை; அந்த அறையில் பன்னிரண்டாயிரம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட ஒரு மேஜை.

அந்த மேஜையின் மீது நான்கு டெலி:போன்கள்; ஒரு இண்டர் கம்யூனிகேஷன்.

பிளைவுட் அடிக்கப்பட்ட சுவரிலே உலகம் முழுவதையும் காட்டும் பூகோளப் படங்கள்; அந்தப் படங்களிலே விமானம் போகும்பாதையை மட்டும்காட்டும்சிவப்புக் கோடுகள்; புதுவகையான காலண்டர்கள் சில.

ஷார்ட் ஹாண்ட் நோட்டுப் புத்தகமும் கையுமாக எப்போதும் நிற்கும் மூன்று ஸ்டெனோ டைப்பிஸ்ட்டுகள்.

தெருவிலே போகக்கூடியவனுக்குக் கூட கேட்கக்கூடிய சத்தம்- "ஹலோ சிங்கப்பூர்," "ஹலோ லண்டன்," "ஹலோ நியூயார்க்," என்பதாகும்.

காரணம் அவ்வளவு டிரங்கால்கள்.

இவை போதாதா, 'அது ஒரு பெரிய தொழிலதிபரின் அலுவலகம்' என்பதற்கு?

அந்தத் தொழிலதிபர்தான் நாராயணசாமி.

ஏதாவது ஒரு பொருளின் விநியோகம் பற்றிப் பேரம் பேச வரும் யாராவது, "ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்து விடுகிறேன்" என்று சொன்னால், "இது என் டெலி:போன் பில்லுக்கே காணாது" என்பார் நாராயணசாமி.

இலட்சத்துக்குக் கீழே அவர் பேசுவதில்லை.

எப்போதும் அவரது இலட்சிய எல்லைக் கோடு லட்சத்தைத் தாண்டியே நிற்கும்.

பாங்குகள் தேசியமயமாவதற்கு முன்னாலும், ஆன பின்னாலும் ஒவ்வொரு பாங்கிலும் அவருக்கு இருபது லட்சம், இருபத்தைந்து லட்சம் என்று ஓவர் டிராப்ட் உண்டு.

பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கியவனுக்குப் பத்துத் தடவை நோட்டீஸ் கொடுக்கும் தேசிய பாங்க் நிர்வாகிகள் எவ்வளவு காலம் நாராயணசாமி பணம் கட்டாமல் இருந்தாலும், டெலி:போனில் அவரது சேமலாபத்தை விசாரிப்பார்களே தவிரப், பணத்தைப் பற்றிப் பேச மாட்டார்கள்.

ஐம்பது ரூபாய் கடன் வாங்கி அதற்கு மூர்மார்க்கெட்டில் சாத்துக்குடிப்பழம் வாங்கி, கூடையிலே வைத்துப் பிளாட்பாரத்தில் வைத்து, ஒரு நாளைக்கு ஐந்து ரூபாய் சம்பாதிக்கும் கூடைக்காரியை எட்டி உதைத்துத் தொழிலையே கெடுக்கும் பொலிஸ்காரர்கள், "கறுப்பு வெள்ளை" என்று டெலி:போனிலேயே பேசி வசூலிக்கும் நாராயணசாமியின் முன்னால் கைகட்டி நிற்பார்கள். கரணம் அடிப்பார்கள், சலாம் போடுவார்கள்.

அரசியல் மேடைகளில் நீதியைப் பற்றியும் நேர்மையைப் பற்றியும், தியாகத்தைப் பற்றியும் சுலோகம் பாடி பாஷ்யம் எழுதும் அரசியல்வாதிகள், நாராயணசாமிக்காக 'எந்த வேலையையும்' செய்யத் தயாராக இருப்பார்கள்.

தலைவர் தங்கசாமி அவருக்குப் பல லைசென்சுகள் வாங்கிக் கொடுத்துப் பல லட்சம் பெற்றுக் கொண்டிருக்கிறார்.

சமூக சேவகி விஜயா வேதாசலம் டில்லி, பம்பாய், கல்கத்தா என்று பறப்பதே- அவர் வாங்கிக் கொடுக்கும் டிக்கெட்டிலேதான்.

அதற்கு விஜயாவின் கைமாறு- சிக்கலான நேரங்களில், தன் உடம்பைக் காட்டி அதிகாரிகளைப் பிடித்து அந்தச் சிக்கலைத் தீர்த்து வைப்பதுதான்.

நடிகர் சந்திரசூரியனுக்குத் தேவைப்படும் போதெல்லாம் பத்து இலட்சம் இருபது இலட்சம் என்று கறுப்புப் பணம் நாராயணசாமியின் வீட்டிலிருந்து போகும்.

டில்லியிலிருந்து ஓர் அதிகாரி சென்னை வருகிறார் என்றால், அவர் வருகை, அவர் பதவி வகிக்கும் இலாகாவின் தமிழ்நாட்டுக் கிளைக்குத்தான் முதலில் தெரிவிக்கப்பட வேண்டும்.



ஆனால் அந்தச் செய்தி, இலாகாவுக்கு வருவதற்கு முன்னாலேயே நாராயணசாமிக்கு வந்துவிடும்.

கப்பல் போன்ற காரும், கன்னிமாரா ஒட்டல் ரூமும், 'சிவாஸ் ரீகல்' விஸ்கியும், சின்னஞ்சிறிய கன்னங்கனிந்த, வண்ணம் மிகுந்த அன்னங்கள் போன்ற 'சிட்டுக்கள்' சிலவும் தயாராக இருக்கும்.

மேல்நாட்டு மது வகைகள் விதவிதமாக வாங்குவதற்கும், பேரழகான பெண்களைப் பிடித்து வைப்பதற்கும், அவர் ஒரு தனி இலாகாவையே நடத்திக் கொண்டிருந்தார்.

இரவு நேரத்தை இன்பமயமாக அனுபவிக்க வேண்டுமென்றால், நாராயணசாமியைத்தான் பெரிய அதிகாரிகள் தேடுவார்கள்.

டில்லி, பம்பாய், கல்கத்தா செகரெட்டேரியட்டுகளில் அடிக்கடி நாராயணசாமியைப் பற்றிய பேச்சுக்கள் வரும்.

ஸ்விற்ஸர்லாந்து பாங்கில் பெயரில்லாமல், நம்பர் போட்ட கணக்கு ஒன்று அவருக்குண்டு.

தமிழ்நாட்டில் தேர்தல் நடக்கிறது என்றால், ஐந்து பாராளுமன்ற வேட்பாளர்களுக்காவது அவர் பணம் செலவழிப்பார். கல்கத்தாவில் ஐந்து பேருக்கு, பம்பாயில் ஐந்து பேருக்குச் செலவழிப்பார். 'அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்' என்று பார்க்கமாட்டார். ஜெயிக்கக் கூடியவர்களாகப் பார்த்து சிநேகம் பிடித்துப் பணம் கொடுப்பார்.

எப்பொழுதும் பதினைந்து பார்லிமெண்ட் உறுப்பினர்களாவது அவர் கையில் இருப்பார்கள்.

வரி கட்டாமல், தான் கட்டாமல் இருப்பதும் தெரியாமல், மேலும் மேலும் லைசென்ஸ் வாங்கி, தன்னைப் பற்றி யாரும் பேச முடியாமலேயே பெரும்பொருள் சம்பாதிப்பதற்கு அவர் வைத்திருந்த சங்கிலித் தொடர் இது.

டில்லிக்குப் போனால் அவர் அசோகா ஒட்டலில் விருந்து கொடுப்பது பத்திரிகையாளர்களுக்கு. பம்பாய்க்குப் போனாலும், கல்கத்தாவுக்குப் போனாலும் அப்படியே.

ஆகவே அவர் அடிக்கடி வெளியிடும் பொருளாதார யோசனைகளை அந்தப் பத்திரிகைகள் 'பெட்டி' கட்டி வெளியிடுவது வழக்கம்.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# காதல் மன்னன்

அந்தக் கல்லூரியின் நுழைவாயிலில் ஐம்பதைத் தாண்டி விட்ட ஒரு வாட்ச்மேன், சுருட்டுப் பற்றவைத்து புகைத்துக் கொண்டிருக்க, முற்றத்திலிருந்த மரத்தின் கீழ், மாணவிகளுக்கு மத்தியிலே, அந்த சுவாரசியமான சம்பாஷனை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

"அந்தக் கால சினிமா ஹீரோக்கள்ல 'காதல் மன்னன்' ஜெமினி கணேசன். இந்தக் காலத்து ஹீரோக்கள்ல அந்தப் பட்டம் யாருக்குடி பொருத்தமா இருக்கும்?"

"சந்தேகமென்ன, நம்ம பிரபு தேவாவுக்குத்தான்!"

"சீ. அவன் எதுக்குடி? அவனுக்கு சரியா காதல் பண்ணவே தெரியாது. மச மசப்பா முகத்தில தாடிய வெச்சுக்கிட்டு குரங்கு சேட்டை செய்யத்தான் தெரியும். அதனால, கவர்ச்சியான நடிகர் அப்பாஸ் தான் அதுக்கு கரெக்டான ஆளு!"

"ம்ஹூம். அப்பாஸ் நல்ல அழகான பையன் தான். ஆனா, அவன் கல்யாணம் கட்டிக்கிட்டதால, இதுக்கு அவன் பொருத்தமில்ல. ஸோ, ஹேன்ஸம் நடிகரான பிரசாந்தான் அதுக்கு சரியான ஆசாமி!"

"நோ நோ! பிரசாந்த விடவும், லவ் பண்றதில பெட்டரான ஒரு ஹீரோ இருக்கிறார். அவர்தான் நம்ம எல்லார் மனசிலயும் நிரம்பியிருக்கிற அழகான நடிகர் விஜய். அதனால, விஜய்தான் அது மிக கரெக்டான ஆளு!"

விவாதத்தின் முடிவில் 'காதல் மன்னன்' பட்டம் விஜய்க்குத்தான் என்று ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

"ஏண்டி! சினிமா ஹீரோக்கள்ல ஒருவருக்கு காதல் மன்னன் பட்டம் கொடுத்தாச்சு. நம்ம கல்லூரியில யாருடி அதுக்குத் தேறுவான்?"

"எவனுமே தேறமாட்டாண்டி"



**ஏறாவூர் ஸபீர் ஹாபிஸ்**

"சீ. அப்படிச் சொல்லாதீங்கடி! அழகான, அம்சமான போய்ஸ், நூத்துக்கு ஒண்ணாவது இங்க இருக்கானுகள்."

"சரி. அவங்கள்ல யார, எப்படி தெரிவு செய்யிறது?"

"ஒரு ஐடியா சொல்லட்டுமா?"

"சொல்லுடி!"

"அந்த 'கேட்' அருகே பாருங்க!"

எல்லோரும் பார்த்தார்கள். கல்லூரி நுழைவாயிலுக்கு அருகில் மாணவர்கள் சிலர் நின்று அரட்டையடித்துக் கொண்டிருந்தனர்.

"ஹேன்ஸம் போய்ஸ் எல்லாரும் அங்கதான் நிக்கிறானுக. ஸோ, இது நல்ல தருணம்!"

"என்னடி செய்யணும்கிறே?"

"இதோ என் கையில பந்து இருக்கில்ல! இந்த பந்தை போய்ஸ் நிக்கிற பக்கமா தூக்கி வீசிடுவோம். யாரு இத ஆர்வமா கையில எடுக்கிறானோ அவன்தான் காதல் மன்னன். ஓ.கே.யா?"

மாணவிகள் எல்லோரும் அதை ஏற்றுக் கொள்ள, பந்து தயாரானது. அதை வைத்திருந்தவள், மாணவர்கள் நின்றிருந்த நுழைவாயிலை நோக்கி, இலாவகமாக தூக்கி எறிந்தாள். எல்லோர் கண்களும் பந்திலேயே மொய்த்திருந்தன.

துள்ளித் துள்ளிச் சென்று கொண்டிருந்த அந்த பந்தை யார் எடுக்கப் போகின்றானோ என்று ஒவ்வொருவர் மனங்களும் படபடக்கத் தொடங்கின. 'இவன் எடுத்தால் நன்றாயிருக்குமே' என்று சிலர், தமக்குப் பிடித்தமான இளைஞர்களை வைத்துக் கற்பனையில் இறங்கினர்.

அப்போது, கேட் அருகே போன பந்து, தன் வேகம் குறைந்து ஓரிடத்தில் நின்றபோது, அது எடுக்கப்பட்டது. அதை எடுத்தது வேறு யாருமல்ல. கல்லூரியின் நுழைவாயிலில் அமர்ந்திருந்த அந்த வாட்ச்மேன்!!

# அனுபவம்

"ஐயோ!"

அலறிய வண்ணம் கைகளை உதறிக் கொண்டு ஓடும் பெண்மணியைத் தொடர்ந்து பாய முற்பட்ட தயாளனை இழுத்து நிறுத்தினான் ரமணன்.

வாகனங்களின் இரைச்சல் காதை அடைத்தது. மாலை நேர ஜன நெரிசலில் அந்த மெயின் ரோடு கசங்கிக் கொண்டிருந்தது. நகரத்துக்குப் புதிதான தயாளனுக்கு என்னவோ போலிருந்தது. எவரும் கண்டு கொள்ளாது போகின்ற அந்தப் பெண்ணின் கதறல்!

"ஏண்டா நாமெல்லாம் மனுச ஜாதி தானே? இப்பிடி நட்ட நடு ரோடிலை பெண்ணின் நகையை அறுத்துண்டு ஓடறான். பிடிக்க யாருமே முன்வரலை. என்னாலை



**ஜெ.சூரியன்**

அவள் கதறலை சகிக்க முடியலை. நீ... என்னடான்னா...." சங்கடமாக நெளிந்தவனை கெட்டியாக பிடித்து நிறுத்தினான் ரமணன்.

"இதோ பார் தயாளன். இதெல்லாம் பெரிய வம்பிலை போய் முடியும். வந்தமா வேலையைப் பார்த்தமான்னு போயிடணும். உனக்கு இப்ப புரியாது. நான்கூட ஆரம்பத்திலை இப்படித்தான் உபகாரம் பண்ணப் போய் உபத்திரவத்தை வாங்கிக் கொண்டேன்." என்றான் ரமணன் நண்பனிடம்.

ஆச்சரியமாக பார்த்தான் ரமணனை தயாளன்.

"என்ன பார்க்கிறாய்? இதைவிட அதிகமாக எனக்குள் இருந்தது மற்றவர்கள் துன்பத்தை துடைக்கும் வெறி. அதனால் நற்பலன் இருக்கோ, இல்லையோ, நிச்சயம் கஷ்டம் வந்துசேரும் என்பதை நான் உணர்ந்து கொண்டேன் ஒருநாள்.

அது ஒரு ரெயில் நிலையம். சுமாரான கூட்டம். அன்று ஏதோ காரணமாக, ரயில் அரைமணி நேரம் தாமதம். காத்திருந்த அந்த சமயத்தில் சுமார், முப்பது முப்பத்தைந்து வயதிருக்கும் திடகாத்திரமான மனிதன், முச்சிரைக்க வந்தவன் என் பக்கத்தில் நின்றிருந்த இளைஞனிடம் "தம்பி, இதைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்க, ஒரு நிமிஷத்திலை வந்துடறேன்னு தன் பாக்கை காட்டிவிட்டு அவசரமாக மாறிவிட்டான்.

சற்று இடைவெளியில் வந்து நின்றனர் போலீஸ்காரர் சிலர். அவருக்கும் எதுவும் புரியவில்லை. பையை திறந்து பார்த்தனர். அத்தனையும் தங்கக் கட்டிகள். அவ்வளவு தான். அந்த இளைஞனின் பாடு ரொம்பவும் பாவமாகிப் போய்விட்டது. "ஐயா! என்னது இல்லை. பார்த்துக்கச்சொல்லி அந்தப் பக்கம் போனார். நம்புங்கன்னு கதறினான். அதில் நின்றவர்களுடன் நானும் பேசாமல் நின்றிருந்திருக்கலாம்.

"சே! என்ன மனிதர்கள் இவர்கள். நடந்ததை சொல்லக்கூடவா தைரியம் இல்லாதவர்கள். உதவி செய்ய இவர்களுக்கு மனசே இல்லையா? என எண்ணியவனாக நான் முன்னால் வந்து மூக்கை நுழைத்தேன்!

"ஐயா! இவர் சொல்றது உண்மைதாங்க. நீங்க துரத்துறதாலைதான் அந்த மனிதன் பையை இவர்கிட்ட பார்த்துக்கன்னு சொல்ற மாதிரி வைச்சுட்டுப் போயிட்டான். நான் கவனிச்சேன்" என்றதுதான் தாமதம். "ஓ! பாட்ணராக நடக்கிறதா சங்கதி? நல்ல ஐடியாதான். நடங்க ஸ்டேஷனுக்கு" மேலே எதுவும் பேச இடமளிக்காமல் இழுத்துப்போய் அடைத்துவிட்டார்கள். ஆறுமாசம் ஜெயிலில்.

"அப்படின்னா இந்தப் பெண்ணின் அலறலில்கூட அந்த மாதிரி ஏதாச்சும் இருக்கும் என்கிறியா? பாவம்டா அவள், ஒரு சிலரின் அயோக்கியத்தனங்களால் நிஜமாக பாதிக்கப்படறவர்களுக்கும்கூட உதவ முடியாமல் போய்விடறது" என்றான் தயாளன் கவலையுடன்.

"இதோ பார் எந்தப் புற்றில் எந்தப் பாம்போ! உதவும் இரக்க குணம் இருக்கணும். தானமும், தருமமும் வேணும், இல்லைன்னு சொல்லலை. ஆனா அவைகளாலை இப்போதுள்ள நிலமையில் மாட்டிக் கொண்டு முழிக்க வேண்டியுள்ளது. ம். ஏதோ முடிந்தவரை நல்லதைச் செய்து வாழ்வோம். எவரையும், எதற்காகவும் துன்பப்படுத்தாமல் பார்த்துக் கொண்டால் அதுவே சிறந்த புண்ணியங்களை சேர்க்கும்!" என்றான் அனுபவம் செறிந்த வார்த்தைகளில் ரமணன்.

'ஓ! நகரத்து வாழ்க்கைதான் என்னமாய் மாற்றிவிட்டிருக்கிறது மனித தன்மைகளை.' வேதனையுடன் நினைத்தவனாக, பிளாட்பாரத்தில் கைநீட்டி பிச்சை கேட்பவனைக் கூடப் பார்க்கப் பயந்தவனாக தயாளன் ரமணனுடன் நடந்து கொண்டிருந்தான்.

# உருவகக் கதை

# பலம்

மிக உயரமாக வெகு நேர்த்தியுடன் கட்டப்பட்ட அந்தக் கோவில் தேர் கம்பீரமாக நின்றிருந்தது.

காற்றின் வேகத்தில் குப்பையில் கிடந்த தேங்காய்த்தும்பு ஒன்று தேரின் உச்சியில் போய் உட்கார்ந்தது. தான் மிகவும் உயரமாகி விட்டதாக நினைத்து மகிழ்ந்தது தும்பு.

ஆனால் தேருக்குக் கோபம் வந்து விட்டது. குப்பையிலிருந்து வந்த தேங்காய்த் தும்பு தன்மீது அமர்வதா? தும்பைப்பார்த்து வாய்க்கு வந்தபடி திட்டத் தொடங்கியது.

அவமானத்தால் குன்றிப் போய்த் தேரை விட்டு இறங்கிய தும்பு, "உன் கர்வத்தை அடக்குகிறேனா இல்லையா பார்?" என்று சவால் விட்டது. தேர் கேலியாகச் சிரித்தது.

தும்பு ஒரு வழிப் போக்கனிடம் நடந்ததையெல்லாம் சொல்லி, 'என்னைக் கட்டி அத்தேரை நீ இழுத்து, அதன் கர்வத்தை அடக்க உதவி செய்!' என்றது.




அந்த வழிப் போக்கன் அவ்வாறே இழுத்தான். தும்பு பட்டென்று அறுந்து விட்டது. தேர் கேலியாகச் சிரித்தது.

உடனே தும்பு, வழிப்போக்கனிடம் "என்னைப் போன்ற பல தும்புகளை ஒன்று சேர். வடக் கயிறாக மாற்று. பிறகு இழு தேரை!" என்று யோசனை கூறியது.

அவ்விதமே தயாரிக்கப்பட்ட வடக் கயிற்றின் உதவியுடன் தேர் நகர்த்தப்பட்டு, அதன் கர்வம் ஒடுக்கப்பட்டது.

தும்பு பலமற்றது. ஒன்றாகத் திரிக்கப் பட்ட தும்புகள் பலமானவை.

# பங்காளி

'காலில்களில் சக்கரங்களை பூட்டி ஓடினாலும், காலையில் ஓடுகின்ற நேரத்தைப் பிடிக்க முடியாது'

மனதிலே எண்ணிக் கொண்டவாறு, காரியாலயத்திற்குச் செல்லும் அவசரத்தில் வீட்டுப் பணிகளை நிறைவேற்றிக் கொண்டிருந்தாள் கௌரி. அம்மாவின் வழமையான 'கதாப் பிரசங்கம்' காலை இளம் வெயிலுடன் கலந்து கௌரியின் காதுகளில் வீழ்ந்து கொண்டிருந்தது.

"ஏண்டி புள்ள! நானும் சொல்லிச் சொல்லி அலுத்துப் போயிட்டுது! உன்ர இரண்டு அண்ணன்மாரும் ஒரே கேட்டுக் கொண்டிருக்காணுகள். அவனுகள் பாத்திருக்கிற மாப்பிளைகளில ஒருவனைப் பார்த்து முடிவு சொல்லிட்டு அவனுகளோட போய் வெளிநாட்டில இரண்டி!"

'அரைத்த மாவையே அரைக்கும்' அம்மாவின் வார்த்தைகளைப்பற்றி சிலாக்கியம் கொள்ளாது காரியாலயத்திற்கு புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

"என்ன கௌரி? மத்தியானம் சாப்பிடப் போகல்லயோ?"

'இந்தக் கிழமைக்குள் ஒரு முடிவுக்கு வர வேண்டும்' என தன் திருமணத்தைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்த அவளை உலுப்பிவிட்டான்,



அவளுடன் பணியாற்றும் ரமேஸ்!

தன்னில் ஒரு கண் ரமேசுக்கு இருக்கின்றதென கௌரிக்கு நன்கு தெரியும். அதற்கு அவளின் 'வெள்ளைத் தோல்' மட்டும் காரணமில்லை- கொழுத்த வெளிநாட்டுப் பணமும் தான்.

அர்த்தமுள்ள பார்வையுடன் ஒரு புன்னகையையும் ரமேசைப் பார்த்து உதிர்த்துவிட்டு மதிய போசனத்திற்காய் புறப்பட்டாள் கௌரி. திருமணத்தைப்பற்றி அவள் எடுத்த தீர்க்கமான முடிவு, அவள் முகத்தில் தெரிந்ததை கண்ட ரமேஸின் உள்ளம் ஆனந்தத்தால் துள்ளிக் கொண்டிருந்தது!.

இவையனைத்தையும் ஓரமாய் நின்று இரகசியமாய் இரசித்துக் கொண்டிருந்த அந்த அலுவலக 'பியோன்' செல்வத்தின் இதயத்தில் இலேசான பழைய நினைவுகளின் நெருடல்கள் நெருஞ்சியாய் குத்தி நின்றது.

★★★

"ஏண்டி! தலையால தெறிச்சவளே! உனக்கென்னடி குறைச்சல்? இப்புடி தலை குனிய வைச்சிட்டியடி. எத்தினையோ பேர் இருக்க, இந்த புள்ளக் காறனோட வந்து நிக்கிறியேடி! வெக்கமில்லை உனக்கு?"

இப்படி அம்மா கதறுவாள் என்று ஏற்கனவே கௌரிக்குத் தெரியும். அதற்கேற்றால் போல் அவள் கணவன் செல்வத்தையும் தயார் படுத்தியிருந்தான். என்ன செய்வது? ஒரு பாவமும் புரியாத செல்வத்தின் அந்தக் குழந்தை மட்டும் மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தது!

★★★

சொந்த ஊரில் அரசாங்க உத்தியோகம் பார்ப்பதென்பதில் ஒரு சுகம் உண்டுதான். செல்வம் மண்டூரில் இருந்து மட்டக்களப்பிற்கு வேலைக்கு சென்று கொண்டிருந்த காலம் அது.

**கனகசபை தேவகடாட்சம்**

இளம் மனைவியும் குழந்தையும் கொண்ட குடும்ப வாழ்வு, செல்வத்தை மகிழ்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு சென்றிருந்தது.

யார் கண்பட்டதோ?

ஆண்டவன் அப்படியொரு தண்டனையை, நாட்டின் பாதுகாவலர்களால் கொடுத்திருந்தான்.

ஒரு கணவன் எதைக் காணக் கூடாதோ அதை கண்டான் செல்வம். அவன் வேலைக்குச் சென்று திரும்பிய வேளை, அவன் மனைவியை பலாத்காரம் செய்து கொன்றும் விட்டார்கள்.

நீதியின் முன்னால் சாட்சி சொல்ல முன்னர் செல்வத்தை 'முடித்துவிடவேண்டும்' என முயன்றவர்களிலிருந்து தப்பித்துக் கொண்டு குழந்தையுடன் வர நேர்ந்தது. செல்வம் மாற்றலாகிய காரியாலயத்தில்தான் கௌரியும் பணியாற்றுகிறார்.

★★★

அம்மாவின் அந்த ஓயாத ஓலம், கௌரிக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இப்போ,

செல்வத்தை நோக்கி ஆக்ரோஷத்துடன் பார்த்தாள் அவள்.

வேகமாக செல்வத்தின் கரத்தைப்பற்றிய கௌரி, இயல்பாகவே வீட்டினுள் காலடி எடுத்துவைத்தாள்.

செல்வத்தின் குழந்தை, கௌரியை தாவித் தொற்றிக் கொண்டது!

'இது என் குழந்தை' என எண்ணிக் கொண்டவளாய், முத்தமிட்டவாறு, இந்நாட்டு அனர்த்தங்களின் பெறுபேறுகளுக்கு தன்னையும் ஒரு பங்காளியாய் மாற்றிக் கொண்டு இச் சமூகத்துடன் வெற்றி நடைபோட புறப்பட்டுவிட்டாள் கௌரி.


படிப்பகம்

# இரவு

தருவது
ரசிகன்

எல்லோருக்கும்
பகலில்தான்
கடிதம் வந்து சேரும்!

அவளுக்கோ
இரவே
கடிதமாக வந்து சேரும்!

இரவை
அவள் வாசிக்கிறாள்!

இரவை
அவள் நேசிக்கிறாள்!

இரவில்தான்
அவனது நினைவுகளிடம்
அவள் யாசிக்கிறாள்!

இரவில்தான்
அவன் பிரிவினால்
ஏற்பட்ட காயங்களை
அவள் யோசிக்கிறாள்!

இரவின் தனிமையில்
இதயக்கோயிலில் இருக்கும்
அவனை நோக்கி
அவள் பூசிக்கிறாள்!

இரவுதான் கடிதம்
வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு
அதில் நிறைய
செய்திகள் இருக்கின்றன!

இரவுதான் பூ
தினமும் மலரும்பூ!

அந்த பூ மலரும்போது
காதலர்கள்
தழுவிக் கொள்கிறார்கள்!

இரவுதான் திரை
இயற்கை தந்த திரை!

அந்த திரை மூடும்போது
காதலர்கள்
கூடிக் களிக்கிறார்கள்!

இரவுதான் மைதானம்
இருளான மைதானம்!

அந்த மைதானத்தின்
மடியில்தான்
மதன கலைகளை
காதலர் பயில்கிறார்கள்!
மன்மத விளையாட்டை
காதலர் ஆடுகிறார்கள்!

இரவுதான் தோழி;
இரகசியங்களை
வாங்கி வைத்துக்கொள்ளும்
யாருக்கும் சொல்லாது!

இரவுதான் காவலன்;
இணைசேரும் ஜோடிகளை
பாதுகாக்கும் காவலன்!



இலக்கிய நயம்

இரவுதான் போர்வை;
புகுந்தவர்களை
மூடிக் கொள்கிறது!

இரவுதான் தூதன்;
காதலர்களை
ஒன்று சேர்க்கிறது!

இரவுதான் சமாதான
தேவதை!
காதலர்களின் ஊடலை
மறக்கச் செய்கிறது!

இரவுதான் யுத்த
அரங்கம்!
காதலர்களை
இன்ப யுத்தத்தில்
இணைக்கும் அரங்கம்!

இரவுதான் சொர்க்கம்;
ஆணும், பெண்ணும்
தேகம் தேய
காணும் சொர்க்கம்!

இரவுதான் ஏணி;
இன்பத்தின் உச்சிக்கு
கொண்டு சென்றுவிடும்!

இரவுதான் ஊஞ்சல்;
மனதை
ஆடவைக்கிறது!

இரவுதான் பல்லக்கு;
ஏந்திக் கொள்கிறது!

இரவுதான் தொட்டில்;
தூங்க வைக்கிறது!

இத்தனை புகழாரம்
சூட்டப்படும் இரவுக்கு
அவள் இகழாரம்
சூட்டியதும் உண்டு!

அவன் இல்லாத
இரவு
கொடும் அரக்கன்!

அவன் இல்லாத
இரவு
முட் படுக்கை!

அவன் இல்லாத
இரவு
இரும்புத் திரை!

அவன் இல்லாத
இரவு
துன்பத்தின் தொட்டில்!

அவன் இல்லாத
இரவு
வழுக்குப் பாறை!

அவன் இல்லாத
இரவு
சூனியத்தின் மடி!

அவன் இல்லாத
இரவு
முதலையின் வாய்!

மொத்தத்தில்
அவன் இல்லாத
இரவு
நரகம்! பெருநரகம்!

ஒரு பொழுதே
இரண்டு வகையாக
மாறுவது விந்தை!

உறவுள்ள இரவு
சொர்க்கம்!

பிரிவுள்ள இரவு
நரகம்!

இந்த நரகம்
எப்போது
ஆரம்பமாகிறது?

காலையில்
அரும்பாய் தோன்றும்
காமம்
பகல் முழுவதும்
பேரரும்பாய் வளரும்.
மாலையில்தான்
அது மலராகும்!

மலரை மொய்க்க
வண்டு வராதபோது
நரகம் ஆரம்பமாகிறது!

அந்த மாலைப்பொழுதும்
மங்கிய இரவும்-கொலை
வாளைப் போன்று கொடிதாகும்!
பகையைப் போன்ற வரவாகும்!

**"காதலர் இல்வழி மாலை கொலைக் களத்து ஏதிலர் போல வரும்"**

*அதிகாரம்: 123, குறள்: 1224*

(ஸ்போர்ட்ஸ்)

## பந்து வீச்சு-குற்றச்சாட்டு



சர்வதேசக் கிரிக்கெட் கவுன்ஸிலின் (ஐ.சி.சி.) குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கிறார் பாகிஸ்தான் அணியின் வேகப் பந்து வீச்சாளர் சோஹைல் அக்தர். இவர் பந்தை எறிகிறார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டு பந்துவீச்சாளர்கள் மீது கூறப்படுவது ஒன்றும் புதிதல்ல. இதற்கு முன் பாகிஸ்தானின் இம்ரான்கான், வாஸிம் அக்ரம், இந்தியாவின் மனோஜ் பிரபாகர் ஆகிய வேகப்பந்து வீச்சாளர்கள் பந்தை எறிவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்கள்.

பின்னர் இவர்களது பந்துவீச்சை ஆராய்ந்து இவர்கள் எறியவில்லை என்று கூறப்பட்டது. இதன்பின் சுழற்பந்து வீச்சாளர்களான இந்தியாவின் ராஜேஷ் சௌகான், ஹர்பஜன் சிங், இலங்கையின் முத்தையா முரளீதரன், குமார தர்மசேன ஆகியோர்மீதும் இதே குற்றச்சாட்டுக் கூறப்பட்டது.

இப்போது குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அக்தர் மீது இதுவரை எந்த நடுவரும் இந்தப்பிரச்சனையை எழுப்பவில்லை. எனினும் மெல்ல மெல்ல இந்தப் பிரச்சனை சூடு பிடிக்கும் எனக் கருதப்படுகிறது.

இந்த மாதிரியான ஒரு சூழ்நிலை அமையுமானால் வளர்ந்து வரும் இளம் வீரர் அக்தரின் மனநிலையைப் பாதிக்கும். அத்துடன் இது பாகிஸ்தான் அணிக்கும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

பொதுவாகவே பந்தை எறிவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கு ஆசிய பந்து வீச்சாளர்களே ஆளாகின்றனர். ஆசிய வீரர்களின் வளர்ச்சியை முடக்கும் நோக்கமா இது என்று எண்ணத் தோன்றுகின்றது.

## தற்கொலை

உலகக் கோப்பை லீக் போட்டிகளில் இருந்து ஒருவாறு சுப்பர் சிக்ஸிற்குள் இந்தியா புகுந்துவிட்டது. இனி இந்தியா சுப்பர் சிக்ஸில் போராடி அரையிறுதிக்குள் நுழைந்து விடும் என்று இந்திய இரசிகர்கள் புளகாங்கிதம் அடைந்தனர்.

சுப்பர் சிக்ஸின் 3 போட்டிகளிலும் வென்றால்தான் அரையிறுதி செல்வது உறுதி என்ற நிலையில் இருந்தது இந்தியா. ஆனால் முதல் போட்டியிலேயே அவுஸ்திரேலியாவிடம் 77 ஓட்டங்களால் இந்தியா தோற்றுப் போனது.

இந்தச் சோகத்தைத் தாங்க முடியாத வாலிபர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார். இந்தியாவின் ஹிசார் என்ற இடத்தைச் சேர்ந்த 18 வயதான ஜெய்பால் என்பவரே தற்கொலை செய்து கொண்ட வாலிபர் ஆவார்.

அவுஸ்திரேலியாவுடன் நடந்த முதல் போட்டியில் இந்தியா வெற்றிபெறும் என்று தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தார் ஜெய்பால். ஆனால் இந்தியா தோற்றுப்போனதால் நேராகக் கடைக்குச் சென்று விஷம் வாங்கி உட்கொண்டு மரணமானார்.

## இறுதிப் போட்டி

இங்கிலாந்தில் தற்போது நடந்துவரும் 7வது உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டி இந்த நூற்றாண்டின் இறுதி உலகக் கிண்ணப் போட்டியாகும். அடுத்த உலகக் கோப்பைப் போட்டி 2003ம் ஆண்டில் நடைபெறப்போகிறது.

2003ம் ஆண்டில் நடைபெறும் 8வது உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியை நடத்த தென்னாபிரிக்கா தயாராகி வருகிறது.

இதற்காக, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் முன்னாள் நிர்வாக இயக்குநரும் தற்போதைய உலகக்கோப்பை செயற்குழுத் தலைவருமான அலி பாச்சர் தென்னாபிரிக்க விளையாட்டுத்துறை அமைச்சருடன் ஆலோசனை செய்து வருகிறார்.

இதுவரை முதல் மூன்று உலகக் கோப்பைப் போட்டிகளை இங்கிலாந்தும், 4வது உலகக் கோப்பைபோட்டியை இந்தியா-பாகிஸ்தானும், 5வது உ.கோ.போட்டியை அவுஸ்திரேலியா-நியூஸிலாந்தும் 6வது உலகக் கோப்பை போட்டியை இந்தியா-பாகிஸ்தான்-இலங்கையும் நடத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தியா பதில்கள்

**காஷ்மீர் பிரச்சனையில் இந்தியாவை ஆதரித்து அமெரிக்கா கருத்துக் கூறியுள்ளதே?**

ஜெ.ஜெயேந்திரன், கொழும்பு-09.

*பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடுவது என்பது இதுதான்!*

♠♣

**யாழ் குடாநாட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரும்பவில்லை என்று அரச அதிபர் கூறினாராமே?**

மு.லோகேஸ், யாழ்ப்பாணம்.

*அவர் பெயரில் உத்தியோகபூர்வமாக அப்படி அறிவிக்கப்படவில்லை!*

♠♣

**உலகக் கிண்ணப் போட்டியில் இம்முறை ஆட்ட நாயகன் யார்? ஊகித்துக் கூறவும்?**

எஸ். பவானி, வத்தளை.

*குளூஸ்னர்! அப்பப்பா என்னமாய் பிளந்து கட்டுகிறார்! பாகிஸ்தானுடன் இடம் பெற்ற போட்டியில் அணியை வெல்ல வைத்ததே அவர்தானே! ஒவ்வொரு பந்துக்கும் செம சாத்து!*

♠♣

**ஸிம்பாப்வே அணி உலகக் கிண்ணத்தை பெற்றாலும் ஆச்சரியமில்லை என்கிறார்களே!**

இ. தேவதாஸ், கனடா.

*ஸிம்பாப்வே அணி சிறப்பான அணி என்பதில் சந்தேகம் கிடையாது! அதேபோல இம்முறை உலகக் கிண்ணத்தை பெற அவர்களுக்கு வாய்ப்பில்லை என்பதிலும் எனக்கு சந்தேகம் இல்லை! பொறுத்திருந்து பாருங்கள்!*

♠♣

**இளையராஜா மீண்டும் முதலிடத்தைப் பிடிப்பாரா?**

ஆர். பரத்குமார், பதுளை.

*ஏ.ஆர்.ரகுமான்தான் தற்போதுவரை முதலிடத்தில் இருக்கிறார். கசட் விற்பனைப்படி ரகுமான், இளையராஜா, எஸ்.ஏ. ராஜ்குமார், தேவா என்று பட்டியலிடுகிறது தமிழகப் பத்திரிகைச் செய்தி!*

♠♣

**'சக்தி' நாடகத்தில் பானுப்பிரியாவின் உடலைக் காண்பித்தது எப்படி?**

ஏ. லதா, கொழும்பு-06.

*முன்னர் எப்போதோ எடுத்த பானுப்பிரியாவின் குளோசப் முகத்தைப் பயன்படுத்தி கிராபிக்ஸ் வித்தையால் சமாளித்திருந்தார்கள்!*

♠♣

**பெண்களைக் கிண்டல் செய்வது போல-அதாவது பெண்கள் இயலாதவர்கள், அலட்டல் பேர்வழிகள்போல வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் சிலர் கருத்துக்கள் கூறி வருகிறார்களே?**

எஸ். தேவிஸ்ரீ, கொழும்பு-07.

*கிணற்றுத் தவளைகள்! பெண்கள் எத்தனையோ சாதனைகள் படைத்துக் கொண்டிருக்க, இன்னமும் புழுத்துப்போன கிண்டலுடன் காலம் கடத்துகிறார்கள்.*

♠♣

**அறுவைகளில் இருந்து தப்பிக்கொள்ள ஒரு வழி கூறுங்கள்?**

பி. மதுவந்தி, கண்டி.

*பல வழிகள் உள்ளன. ஒரு சிறுவன் கையாண்ட வழியைப் பாருங்கள்:*

*பள்ளிக்கூட ஆண்டு விழாவில் ஒருவர் தொடர்ந்து வெகு நேரமாகப் பேசிக் கொண்டிருந்தார்.*

*மாணவர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர் அனைவரும் நெளியத் தொடங்கி விட்டனர்.*

*ஒரு சிறுவன் எழுந்து தலைமை ஆசிரியரிடம் மெதுவாகக் கேட்டான்: "நான் இவரது பேச்சை நிறுத்தட்டுமா?"*

*தலைமை ஆசிரியர் "எப்படி?" என்று ஆச்சரியமாகக் கேட்டார்.*

*சிறுவன் ஒரு காகிதத்தில் ஏதோ எழுதிக் கொண்டுபோய் மேடையில் பேசியவரிடம் கொடுத்தான். அதனைப் பிரித்துப் பார்த்த பேச்சாளருக்கு முகம் கோணலாகியது.*



லான்ஸ் குளூஸ்னர்

*"இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்" என்று அமர்ந்துவிட்டார்.*

*தலைமை ஆசிரியர் சிறுவனை அழைத்து, "அப்படி என்னதான் எழுதியிருந்தாய்?" என்று கேட்டார்.*

*அதற்கு சிறுவன் கூறினான்: "உங்கள் பேண்ட் ஸிப்பை சரியாகப் போடவில்லைப் போலிருக்கு என்று எழுதினேன்!"*

♠♣

**இலங்கையுடன் கங்குலி, திராவிட் ஜோடி ஆட்டம் எப்படி?**

எம். பௌசர், பாணந்துறை.

*விளாசல்! அவுஸ்திரேலியாவுடன் திருஷ்டி பரிகாரமாக கடாசல்! பொறுப்பற்ற ஆட்டத்தால் சுருண்டது கொடுமை!*

♠♣

**சிந்தியா! ஓட்டோகிராப்புக்கு தமிழ் என்ன?**

மா.முத்துராமன், நுவரெலியா.

*கையொப்ப ஏடு!*

♠♣



'பூப்பறிக்க வருகிறோம்' படத்தில் அஜய்-மாளவிகா

**மலருக்கு மலர் தாவும் வண்டுகளை திருத்த முடியாதா?**

எஸ்.கௌரி, மட்டக்களப்பு.

*தாமாகத் திருந்தினால்தான் உண்டு. ஒரு குட்டி தமாஷ்:*

*தேனிலவுக்கு வந்த கணவனும் மனைவியும் ஹொட்டலில் தங்கினார்கள். ஒருநாள் ஹொட்டல் முன்பகுதியில் நடந்து செல்லும்போது, இருவருக்கும் எதிரே இளம் பெண் ஒருவர் வந்தார். கணவனைப் பார்த்து சிரித்து "ஹலோ" சொல்லிவிட்டுப் போனாள்.*

*மனைவிக்கு கடும் கோபம். அறைக்கு வந்ததும் கணவனிடம்; "உங்களைப் பார்த்து பல்லைக் காட்டிவிட்டு போனாளே யாரவள்?" என்று கேட்டார்.*

*அதற்கு கணவன் சொன்னார்: "அதைப் பின்னர் யோசித்துக் கூறுகிறேன். முதலில், 'உங்களுடன் வந்தவள் யார்' என்று அவள் என்னைக் கேட்டால், என்ன சொல்வது என்று இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறேன்!"*

♠♣

**இடி அமீன் கதை இங்கும் பொருந்துமா?**

சி.ரங்கநாதன், திருமலை.

*தொப்பி யாருக்காவது அளவாக இருந்தால் போட்டு அழகுபார்த்துக் கொள்ளுங்களேன்!*

♠♣

**பிரசாந்த், விஜய் யார் முதலிடம்?**

யா.அகஸ்டின், மன்னார்.

*சமநிலையில் நிற்கிறார்கள்.*

♠♣

**படையப்பாவில் தங்களைக் கவர்ந்தது யார்?**

கா.வளர்மதி, வவுனியா.

*ரம்யா கிருஷ்ணன்! அந்த மிடுக்கு! அந்தத் துடுக்கு! வேறு யாருக்கும் வராதம்மா!*

♠♣

**சிந்தியா! மண்டையன் குழுவுக்கு ராசிக்தான் பொறுப்பாக இருந்தாராமே?**

வி.ஜீவா, மட்டுநகர்.

*தப்பான தகவல்! யாருமே அதற்குப் பொறுப்பாக இருக்கவில்லை! ஈ.பி.ஆர்.எல்.எஃப். செய்த கொலைகளைத்தான் 'மண்டையன் குழு' என்ற பெயரில் வெளிக்காட்டிக் கொண்டிருந்தனர். தனிக் குழுவாக இயங்கியதாக கற்பனை செய்து விடாதீர்கள்! மண்டையன் குழு பிரபலமாக அடிபட்டது யாழ்ப்பாணத்தில்தான்! அதன் பெயரில் கொலைகளை செய்வித்தவர் ராசிக் அல்ல, ராபிக்! அவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் மாவட்ட தளபதியாகவும், சுரேஸ் பிரேமச்சந்திரனின் வலது கையாகவும் இருந்தவர். தற்போது தமிழ்நாட்டில் ஒதுங்கி இருக்கிறார்.*

♠♣

**படையப்பாவின் பின்னர் நம் சிவாஜி நடிக்கும் அடுத்த படம் எது?**

சி.கணேசராஜ், மன்னார்.

*'பூப்பறிக்க வருகிறோம்'.*

♠♣

**மக்களை அணிதிரளுமாறு ஈ.பி.ஆர்.எல்.எஃப். கூறியுள்ளதே?**

எம்.முகுந்தன், வவுனியா.

*இவர்கள் கூறித்தான் மக்கள் அணிதிரள வேண்டுமாக்கும்! மக்கள் எப்போதோ தாமாக அணிதிரண்டு போராடி வருவது இவர்களுக்குத் தெரியாதா? யாழில் காணாமல் போனோர் உறவினர் முதற் கொண்டு, திருமலையில் கப்பல் பயணிகள், யாழில் மாணவர்கள் போராட்டம் எனப் பல போராட்டங்கள் நடந்ததை அறியாதவர்களா இவர்கள்? மக்கள் அணிதிரண்டு விட்டார்கள். இந்த கட்சிகளது கண்கள்தான் திறக்கவில்லை!*



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி


## புதிய ஆகமம் 04

ஆண்டவர் தமது திருக்குமாரனையே மனக்குலத்தை வழி நடத்துவதற்காக அனுப்பி வைத்தார். அத்தகைய தெய்வத் திருக்குமரனுக்கும் பலசோதனைகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இயேசுபிரான் வனத்தில் தனியான ஒரிடம் சென்று நாற்பது நாட்கள் தொடர்ந்து இரவும் பகலும் உணவு உறக்கம் எதுவுமின்றி நோன்பிருந்தார். இதனால் இறைவனின் கடாட்சத்தை மென்மேலும் பெற்றார். நோன்பிருந்து திரும்பிய இயேசுவுக்கு பசி எடுத்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கு சாத்தான் விரும்பியது.

இயேசுபிரானை அணுகிய சாத்தான், "நீர் ஆண்டவரின் திருக்குமாரரென்றால், உமது பசியைப் போக்க இதோ இந்தக் கற்களை அப்பங்களாக்கி உண்ணலாமே?" என்றது. உடனே இயேசுபிரான், "மனிதர் வெறும்

# அப்பாலே போ சாத்தானே!



இராஜகுமாரன்

அபபதத உண்டால் மட்டும் அவர்கள் வாழ்ந்துவிட முடியாது. கடவுளின் வாய்ச் சொல்லினாலும் மக்கள் வாழ்வார்கள்!' என்று மறை நூலில் கூறப்பட்டுள்ளதே!" என்று சாத்தானிடம் சுட்டிக்காட்டினார்.

இத்துடன் மட்டும் அந்தச் சாத்தான் இயேசுவை விட்டுவிடவில்லை. எருசலேமிலுள்ள ஆலயத்துக்கு அவரை அழைத்துச் சென்றது. அங்கே ஓர் உயரமான இடத்துக்கு இயேசுவை அழைத்துச் சென்றது. அங்கிருந்து கீழே பாயுமாறு இயேசுவைக் கேட்டது. "நீர் இறைமகனாக இருப்பதனால் உமக்கு எத்தகைய தீங்கோ, காயமோ ஏற்படாமல் தேவ தூதர்கள் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள்!" என்றது அந்தச் சாத்தான்.

சாத்தான் பக்கம் திரும்பிய இயேசு, "உனது கடவுளாகிய ஆண்டவரை நீ சோதிக்க முற்பட வேண்டாம்!" என்று கூறினார். அப்போதும் கூட சாத்தான் அவரை விட்டு அகலவில்லை.

அடுத்து ஓர் உயரமான மலையின்மீது இயேசுவை சாத்தான் அழைத்துச் சென்றது. அங்கிருந்து பார்க்கும்போது கீழே பல தேசங்கள் பரந்து கிடப்பதைப் பார்க்க முடிந்தது. அவற்றையெல்லாம் இயேசுவிடம் சுட்டிக் காட்டிய சாத்தான், "இவை அனைத்தையும் நான் உமக்குத் தருகிறேன். இதற்காக உம்மிடம் மிகச் சாதாரணமான ஒன்றினையே எதிர்பார்க்கிறேன். நெடுஞ்சாண் கிடையாக என் பாதங்களில் விழுந்து வணங்கினால் மட்டும் போதும்!" என்றது.

### அப்பாலே போ...!

இவ்வார்த்தைகள் இயேசு பெருமானுடைய அமைதியையே குலைத்துவிட்டது. "அப்பாலே போ சாத்தானே!" என்று தனது வலது கையை உயர்த்தி கூறினார். தன்னுடைய வித்தைகள் எதுவும் இந்தத் தெய்வத் திருவுருவின் முன் செல்லுபடியாகாது என்று கண்ட சாத்தான் அப்பால் சென்றது. அந்த அலகை அகல்வதற்கு முன்னர், இயேசு பிரான்: "உன்னுடைய ஆண்டவரை மட்டும் நீ வணங்கு! அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக!" என்று அறிவுரை பகர்ந்தார்.

இதற்கிடையில் ஏரோது மன்னனால் யோவான் கைது செய்யப்பட்டுவிட்டார் என்று கேள்வியுற்று மிகவும் வருந்தினார். தனது ஆதிக்கத்துக்கு மாறாக மற்றுமொரு தலைவன் தோன்றியுள்ளார் என்றும் அந்த மன்னர் மன்னனை வரவேற்க மக்கள் ஆயத்தமாக வேண்டும் என்று கூறி மக்களுக்கு ஞானஸ்நானம் செய்து வந்த யோவானை மன்னன் ஏரோது கைது செய்து சிறையிலடைத்திருந்தார்.

இயேசு அடுத்து கலிலியோ சென்றார். ஏரோது தனது பிறப்பிடமான நாசரேத்தில் தன் பெற்றோருடன் சில காலம் தங்கியிருந்தார்.

### தீர்க்க தரிசனங்கள்

'ஆண்டவருடைய திருக்குமாரன் பூமியில் அவதரித்து மனுக்குலத்தை மீட்டெடுப்பார்' என்ற தீர்க்கதரிசனத்தை இதற்கு முன் தோன்றிய பல இறைவாக்குரைஞர்கள் கூறியிருந்தனர். ஏசாயா என்ற இறைவாக்குரைஞரும் தனது தீர்க்கதரிசனங்களை எழுதிவைத்திருந்தார். ஒய்வு நாளன்று ஆலயத்தில் திரண்டிருந்த மக்களைப் பார்த்து பல உயர் கருத்துக்களைக் கூறினார் இயேசு,

அப்போது அவ்வாலயத்தில் பேணிப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த பேழை ஒன்றை ஆலயக் குரு கொண்டு வந்து இயேசு பிரானின் முன்வைத்தார். அப்பேழையினுள் இறைவாக்குரைஞர் ஏசாயாவின் தீர்க்கதரிசன வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்த சுருள் இருந்தது. அங்கு குழுமியிருந்த அனைவரும் கேட்டுக்கொண்டமைக்கு அமைய, இயேசு அதனை வாசித்தார்.

'ஆண்டவருடைய ஆவியானவர் என்னுள்ளே இருக்கிறார். ஏழை எளியவர்களுக்கு நற்செய்தியைக் கூறவும், அடிமைகளாகவிருப்பவர்களுக்கு விடுதலை அளிக்கவும், பார்வையற்றவர்களுக்குப் பார்வை அளிக்கவும் வல்லமையை எனக்கு ஆண்டவர் அருளியிருக்கிறார்' என்பன போன்ற ஏசாயாவின் வாக்கியங்களைப் படித்ததும் தான் மனிதனாக அவதரித்தமைக்கான காரணத்தைப் பூரணமாக இயேசு பிரான் அறிந்து கொண்டார்.

இந்த வாக்கியங்களை அடியொற்றி அங்கு திரண்டிருந்த மக்களிடம் சில அறிவுரைகளைக் கூறிய பின்னர் அங்கிருந்து புறப்பட எத்தனித்தார். ஆனால் அங்கிருந்த மக்களில் பலர், இயேசு பிரான் அங்கேயே மேலும் சில காலம் தங்கியிருந்து அற்புதங்களைச் செய்யவேண்டும் என்று கோரினார்கள். இதனை ஏற்க அவர் மறுத்துவிட்டார். "எந்தத் தீர்க்கதரிசியும் அவர் பிறந்த மண்ணில் மதிக்கப்படுவதில்லை. ஆகவே, என்னை வற்புறுத்தாமல் போக விடை தாருங்கள்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். இதனால் பலர் இயேசுவின் மீது கோபம் கொண்டனர்.

இயேசுவை ஒரு மலைமீது இழுத்துச் சென்று கீழே தள்ளிவிடுவதற்கும் சிலர் முற்பட்டனர். ஆனால் வேறு சிலர் அவரை விடுவித்து அவருடைய வழியே போக அனுமதித்தனர்.

கலிலியோவிலுள்ள வெவ்வேறு நகரங்களுக்கும் சென்ற இயேசு அங்குள்ள மக்களுக்கு அரிய போதனைகளைக் கூறினார். சில தீராத வியாதிக்காரர்களின் நோய்களை உடனடியாகவே நீக்கினார்.

இதன் பின்னர் செபுலோன் மற்றும் நப்தலி போன்ற நாடுகளுக்கும் இயேசு சென்றார்.

இதன் பின்னர் போகுமிடங்களிலெல்லாம் அவருடைய அரிய போதனைகளைக் கேட்க மக்கள் திரண்டனர். பின்னர் கப்பர்நாகும் என்ற இடத்தில் சில காலம் வாழ்ந்தார்.

### முதல் சீடர்கள்

கப்பர்நாகும் கடற்கரையை ஒட்டிய பகுதியாக இருந்தது. ஒரு நாள் கடற்கரை ஓரமாக நடந்து சென்ற இயேசு, கடலில் வலை வீசி மீன் பிடித்துக் கொண்டிருந்த இருவரைக் கண்டார். அவர்களில் ஒருவர் பேதுரு எனப்படும் சீமோன், அடுத்தவர் அவருடைய சகோதரரான அந்திரேயா. இருவரையும் பார்த்த இயேசுபிரான், அவர்களைத் தன்னிடம் வருமாறு அழைத்தார்.

அவர்கள் இருவரும் வந்ததும், "சகோதரர்களே! என்னுடன் வாருங்கள். உங்களை மனிதர்களைப் பிடிப்போராக்குகிறேன்!" என்றார். வழி தவறி, மனிதத்தை மறந்த மனிதர்களை நல்வழிப்படுத்தும் பணியில் அவர்களை ஈடுபடுத்தத் திருவுளம் கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பிடுவதாகவே அவ்வார்த்தை அமைந்தது.

சீமோனும் அந்திரேயாவுமே இயேசு பிரான் தெரிவு செய்த முதல் சீடர்களாவர்.

இயேசு பிரானின் போதனைகள் பற்றியும் தீராத வியாதிகளை அவர் உடனடியாகவே தீர்த்து வைக்கும் முறைகளைப் பற்றியும் பல நாடுகளிலும் தகவல்கள் பரவின. எருசலேம், யூதேயா, யோர்தான் மற்றும் யோர்தான் நதிக்கு அப்பாலுள்ள நாடுகள் பலவற்றிலிருந்தும் பெருந்திரளான மக்கள் இயேசு பிரான் போகுமிடங்களிலெல்லாம் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர்.

வாய் பேசமுடியாதவர்கள், பார்வை இழந்தவர்கள், தொழுநோயாளர்கள், கெட்ட ஆவிகளால் பீடிக்கப்பட்டவர்கள், புத்திபேதலித்தவர்கள், கைகால்கள் வழக்கமற்றவர்கள் போன்ற நோயாளிகளின் நோய்களை இயேசு பிரான் நீக்கி அருளினார்.

மக்கள் பெருங்கூட்டமாக வந்து திரண்டதும் அங்கிருந்த ஒரு குன்றின் மீது ஏறி நின்று அவர்களுக்கு நல்லுபதேசம் செய்தார்.

மத்தேயு, செபதேயுவின் குமாரர்களான யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரையும் இயேசு, தன்னைப் பின்பற்றி வருமாறு அழைத்தார். ஒருநாள் இரவு தன்னைப் பின்பற்றி வந்த அனைவரையும் விட்டுவிட்டு தனியாக ஒரிடத்திலிருந்த வண்ணம் ஆண்டவரைப் பிரார்த்தித்தார். நல்லெண்ணமும் நல்லொழுக்கமும் கொண்ட சிலரை அப்போஸ்தலர்களாகத் தான் நியமிக்கப் போவதாகவும் அத்தகைய தகுதிபடைத்தோரைத் தெரிவு செய்வதில் தனக்கு உதவுமாறு அப்போது ஆண்டவரிடம் வேண்டிக் கொண்டார்.

பேதுரு எனப்பட்ட சீமோன், அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பார்த்தலோமேயு, தோமா, மத்தேயு, அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, லேபேயு, கானானியனான சீமோன், யூதாஸ் காரியோத்து ஆகிய பன்னிரண்டு பேரையும் தனது சீடர்களாக இயேசு பெருமான் தேர்ந்தெடுத்தார்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அப்போஸ்தலர்களுடன் மலை மேலிருந்து கீழிறங்கி வந்தார். அங்கு பெரும் சமுத்திரம்போல் மக்கள் கூட்டம் காணப்பட்டது. அவர்களுள் பலதரப்பட்ட நோய் வாய்ப்பட்டவர்கள் அனேகர் இருந்தனர். இயேசுபிரானைக் கண்டதும் நோயாளிகள் பலரும் முண்டி அடித்துக் கொண்டு இயேசுவின் முன் சென்றனர். ஒவ்வொருவரும் தத்தமது நோய் துன்பங்களைப் பலமாகவே கூறிச் சப்தமிட்டு அழுதனர். இயேசு பிரான் அக்கூட்டத்துக்குள் புகுந்து, அனைவரையும் அமைதி காக்கும்படி கூறிக்கொண்டு ஒவ்வொரு நோயாளியையும் தொட்டுத் தடவிக் குணப்படுத்தினார்.

இயேசுபிரான் கப்பர் நாகூமில் இருந்த போது ஒரு நாள் சில யூதா மக்கள் அவரிடம் வந்தனர். அந்நகரிலிருந்த ரோம அதிகாரியின் வேலைக்காரன் கடும் நோயுற்றிருப்பதாகவும், அவனை எப்படியாவது குணப்படுத்தித் தருமாறு அந்த அதிகாரி கோருவதாகவும் அவர்கள் இயேசு பிரானிடம் கேட்டுக் கொண்டனர்.

அதிகாரி ரோமனாக இருந்த போதும், யூதாமக்கள்மீது அன்பு செலுத்தி, அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பவராக இருப்பதாகவும் அவர்கள் சொன்னார்கள். யூதாமக்கள் தங்கள் பிரார்த்தனைகளை முறையாக நடத்துவதற்கேற்ற ஆலயம் ஒன்றினையும் நிர்மாணித்துத் தந்திருப்பதாகவும் இயேசுவிடம் தெரிவித்தார்கள். இவை தவிர, தனது வேலைக்காரனிடத்தில் பேரன்பு கொண்டவராக இருப்பதாகவும், அவன் நோய் வாய்ப்பட்டமையினால் மிகவும் மனம் வருந்தியிருப்பதாகவும் கூறினார்கள்.

இவற்றைக் கேட்ட இயேசுபிரான், அந்த ரோம அதிகாரியின் கருணை உள்ளம் பற்றி சிந்தித்துக்கொண்டிருந்த அதே வேளை அந்த வேலைக்காரன் குணமடைந்துவிட்டான்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு.ஆ] 01 விடை:** ☛ காபிரியேல்.

**பரிசு பெறுவோர்:**

1. **க. பிரசாந்தி,** ரம்பட்டை-02, தம்பிலுவில்.
2. **பி.எஸ். மணியம்,** 122, மெல்லகொல்ல, இறத்தோட்டை.
3. **ச. கவிதா,** கோளாவில்-01, தீவுக்காலை, அக்கரைப்பற்று.
4. **செல்வன் கா. சிவரட்னம்,** 27/6, 5வது ஒழுங்கை, கொழும்பு-03.
5. **செல்வி யோ. ஜயந்தி,** மட்/உதயபுரம் தமிழ் வித்தியாலயம், பெரியகல்லாறு-03.

**திருமறை [பு.ஆ] 04** வினா :- இயேசுவால் முதலாவதாக தெரிவு செய்யப்பட்ட அப்போஸ்தலர்கள் இருவர் யார்?

ஜூன்.19 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை பு.ஆ.04 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

# இத்தாலி இந்தியா

சோனியாவோடு தி.மு.க. கூட்டு வைத்திருந்தால் கலைஞர் எப்படி பேசியிருப்பார்? கற்பனை செய்கிறார் கா.பூ.கந்தசாமியார்.



என் பத்தாண்டு கால ஆருயிர் நண்பர் ராஜீவ் காந்தியின் துணைவியார் சோனியா அவர்கள் பிரதமராகலாமா? என்பது பிரதம கேள்வியாக முன்வைக்கப்படுகிறது.

இத்தாலியானாலும், இந்தியாவேயானாலும் முதல் எழுத்து 'இ' என்பதை மறந்துவிட்டு, இந்தப் பொருத்தத்தை வெளியே தெரியாமல் புதைத்துவிட்டு, வேலையற்ற வீணர்கள் தொடுக்கும் வினா இது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழர்களது பண்பாடு. சகோதரி சோனியா விடயத்திலும் அந்த பண்ணைத்தான் பாடுகிறது கழகம்.

எங்கே பிறந்தார் என்று பார்த்தா என் நாற்பதாண்டு கால இனிய நண்பர் எம்.ஜி.ஆரை தமிழ் மக்கள் தங்க நாற்காலி கொடுத்து அமர வைத்தார்கள்.

ஏன், ஆட்சிக்கு வரத் துடிக்கும் ஜெயலலிதா அம்மையார் எங்கே பிறந்தார்? என்று பார்த்துத்தான் இங்கே முதலமைச்சராக்கி மூச்சுத் திணறினார்களா தமிழ் மக்கள்?

இத்தகைய காரணங்களால் உடன் பிறப்பே! உடனே புறப்படு. யாதும் ஊரே யாவரும் கேளிர். சோனியா சொல்வதை நீங்களும் கேளிர்! அவரையே பிரதமர் ஆக்குவோம் வாரீர்!

# அந்நியர் புகலாமோ?

பாரதிய ஜனதாவோடு கூட்டுச் சேர்ந்துள்ளதால், தற்போது என்ன பேசுவார் கலைஞர் கருணாநிதி?

அருமைச் சகோதரி சோனியா அவர்கள் எங்கு பிறந்தார் என்பது எமக்கு கவலையில்லை. இங்கு அவர் பிரதமராக முடியுமா என்பதைத்தான் எண்ணிப்பார்க்க வேண்டியிருக்கிறது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது தமிழர் பண்பாடு என்று கூறி, தமிழர் மதியை மயக்கி ஏய்க்கப் பார்க்கிறார்கள் சிலபேர்.

யாதும் நம் ஊரே என்று சொல்லப்படுகிறதே தவிர, அந்த ஊரிலுள்ள யாவரும் உன்னவர் என்று சொல்லப்படவில்லை என்பதை இலக்கிய அறிவு உள்ளவர்கள் அறிவார்கள்.

இத்தாலியை நம் ஊர் என்று வேண்டுமானால் நினைத்துக் கொள்ளலாமே தவிர, இத்தாலியப் பெண்மணியான சோனியாவை நம்மவர் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது.

இத்தாலி, இந்தியா இரண்டுக்கும் முதல் எழுத்து 'இ' என்று யாரோ கூறியதாக அறிகிறேன். முதல் எழுத்து ஒன்று என்ற காரணத்தால், நம் தலையெழுத்தை தாறுமாறாக எழுத அனுமதிக்கலாமா என்று எண்ணிப்பார்க்க வேண்டும்.

சோனியா, சோகம் இரண்டுக்கும் முதல் எழுத்து 'சோ'. ஆகவே அவர் பதவிக்கு வந்தால் நாடே சோகக் கடலாகிவிடும் என்று கூறினால், அதனை காங்கிரஸ் நண்பர்கள் காது கொடுத்து கேட்பார்களா?



ஆகவே! உடன்பிறப்பே! 'ஆயிரம் உண்டிங்கு ஜாதி, இதில் அந்நியர் வந்து புகல் என்ன நீதி?' என்று பாடிய தமிழ்க் கவி பாரதியின் வழியில் நின்று, சோனியா பிரதமராவதை தடுப்போம், அதற்காக தண்டவாளத்தில் படுக்க நேர்ந்தாலும் படுப்போம் என்று கூறிக்கொள்கிறேன்.

ம.தி.மு.க. தலைவர் வை.கோ.வுடன் கலைஞர் நேற்றுப் பகை. இன்று கூட்டு. நாளை..? அதற்கேற்ப கா.பூ.கந்சாமியார் தயாரித்த பேச்சு?



### நேற்று

வை.கோ.கட்சியை விட்டு போனதால் யாதொரு நஷ்டமும் இல்லை. காரிலே ஒரு சக்கரம் காற்றும் போனால் கழற்றி வைத்து விட்டு வேறு சக்கரத்தை மாட்டிக் கொள்கிறோம். வை.கோ. காற்றுப் போன சக்கரம்.

### இன்று

என் போர் வாள் என்று என்னால் அழைக்கப்பட்டவர் என் தம்பி வை.கோ! கழகத்தில் போருக்கு இடமில்லை என்பதால், அந்த வாள் தனியாகப் போயிருக்கலாம். அதற்காக என் கையில் இந்த வாள் இருந்தது என்பது இல்லையென்றாகிவிடாது. இன்று நெருக்கடியான நேரத்திலே மறுபடி என் கைக்கு திரும்பியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கும்போது, "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தனர். இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே' என்று புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் பாடிய பாடல் வரிகள்தான் என்னை நாடி வருகின்றன.

### நாளை?

வை.கோ.போர்வாள் என்பதால் அல்ல, முனை மங்கிய வாள் என்பதால், சென்ற தேர்தலில் எமது பட்டறையில் தன்னை சாணை பிடித்துக்கொள்ள தானாக தேடி வந்ததே தவிர, நாமாக தேடிப் போகவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.




காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331



## வீச்சு

அடம் டேல்: அவுஸ்திரேலிய அணியின் சிறந்த பந்து வீச்சாளர். 31 வயது. அவுஸ்திரேலியாவில் குவின்ஸ்லாந்து மாநிலத்தைச் சேர்ந்தவர்.

இங்கிலாந்தின் கால நிலைக்கு ஏற்ப விளையாடுவதில் தேர்ச்சி பெற்றவர். எனினும் இவரை அவுஸ்திரேலிய அணி சரியாகப் பயன்படுத்துவதில்லை என்ற குறை இருக்கிறது.

வலது கை மிதவேகப் பந்துவீச்சாளரான அடம் டேல் உ.கி. போட்டிக்கு முன்னர் 24 போட்டிகளில் விளையாடி இருக்கிறார். 27 விக்கெட்டுக்களை கைப்பற்றியிருக்கிறார்.

18 ஓட்டங்கள் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களைச் சரித்ததே இவரது சிறப்பான பந்துவீச்சு.

உலகக் கிண்ணப் போட்டியில் விக்கெட்டுக்களை குறிவைக்க ஆவலோடு காத்திருக்கிறார். அணியில் இருந்தாலும் இவரை அதிகம் உபயோகிக்காது இருக்கிறார் கப்டன் ஸ்ரீவ் வோவ். இம்முறை உலகக் கிண்ணப்போட்டிதான் இவர் பங்கு கொள்ளும் கடைசி உ.கி. போட்டியாக இருக்கும்.

மட்டையோடு காட்சிதருபவர் சிம்பாப்வே அணியின் சகலதுறை ஆட்டக்காரரான நீல் ஜோன்சன். 29 வயதான இளம் வீரர். ஆக்ரோஷமான துடுப்பாட்டக்காரர். 14 போட்டிகளில் ஆடி 500 ஓட்டங்களை குவித்திருந்தார். அதிக பட்சம் 103. இரண்டு சதங்கள். இரண்டு அரைச்சதங்கள். 9 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தார். (இது உ.கி.போ. முன்பு)

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக லீக்போட்டியில் 76ஓட்டங்களை குவித்து, மூன்று விக்கெட்டுக்களை கவிழ்த்து வெற்றிக்கு வழிவகுத்தார்.

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

## நம்பிக்கை



## பலம்



தென்னாபிரிக்க அணியின் நம்பிக்கைக்குரிய பந்து வீச்சாளர் எதிரணியின் விக்கெட்டுக்களை வேட்டையாடி, அணிக்கு தெம்பு தருபவர்.

அலன் டொனால்ட்டுக்கு 33 வயது என்றால் நம்பமுடியாதுதான். அந்தளவுக்கு உடலை கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறார்.

விக்கெட்டுக்களை வேட்டையாடும் தெளிவு, கழிவுகள் அத்துப்படி. இம்முறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றத் துடிக்கும் தென்னாபிரிக்க அணிக்கு இந்த விக்கெட் வேட்டைக்காரரும் கை கொடுப்பார்.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்னர் 112 போட்டிகளில் விளையாடி 190 விக்கெட்டுக்களை வேட்டையாடியிருந்தார். சிறப்பான பந்துவீச்சு 6/23.

தென்னாபிரிக்க தேசிய அணியில் மட்டுமன்றி உள்ளூர் அணிகளிலும் விளையாடி வருகிறார். இங்கிலாந்தில் உள்ள வோர்விக்ஷயர் அணியில் கொளுத்த சம்பளம் வாங்கிக் கொண்டு விளையாடி வருகிறார்.

இந்த அணிக்காக இவ்வருடத்தில் 916 விக்கெட்டுக்களை வேட்டையாடினார்.

அலன் டொனால்ட்டுக்கு சச்சின் டெண்டுல்கர், சனத் ஜெயசூரியா போன்ற துடுப்பாட்ட வீரர்களை பிடிக்கும்.



## வேட்டை

ஹன்ஸி குரோன்ஞ்: தென்னாபிரிக்க அணியின் துடிப்பான கப்டன் சகலதுறை ஆட்டக்காரர்.

வலது கை துடுப்பாட்ட வீரர். மிதவேகப் பந்து வீச்சாளர். சிறந்த பந்து தடுப்பாளர்.

இம்முறை உ.கி.போ. முன்னர் 159 போட்டிகளில் விளையாடி 4835 ஓட்டங்களை குவித்திருந்தார். அதில் இரண்டு சதங்களும், 34 அரைச்சதங்களும் அடங்கும். அதிகபட்சம் 112. கேட்சுகள் 61 பிடித்துள்ளார். பந்து வீச்சில் 101 விக்கெட்டுக்களை சாய்த்திருந்தார். இவரது சிறப்பான பந்து வீச்சு: 5/32.

உலகக் கிண்ணப் போட்டிகளில் இம்முறை களம் புகுந்துள்ள கப்டன்களில் சிறந்தவர். அனுபவம் நிறைய சேகரித்து வைத்திருக்கிறார்.

உலகக் கிண்ணத்தை இம்முறை கைப்பற்றியே தீருவது என்று சூளுரைத்துள்ளார். சிறப்பாக விளையாடிவிட்டு இறுதிப் போட்டியில் கோட்டை விடுபவர்கள் என்ற விமர்சனம் இருக்கிறது.

அதனைப் பொய்யாக்குவதற்கு இம்முறை கப்டனும், அணியும் சளையாது போராட வேண்டியிருக்கும்.



## தளர்வு

சயீட் அன்வர்: பாகிஸ்தான் அணியின் தூண்களில் ஒருவர். பலமான தூண்.

ஆரம்ப ஆட்டக்காரராக களம் இறங்கி ஓட்டங்களை குவித்து, எதிரணியை மலைக்க வைப்பவர். 1997இல் இந்தியாவுக்கு எதிராக 194 ஓட்டங்களை குவித்து உலக சாதனை படைத்தவர். 15 சதங்கள் அடித்திருக்கிறார். 30 அரைச்சதங்கள்.

அடிக்கடி சுகவீனம் ஏற்படுவதும், காயம் ஏற்படுவதும் பல போட்டிகளில் ஆட முடியாமல் செய்துவிடுகிறது.

இம்முறை உலகக் கிண்ணப் போட்டியில் லீக் போட்டிகளில் சயீட் அன்வர் எதிர்பார்த்தளவு ஆடாதது ரசிகர்களுக்கு ஏமாற்றம். இனி வரும் ஆட்டங்களில் பிரகாசிப்பார் என்று எதிர்பார்த்தனர். 31 வயதான சயீட் அன்வர் அடுத்த உலகக் கிண்ணப் போட்டியிலும் பங்குகொள்ளக்கூடும்.

இம்முறை உ.கி. போட்டிக்கு முன்பாக 170 போட்டிகளில் களம் புகுந்து 6172 ஓட்டங்களை குவித்திருந்தார். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக சதங்கள் குவித்த வீரர்கள் வரிசையில் மூன்றாவது இடத்தில் இருக்கிறார்.

உலகக் கிண்ணத்துக்கு குறிவைத்து சிலிர்த்து நிற்கும் பாகிஸ்தான் அணிக்கு சயீட் அன்வரும் நம்பிக்கை நட்சத்திரம்.

அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில்
'கார்த்திகன் கோல் டெலிபோன் காட்'
இலங்கைக்கு ஒரு நிமிடத்திற்கு 56 சதம் மட்டும்!

## 1 வது பிறந்த நாள் வாழ்த்து



கோண்டாவில் குமர கோட்டம். தென்புலோலியைப் பிறப்பிடமாகக் கொண்ட, சிவலிங்கம்-ஷாந்தி தம்பதியினரின் செல்வப் புதல்வன் பிரஷீத் தனது முதலாவது பிறந்த நாளை Swiss Solothurn (Gerlafingen) உள்ள தமதில்லத்தில் 13.06.99 அன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, கனடா அப்பப்பா, அப்பம்மா, மட்டக்களப்பு அம்மப்பா, அம்மம்மா, கணேஷ், ஷங்கர், மாமாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பா, சித்தி, மச்சான்மார், மச்சாள் மார், அண்ணாமார், அக்கா, மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும்

செல்வன் பிரஷீத் சிவலிங்கம் - 13.06.99

இனிய மகன் பிரஷீத்தை இறைவன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். தகவல்-அப்பா சிவலிங்கம் (லிங்கம்) சொலத்துரன் (சுவிஸ்). T.P.032-675,61,78



படிப்பகம்

இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் 29, வெல்பாத, நாவலையில் உள்ள சமனல அச்சகத்தில் ஜூன் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.